**ம.அ.4.ந.க.எண்.பி3/ 02552 /2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 14.8.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.450/2015 **பொருள் எண்.01**

**மண்டலம்–4 – பகுதி–9, வார்டு–38ல் உள்ள ரயில்வே கடவு எண்.2A அருகில் உள்ள இரயில்வே துறைக்கு சொந்தமான இடத்தில் பூங்கா அமைக்க நிர்வாக அனுமதியும் மற்றும் இப்பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதி**

மண்டலம்–4, பகுதி–9, கோட்டம்–38குட்பட்ட தண்டையார்பேட்டை இரயில்வே ஸ்டேஷன் அருகாமையில் இரயில்வே லைனை ஒட்டி (TNP – KOK Line) நேரு நகர் மெயின் வீதியில் நீண்ட காலமாக புல்லும் புதருமாகவும் மழை காலங்களில் தண்ணீர் தேங்கி குட்டையாகவும் சுகாதாரமற்ற முறையில் பாம்பு மற்றும் கொசு தொல்லையினால் மலேரியா, டெங்கு காய்ச்சல் நோய்களினால் பொதுமக்கள்அவதிப்படுகிறார்கள். மேலும் இப்பகுதி முழுவதும் ஆக்கிரமிப்புகள் அதிகமாக உள்ளது. குடோன்கள், மீன்விற்பனை செய்வது, மாடுகளை கட்டி ஆக்கிரமிப்பு செய்து வருகின்றனர்.

தண்டையார்பேட்டை கடவு எண். LC No-2 km KOK / 2A அருகில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு அந்த இடத்தினை சென்னை மாநகராட்சியால் பூங்காவாக மாற்றி பொதுமக்கள் பயன் பாட்டிற்கு ஏதுவாக அனுமதி வழங்குமாறு கோரப்பட்டது. இரயில்வே துறைக்கு சொந்தமான 3318 சதுரமீட்டர் பரப்பளவு உள்ள இடத்தினை பூங்காவாக மாற்றி அமைக்க அனுமதி பெறப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தண்டையார்பேட்டை கடவு எண்.2A அருகில் உள்ள 3318 சதுரமீட்டர் பரப்பளவு உள்ள இடத்தினை கோட்டம் – 38, பகுதி – 9, மண்டலம் – 4 நேருநகர் பிரதான சாலையில் இருப்பு பாதையை ஒட்டியுள்ள இரயில்வே துறைக்கு சொந்தமான காலி இடத்தில் சென்னை மாநகராட்சி மூலம் பூங்கா அமைக்க அனுமதி பெற 2015 – 2016 நிதியாண்டில் பூங்கா அமைக்க 2014–15ஆம் ஆண்டு விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட ரூ.97,76,000/–ற்கான (ரூபாய் தொண்ணூற்று ஏழு இலட்சத்து எழுபத்து ஆறாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கு வார்டுகுழு–4ன் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே,

1. கோட்டம் – 38, பகுதி – 9, மண்டலம் – 4 நேருநகர் பிரதான சாலையில் இருப்புபாதையை ஒட்டியுள்ள இரயில்வே துறைக்கு சொந்தமான காலி இடத்தில் உள்ள 3318 சதுர மீட்டர் ஒட்டியுள்ள பகுதியை பூங்காவாக அமைத்திடவும்.
2. பூங்காவாக அமைக்க மதிப்பீடு தொகை ரூ.97,76,000/– (ரூபாய் தொண்ணூற்று ஏழு இலட்சத்து எழுபத்து ஆறாயிரம் மட்டும்)ற்கு 2015 – 16 நிதியாண்டில் 2014 – 2015 விலைவிகிதத்தின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறவும்.
3. 2015 – 16 ஆம் ஆண்டின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெறவும்
4. மேற்கண்ட பணிக்கான அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இப்பணி அனுபவம் உள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடம் இருந்து e–tenter மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரவும்.

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு திட்ட மதிப்பீடு (மற்றும்) நிர்வாக அனுமதி பெற நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "20.08.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 208/2015, நாள்.20.08.2015ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> "21.08.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.237/2015, நாள்.21.08.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**க.து.ந.க.எண்.அ1/ 7284/2015**

**துணை ஆணையர்(கல்வி) அவர்களின் 18.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.451/2015 **பொருள் எண்.02**

**கல்வித்துறை – 2015–2016ஆம் கல்வி ஆண்டில் டீச் பார் இந்தியா (Teach for India) நிறுவனத்தின் 101 Fellows மூலம் 32 சென்னைப் பள்ளிகளில் சிறப்பு வகுப்புப் பாடங்கள் நடத்த நிதி ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதி**

டீச் பார் இந்தியா அமைப்பின் கீழ் கல்விக்கான நிகழ்ச்சிகளை நடத்த Teach to Lead என்ற அமைப்பு பாம்பே பப்ளிக் டிரஸ்டின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி நமது இந்திய தேசத்தில் கல்வியில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் களைய பல்கலைக் கழகங்கள், ஐஐடி மற்றும் ஐஐஎம் போன்றவற்றிலிருந்து படித்தவர்களை தேர்ந்தெடுத்து சமூகத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள ஏழை மாணவர்களுக்கு கூடுதல் கல்வி சேவை அளிக்கவும், மேலும் சென்னை பள்ளிகளில் பணியாற்றும் பள்ளி ஆசிரியர்களுக்கு உதவி புரிவதற்கும் டீச் பார் இந்தியா (Teach for India) நிறுவனம் செயல்பட்டு வருகின்றது.

டீச் பார் இந்தியா (Teach for India) நிறுவனம் சென்னை மாநகராட்சியின் கீழ் உள்ள சென்னை பள்ளிகளில் ஜூன் 2012 முதல் பணியாற்றி வருகிறது. இதற்கு சென்னை மாநகராட்சி மற்றும் டீச் பார் இந்தியா (Teach for India) நிறுவனத்திற்கு இடையே 28.08.2014 அன்று உடன்படிக்கை ஏற்பட்டது. டீச் பார் இந்தியா (Teach for India) நிறுவனம் கல்விக்கான திட்டத்தை வடிவமைத்து அதற்குத் தேவையான அதிக கல்வி உபகரணங்களை பயன்படுத்தி குறைந்த வருமானமுள்ள மாணவ சமூகத்திற்கு ஆங்கிலப் பாட படிப்புகளை சென்னை பள்ளிகளின் ஒத்துழைப்புடன் ஆங்கிலவழி (English Medium) கல்வி முறையில் பாடத்தை நடத்தி அதற்கான கல்வித் தரத்தை உயர்த்தி வருகின்றது. அதன்படி சென்னை பள்ளிகளில் உயர்தரமான கல்வியினை மாணவர்களுக்கு அளிக்கும் ஆர்வத்துடன் செயல்பட்டு வருகின்றது. டீச் பார் இந்தியா (Teach for India) 2014–2015ஆம் கல்வியாண்டில் 71 Fellowsகளை நியமித்து 25 சென்னை பள்ளிகளுக்கு தேவையான கூடுதல் கல்வி வளங்களை உருவாக்கி கடந்த காலங்களில் செயல்பட்டு வந்தது.

**கீழ்கண்ட டீச் பார் இந்தியா (Teach for India) நிறுவனம் ஃபெல்லோ ஷிப் (Fellowship) நிகழ்ச்சிகள் மூலம் 2012 முதல் 2015 வரை சிறப்பு பாட திட்டங்களை நிறைவு செய்யப்பட்ட சாதனைகள்.**

1. டீச் பார் இந்தியா (Teach for India) 2012 ஆம் ஆண்டில் 23 வகுப்புகளில் துவங்கி தற்சமயம் 95 வகுப்புகளாக விரிவு அடைந்துள்ளது.
2. 2012 ஆம் ஆண்டில் டீச் பார் இந்தியா ஒரு விரிவான ஆசிரியர் மதிப்பீடு என்ற ஆய்வு முறையை பள்ளிகளில் மாணவர்களுக்கு தேர்ச்சி அடையும் கொள்கைகள் கொண்ட மன அமைப்பை கல்வியிலும் அணுகுமுறை மற்றும் அதற்கான வெளிப்பாடுகள் என்ற ஒரு முழுமையான திட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றது.
3. டீச் பார் இந்தியா, சமச்சீர் கல்வி முறையை அதனுடைய பாடத்திட்டத்துடன் இணைந்து பள்ளிகளில் வகுப்புகள் நடத்தி வருகின்றது.
4. டீச் பார் இந்தியாவின் Fellowship Program 2014 ஆம் ஆண்டில் தேர்ச்சி பெற்ற 85 முன்னாள் Fellowsகள் கல்வி சம்பந்தமாக தமிழ்நாட்டிலும் மற்றும் இந்தியா முழுவதிலும் கல்விச் சம்பந்தமான பணிகளை செய்து வருகின்றது.
5. 2012ஆம் ஆண்டு முதல் இன்றுவரை 20–க்கும் மேற்பட்ட "Be the Change Projects" திட்டங்களை செயல்படுத்திய பள்ளிகளிலும் அதனைச் சார்ந்த சமூகத்திலும் செயல்படுத்தி இருக்கிறார்கள்.
6. டீச் பார் இந்தியா வகுப்புகளில் படிக்கும் குழந்தைகளின் வளர்ச்சி சராசரியான 0.96 என்ற நிலை என்று கணிக்கப்பட்டுள்ளது.
7. 2014–15ஆம் ஆண்டில் டீச் பார் இந்தியா வகுப்புகளில் 6ஆம் வகுப்பு படிக்கும் குழந்தைகளின் வளர்ச்சி சராசரியாக 1.17 நிலை என்று கணிக்கப்பட்டுள்ளது. கணக்கு பாடத்தில் குழந்தைகள் சராசரி மதிப்பீட்டில் 29% வளர்ச்சி தெரிகிறது.

8. டீச் பார் இந்தியா சென்னை பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் பங்கேற்ற ஐந்து மாநாடுகளை முன்னின்று நடத்தியது. அதன் மூலம் சென்னை பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களை ஒன்று சேர்த்து டீச் பார் இந்தியாவுடன் கூட்டுப் பங்காற்றுவதன் மூலம் இருதரப்பு செயல்பாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட முடியும் என்று அறிய முடிந்தது.
9. 2014–15 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சராசரியாக வகுப்பறைகளில் குழந்தைகளின் சேர்க்கை 20% உயர்வு கண்டுள்ளது என்று அறிய முடிகிறது.
10. சென்னை தொடக்கப் பள்ளி, புலியூர் பள்ளியில் டீச் பார் இந்தியாவின் Fellowsகள் மற்றும் சென்னை பள்ளி ஆசிரியர்கள் கூட்டு கல்விப் பணி என்பது இரு வகுப்புகளாக இருந்தது. தற்போது மற்ற சென்னை பள்ளிகளிலும் சேர்த்து 20 வகுப்புகளாக விரிவடைந்துள்ளது.
11. கூட்டு பயில்விக்கம் வகுப்புகளில் 2014–15ஆம் ஆண்டில் சராசரியாக மாணவர்கள் கணக்கு பாடத்தில் 42% அதிக மதிப்பீடுகள் முன்னேற்றம் அடைந்துள்ளன.
12. 2014–15ஆம் ஆண்டில் டீச் பார் இந்தியா Fellowsகளின் வகுப்பு கற்பிக்கும் முறையில் குழந்தைகளும் தேசிய அளவில் நடைபெற்ற "Design for change (DFC)" போட்டியில் பங்கேற்றனர். அந்த போட்டியில் அகில இந்திய அளவில் 24 மாநிலங்களிலிருந்து 2000 மாணவர்கள் பங்கெடுத்தனர். அதில் முதல் நூறு மாணவர்களில் 4 சென்னை பள்ளி மாணவர்கள் வெற்றி பெற்று டீச் பார் இந்தியா Fellows அஹமதாபாத் நகரத்தில் நடைபெற்ற "I can awards" நிகழ்ச்சியிலும் மற்றும் அதனுடன் கூடிய 22.09.2014 ஆம் தேதி நடைபெற்ற ஒரு நாள் கருத்தரங்கிலும் பங்கேற்கவும் வாய்ப்பு அளிக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டது.
13. டீச் பார் இந்தியா "International Institute of Prague" என்ற கல்வி நிறுவனத்தின் தலைமை ஆசிரியர்களுடன் 2014–2015ல் "School Leadership" என்ற தலைப்பில் ஒரு கூட்டம் நடத்தியது. அதில் 35 சென்னைப்பள்ளி தலைமை ஆசிரியர்களும் பங்கேற்றனர்.

**கீழ்கண்ட பள்ளிகளில் 2015–2016 ஆம் கல்வி ஆண்டில் டீச் பார் இந்தியா (Teach For India) Fellows பணியாற்றி வருகின்ற விபரம்**

| வ.எண் | பள்ளிகளின் பெயர்கள் | வகுப்புகள் | Fellowsகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | செ.தொ.பள்ளி, நியூ மார்க்கெட் பார்ம் | 3 | 2 |
| 2. | செ.தொ.பள்ளி, டி.எச். ரோடு | 3,4 | 5 |
| 3. | செ.தொ.பள்ளி,சி.பி.ரோடு | 3,4 | 4 |
| 4. | செ.தொ.பள்ளி, கோயம்பேடு | 3,5,4 | 5 |
| 5. | செ.தொ.பள்ளி, மெக்னிக்கல்ஸ் ரோடு | 2,3 | 2 |
| 6. | செ.தொ.பள்ளி, ஜோன்ஸ் ரோடு | 2 | 5 |
| 7. | செ.தொ.பள்ளி, கோட்டூர் | 3,4 | 4 |
| 8. | செ.தொ.பள்ளி, புலியூர் | 3,4 | 4 |
| 9. | செ.தொ.பள்ளி, காம்தார் நகர் | 3,4,5 | 4 |
| 10. | செ.தொ.பள்ளி, டி.வி. சாமி | 2,3 | 4 |
| 11. | செ.தொ.பள்ளி, கொய்யாதோப்பு | 5,2 | 2 |
| 12. | செ.தொ.பள்ளி, ஈஸ்வரன் கோயில் | 4,5 | 2 |
| 13. | செ.தொ.பள்ளி, கண்ணாம்மா பேட்டை | 5,4,2 | 4 |
| 14. | செ.தொ.பள்ளி, அரங்கராஜபுரம் | 2,4 | 2 |
| 15. | செ.தொ.பள்ளி, தரமணி | 3,4,5 | 8 |
| 16. | செ.தொ.பள்ளி, திருவான்மியூர் | 2,3 | 2 |
| 17. | செ.தொ.பள்ளி, வேளச்சேரி | 2,3 | 4 |
| 18. | செ.ந.நி.பள்ளி, புதுமனைகுப்பம் | 2 | 2 |
| 19. | செ.ந.நி.பள்ளி, எம்.எம்.டி.எ–1 | 2,3 | 3 |
| 20. | செ.ந.நி.பள்ளி, அரும்பாக்கம் | 3,4 | 4 |
| 21. | செ.ந.நி.பள்ளி, சஞ்சீவிராயன் | 2,3 | 3 |
| 22. | செ.ந.நி.பள்ளி, எம்.ஜி.ஆர் நகர் | 3 | 4 |

| | | | |
|---|---|---|---|
| 23. | செ.ஆ.உ.நி.பள்ளி,காம்தார் நகர் | 6 | 1 |
| 24. | செ.பெ.உ.நி.பள்ளி, ஜோன்ஸ் ரோடு | 6 | 2 |
| 25. | செ.ஆ.உ.நி.பள்ளி,ஜோன்ஸ் ரோடு | 6 | 3 |
| 26. | செ.உ.நி.பள்ளி,கொய்யாதோப்பு | 6 | 1 |
| 27. | செ.உ.நி.பள்ளி,நியூ மார்கெட் பார்ம் | 6,7 | 2 |
| 28. | செ.பெ.உ.நி.பள்ளி, காம்தார் நகர் | 6,7 | 3 |
| 29. | செ.உ.நி.பள்ளி,மெக்னிக்ஸ் ரோடு | 6,7 | 2 |
| 30. | செ.உ.நி.பள்ளி,கோட்டூர் | 6,7 | 3 |
| 31. | செ.உ.நி.பள்ளி,திருவான்மியூர் | 6,7 | 3 |
| 32. | செ.உ.நி.பள்ளி,அரங்கராஜபுரம் | 6,7 | 2 |
| | மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை | | 101 |

மேற்கண்ட அட்டவணையின்படி Fellowship Program-ல் 101 Fellowsகளை நியமித்து 3000 மாணவர்களுக்கு கல்வி புகட்ட ஆண்டுக்கு மொத்தச் செலவு ரூ.3,56,96,632/–(ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்தாறு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து அறுநூற்று முப்பத்திரண்டு மட்டும்) செலவினம் மேற்கொள்ளப்படும் என உத்தேசிக்கப்பட்டு இந்த திட்டத்தில் தங்கும்வசதி, உதவித் தொகை, திட்ட மேலாளர் ஆதரவு, பயிற்சி மற்றும் சேர்ப்பு/தேர்வு ஆகிய எல்லாச் செலவுகளும் கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| Fellowsகளுக்கு ஆகும் செலவினம் | மாதம் ஒன்றிற்கு ஆகும் செலவுத் தொகை | ஒரு ஆண்டிற்கு ஆகும் செலவுத் தொகை |
|---|---|---|
| Fellow உதவித் தொகை | ரூ.17,500/– | ரூ.2,10,000/– |
| தங்குவதற்கான உதவித் தொகை | ரூ.7,000/– | ரூ,84,000/– |
| திட்ட மேலாளர் உதவி/பயிற்சி | ரூ.3000/– | ரூ.36,000/– |
| பணி நியமித்தல்/ தேர்ந்தெடுத்தல் | | ரூ,23,432/– |
| ஒரு Fellow க்கான செலவினத் தொகை | | ரூ.3,53,432/– |
| 101 Fellowsகளுக்கான செலவினத் தொகை | | ரூ.3,56,96,632/– |

**செலவினம் மேற்கொள்வதற்கான பட்டியல்**

| மாதம் | மாதாந்திர செலவு (ரூபாயில்) | டீச் பார் இந்தியாவினால் வழங்கப்படும் நிதி (ரூபாயில்) | சென்னை மாநகராட்சியால் வழங்கப்படும் நிதி (ரூபாயில் ) |
|---|---|---|---|
| ஏப்ரல்–2015 | 17,20,332 | 8,95,332 | 8,25,000 |
| மே–2015 | 18,39,498 | 10,14,498 | 8,25,000 |
| ஜூன்–2015 | 26,59,498 | 18,34,498 | 8,25,000 |
| ஜூலை–2015 | 28,71,664 | 20,46,664 | 8,25,000 |
| ஆகஸ்டு–2015 | 29,36,664 | 21,11,664 | 8,25,000 |
| செப்டம்பர்–2015 | 29,36,664 | 21,11,664 | 8,25,000 |
| அக்டோபர்–2015 | 29,36,664 | 21,11,664 | 8,25,000 |
| நவம்பர்–2015 | 29,36,664 | 21,11,664 | 8,25,000 |
| டிசம்பர்–2015 | 29,36,664 | 21,11,664 | 8,25,000 |
| ஜனவரி–2016 | 29,36,664 | 21,11,664 | 8,25,000 |
| பிப்ரவரி–2016 | 29,36,664 | 21,11,664 | 8,25,000 |
| மார்ச்–2016 | 29,36,664 | 21,11,664 | 8,25,000 |
| varialble Component(Training expenses vary) | 31,12,328 | 31,12,328 | |
| **Total** | **3,56,96,632** | **2,57,96,632** | **99,00,000** |

எனவே,

1. 101 Fellows, 32 பள்ளிகளில் டீச் பார் இந்தியா நிறுவனத்தின் செயல்பாட்டிற்கு நிதி ஒதுக்கீடு 01.04.2015 முதல் மொத்த வரவு /செலவு ஒதுக்கீடு ரூ.99,00,000/ –ஐ (ரூபாய் தொண்ணூற்று ஒன்பது இலட்சம் மட்டும்) சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ள அனுமதியும்,
2. மேற்கண்ட டீச் பார் இந்தியாவின் பணிக்காக இரண்டு தவணையாக நிதி ஒதுக்கீடு வேண்டப்படுகிறது. அதில் 01.04.2015 முதல் 31.10.2015 வரை ஒரு ஒதுக்கீட்டிற்கு ரூ.49,50,000/– (ரூபாய் நாற்பத்து ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தொகையும், மற்றொரு தவணை தொகை 01.11.2015 முதல் 31.03.2016 வரை ரூ.49,50,000/– (ரூபாய் நாற்பத்து ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தொகையையும் Teach to Lead என்ற பெயரில் காசோலையாக வழங்கவும்,
3. மேற்குறிப்பிட்ட தொகையினை கணக்கு குறியீடு எண். 80-82-01, 230-11-01-01 கல்வித்தர மேம்பாடு நிதி என்ற நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "18.08.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.22/2015, நாள்.18.08.2015ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

> "21.08.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.239/2015, நாள்.21.08.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.11/ந.க.எண்.இ1/4409/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.452/2015 **பொருள் எண்.03**

**மண்டலம்–11, பகுதி–32, கோட்டம்–147ல் சென்னை பெருநகர குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் பணிகள் நடைபெறுவது – நிலம் தொடர்பான ஆட்சேபனையால் பணிகள் நிறுத்தப்பட்டது – மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் அவர்களின் கோரிக்கையின்படி நிலம் கையகப்படுத்த அனுமதி.**

மண்டலம்–11, வளசரவாக்கத்திற்கு உள்அடங்கிய பகுதியான மதுரவாயல் பகுதி கடந்த 2011ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி எல்லை விரிவாக்கத்தின்போது மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு மாநகராட்சி எல்லையின்கீழ் நடைமுறையில் இருந்து வருகிறது.

கோட்டம்–147ல் கங்காநகர் பிரதான சாலை மற்றும் ருக்மணி நகர் கிருஷ்ணா நகர் பகுதியின் சாலையும் இணையும் இடத்தில் இருக்கும் நிலவியல் பாதையானது புல எண்.297/1 மற்றும் 297/4ஆக மதுரவாயல் கிராமத்தில் தனியாருக்கு சொந்தமான நிலமாக அமைந்துள்ளது. இந்த நிலவியல் பாதையான நிலம் கிருஷ்ணா நகர் ருக்மணி நகர் மற்றும் மேட்டுக்குப்பம் பகுதியை இணைப்பதாக அமைந்துள்ளது. இந்த நிலவியல் பாதை நிலத்தில் முந்தைய மதுரவாயல் நகராட்சியால் அமைக்கப்பட்ட தார் சாலை புழக்கத்தில் இருந்து வந்தது.

இந்நிலையில் தற்போதைய மண்டலம்–11ல் ஒரு பகுதியான கோட்டம்–147ல் மேற்படி தனியார் நிலவியல் பாதையானது இணைப்பு சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் வாரியத்தின் திட்டப்பணிகளுக்காக தேவைப்பட்டது. கோட்டம்–147ல் காங்கா நகர் பிரதான சாலை மற்றும் கிருஷ்ணா நகர், ருக்மணி நகரை இணைக்கும் நிலவியல் பாதையான புல எண்கள். 297/1 மற்றும் 297/4இன் வழியாக சென்னை பெருநகர குடிநீர் மற்றும் வடிகால் வாரிய துறையினர் பாதாள சாக்கடை அமைத்திட முற்பட்டபொது தனியர் திரு.ஜீவானந்தம் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்து WP.No. (வழக்கு எண்.18423/15 மற்றும் தீர்ப்பு நாள்.25.06.2015) தேதியில் தன்னுடைய நிலவியல் பாதையாக உள்ள தனி உரிமையுடைய நிலத்தினை முறைப்படி நில எடுப்பு செய்து மார்க்கெட் நிலவரப்படி இழப்பீடு அளித்த பிறகு தான் பாதாள சாக்கடை அமைத்திடவேண்டும் என இடைக்கால தடை உத்தரவு பெற்றுள்ளார். இச்சூழ்நிலையில் நிலவியல் பாதையாக உள்ள புல எண்கள். 297/1 மற்றும் 297/4 தொடர்பாக கீழ்கண்ட விபரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது. இந்தச் சாலை நிலம் மதுரவாயல் தாலுக்கா வட்டாட்சியர் அலுவலக வருவாய்துறை பதிவேடுகள்படி சரிபார்த்ததில் நில உரிமை தனியாருக்கு சொந்தமாக உள்ளது என்பதும்,பொது பாதையாக இல்லை என்பதும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இந்த நிலஉரிமைத் தொடர்பாக கீழ்கண்ட ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு மேற்கண்ட நில விவரங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இப்பொருள் தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்ட ஆவணங்கள் பின்வருமாறு:–

1. நில உரிமை தொடர்பான பட்டா நகல்கள்,
2. வட்டாட்சியர், மதுரவாயல் தாலுகா அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் (நி.ம.உ.து) சென்னை மாநகராட்சி அவர்களுக்கு அனுப்பிய அறிக்கை எண்.ந.க.2271/15/ஆ1,நாள்.17.04.2015,
3. வட்டாட்சியர், மதுரவாயல் தாலுகா அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர், (நி.ம.உ.து) சென்னை மாநகராட்சி அவர்களுக்கு அனுப்பிய அறிக்கை எண்.ந.க.3360/2015/பி1, நாள்.18.06.2015.

மேற்படி வருவாய் துறை தொடர்பான அறிக்கை சென்னை மாநகராட்சி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் மற்றும் உடைமைத்துறை) சார்ந்த வட்டாட்சியர் மற்றும் மதுரவாயல் தாலுக்கா வட்டாட்சியர் ஆகியோர்களால் கூட்டு ஆய்வு செய்யப்பட்டு முடிவு அறிக்கை பெறப்பட்டுள்ளது. முந்தைய மதுரவாயல் நகராட்சி நடைமுறையில் இருந்த வந்த காலத்தில் இந்நிலத்தின் மொத்த பரப்பு 1.88 ஏக்கர் எனவும் இந்நிலம் பட்டா நிலம் (புல எண்கள். 297/1, 2, 3 மற்றும் 4) என வருவாய் கணக்குகளில் தாக்கலாகி இருந்தது.

இச்சாலை அமைந்துள்ள நிலத்தின் தற்போதைய உரிமையாளரான திரு.இ.ஜீவானந்தம் அவர்களுக்கு சொந்தமான நிலத்தின் (புல எண்கள் 297/1, 2, 3, 4) வருவாய் ஆவணங்கள் மற்றும் துறை பதிவேடுகள்படி சரிபார்க்கப்பட்டது. இந்நிலம் திரு.ஜீவானந்தம் அவர்களுக்கு விவேகாவதி, தாசரிபத்மா, சுஜாதா மற்றும் நாகேஷ்பாபு மற்றும் நால்வர் மூலமாக பத்திர பதிவு செய்யப்பட்டுள்ளது அறிய வந்துள்ளது. மேலும் இந்நிலத்தின் மேற்கு புறத்தில் அமைந்துள்ள நிலங்கள் (புல எண் 296) மற்றும் உட்பிரிவுகள் தாசரிபத்மா நகர் எனப்படும் அங்கீகாரம் பெறாத மனை பிரிவாக இருந்து வருகிறது. இம்மனைபிரிவுகள் அங்கிகரிக்கப்படாத மனை பிரிவுகளாக முந்தைய மதுரவாயல் நகராட்சி காலத்திலும் தற்போதைய சென்னை மாநகராட்சி இப்பகுதியுடன் இணைக்கப்பட்ட பிறகும் நடைமுறையில் இருந்து வருகிறது.

இந்நிலப்பிரச்சனை தொடர்பான முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் அலுவலகத்தில் நடந்த ஆய்வு கூட்டத்தில் சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் பொதுமேலாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (திட்டம்) ஆகியோர் திட்டப்பணிகள் கடந்த மதுரவாயல் நகராட்சி காலத்தில் துவங்கப்பட்டபோது, இச்சாலை பொது சாலையாகவே வகைப்படுத்தப்பட்டு தங்களிடம் ஒப்புவிப்பு செய்யப்பட்டதாகவும், மேலும் இதற்கான ஆவணங்கள் தங்களிடம் உள்ளதாகவும் கூறியுள்ளனர். ஆனால், இந்த ஆவணங்கள் இந்நாள் வரையிலும் சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை.

மேலும் தற்போது சென்னை மாநகராட்சி மூலம் பராமரிக்கப்படும் சாலைகளின் பட்டியலிலும் இச்சாலை இடம்பெறவில்லை. மேலும், இந்த நிலத்தின் உரிமை குறிக்கும் ஆவணங்கள் (புல எண்கள்.297/1, 2, 3, 4) பரிசீலிக்கப்பட்டு தனியார் நிலம் என உறுதிசெய்யப்பட்டு மதுரவாயல் வட்டாட்சியர் மூலம் அறிக்கை பெறப்பட்டுள்ளது.

மேலும் இச்சாலை நிலத்தின் வழியாகவே சென்னை பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் வாரியத்தின் திட்டப்பணிகளுக்கான குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் இச்சாலை நிலத்தில் சுமார் 5920 சதுரஅடி. மேற்படி சென்னை பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் வாரியத்தின் திட்டப்பணிகளுக்காக கையகப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

மேலும், தமிழ்நாடு நகரமைப்பு சட்ட விதிகளின்படி அனைத்து சேவைத்துறைகளும் தங்கள் திட்டப்பணிக்கு தேவையான நிலங்களை கையகப்படுத்துவதற்கு ஈட்டு தொகையாக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மூலம் புறகர் (TDR) பகுதிகளில் வழங்கலாம் என விதிகள் வகுக்கப்பட்டுள்ளது.

இதன்படி சென்னை பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் வாரியத்தின் திட்டப்பணிகளுக்காக நிலம் கையகப்படுத்தும் பொருள் தொடர்பாக நிலத்தின் மதிப்பிற்கு ஈடாக நில உரிமையாளர் திரு.இ.ஜீவானந்தம் அவர்களுக்கு (Transfer of Development Rights) TDR மாவட்ட ஆட்சியர் திருவள்ளூர் மாவட்டம் அவர்கள் மூலமாக நிலம் கையெடுப்பு மற்றும் மதிப்பு நிர்ணயம் செய்தல் தொடர்பாக கடிதம் அனுப்பப்பட வேண்டியுள்ளது.

எனவே,

1. மண்டலம்–11, கோட்டம்–147, ருக்மணி நகர் அருகே புல எண்.297/1 மற்றும் 297/4ல் மதுரவாயல் கிராமம் தனியாருக்கு சொந்தமான புழக்கத்தில் உள்ள சாலை நிலத்தில் 5920 சதுர அடி நிலம் சென்னை பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் வாரியத்தின் திட்டப்பணிகளுக்காக கையகப்படுத்துவதற்கும் மற்றும் இதற்குண்டான ஈடு தொகையினை நிர்ணயம் செய்வதற்கும் மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மாவட்டம் அவர்களை கோருவதற்கு அனுமதியும்,
2. மேற்படி தனியார் நிலம் 5920 சதுரஅடி புல எண்.297/1 மற்றும் 297/4ல் மதுரவாயல் கிராமம் சென்னை பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரிய திட்டப்பணிகளுக்காக தலைமைப் பொறியாளர்(கட்டுமானம்) சென்னை பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும கழிவுநீர் அகற்று வாரியம் அவர்களின் கோரிக்கையின் பேரில் மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் மூலமாக நிலம் கையகப்படுத்துவதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

> ‘‘21.08.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.241/2015, நாள்.21.08.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.க.கு.ந.க.எண்.அ8/1359/2015**

**ஆணையர்(பொ) அவர்களின் 12.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.453/2015 **பொருள் எண்.04**

**வட்டி – கடன் மற்றும் முன்பணங்களுக்கான வட்டி விகிதம் – 2015–2016ம் ஆண்டிற்கு நிர்ணயித்து அரசாணை வெளியிடப் பட்டுள்ளது – சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி**

அரசாணை எண்.213, நிதித் (கடன்கள் மற்றும் முன்பணங்கள் குழுமம்) துறை, நாள்.23.07.2015ல் பல்வேறுவிதமான கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான வட்டிவிகிதம் 2015–2016ஆம் ஆண்டிற்கு நிர்ணயித்து உத்தரவிடப்பட்டுள்ளது. அரசாணையின் விபரம் பின்வருமாறு:

**ABSTRACT**

FINANCE (LOANS AND ADVANCES CELL) DEPARTMENT G.O.NO.213, Dated 23rd July 2015 (Manmatha, Aadi 7, Thiruvalluvar Aandu 2046)

**INTEREST** – Rate of interest on Loans and Advances sanctioned by the State Government – Interest rates for the year 2015–2016 – Orders – Issued.

**READ** – the following papers:

G.O. Ms. No.186, Finance (Loans and Advances Cell) Department, dated 8.7.2014.

☆☆☆☆☆

**ORDER:**

Government direct that the rate of interest on various kinds of loans and advances by the State Government during the year 2015-16 shall be as shown below:-

| Sl No. | | Class of Loan / Advance | Percent per annum for the year 2015 -2016 |
|---|---|---|---|
| 1. | | **Loans to State owned Industrial / Commercial Undertakings / Corporations, etc. including Financial Corporations and all other Local Bodies and Municipal Corporations.** | |
| | (a) | Plan Schemes for development purposes | **11.50** |
| | (b) | Other Schemes | **11.50** |
| | (c) | For capital formation and development purposes | **11.50** |
| | (d) | For Working Capital Support | **13.50** |
| | (e) | For Ways & Means , advances including loans to cover cash deficits | **13.50** |
| | (f) | For Ways & Means advance to Tamil Nadu Civil Supplies Corporation Limited for Public Distribution System | **10.00** |
| 2 | | **Loans to Co-operative Institutions and Co-perative Banks like Land Development Bank** | **10.00** |
| 3 | | **Loans to Government Servants** | |
| | **(i)** | **House Building Advance:** | |
| | | (a) For loans upto Rs.50,000/- | **5.50** |
| | | (b) For loans from Rs.50,001/- to 1,50,000/- | **7.00** |
| | | (c) For loans from Rs.1,50,001/- to 5,00,000/- | **9.00** |
| | | (d) Above Rs.5,00,000/- | **10.00** |
| | **(ii)** | **Conveyance Advance:** | |
| | | (a) For purchase of Motor car | **11.50** |
| | | (b) For purchase of Motor Cycle / Scooter | **9.00** |
| | | (c) For purchase of Bi - cycle | **5.50** |
| | **(iii)** | **Other personal Loans to Government Servants:** | |
| | | (a) For purchase of Computer | **10.00** |
| | | (b) Others | **10.00** |

| | | |
|---|---|---|
| **4.** | **Other items:** | |
| | Loans which are not covered in any specific category mentioned above | **12.75** |
| **5.** | **Value of seized stock under Essential Commodities Act, 1955** | **6.50** |
| **6.** | **Penal Interest** | **2.50** |

2. The above rates will be applicable for all loans and advances being sanctioned during the year 2015-2016 and will have validity till the next revision is done

3. The rates of interest are general and will not apply to cases where reduced rates of interest have been sanctioned specially by the Government or where loans have been sanctioned by the Government free of interest. The Government may also sanction Ways and Means advances at special rates or interest taking into account, the cost of borrowing of the government.

4. The mobilization advances to Contractors for World Bank assisted projects wherein the standard bidding documents provide for exemption from paying of interest are however excepted from payment of interest.

5. The penal Interest on all overdue instalments of principal and interest will be at 2.50 per cent more than the normal rates of interest per annum.

6. Except in the case of loans to Government Servants, interest ion all cases unless specifically indicated otherwise should be paid every Calendar quarter on the outstanding balance.

7. Even at the stage of sanction of loan, in the sanction order, the period of repayment, rate of interest and schedule of repayment with dates shall be indicated. In case, it is a permanent loan, a specific mention of this fact should be made in the sanction order itself.

(BY ORDER OF THE GOVERNOR)

**K. SHANMUGAM**

**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

எனவே, நிதித்துறை (கடன்கள் மற்றும் முன்பணங்கள் குழுமம்) வட்டி – கடன் மற்றும் முன்பணங்களுக்கான வட்டி விகிதம் 2015–2016ம் ஆண்டிற்கு நிர்ணயித்து வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண்.213, நாள்.23.07.2015ஐ சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்துவதற்கு நிலைக்குழு (வரிவதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "21.08.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.238/2015, நாள்.21.08.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.12.பொ.சு.து.ந.க.எண்.எச்2/3701/2015**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 03.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.454/2015 **பொருள் எண்.05**

**பணியமைப்பு 2015–16 மண்டலம்–12, கோட்டம்–156 முதல் 167 வரை பொது சுகாதாரத்துறையில் கொசு ஒழிப்பு பணி, கொசு மூலம் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு மற்றும் சிக்கன்குனியா முதலான நோய்களை தடுக்கும் பணிக்கு 173 பணியாளர்களை சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் 12.08.2015 முதல் 11.08.2016 வரை பணி மேற்கொள்ள ஈடுபடுத்த அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம் 12ல் கோட்டம் 156 முதல் 167 வரை மொத்தம் 1643 தெருக்களில் 53842 வீடுகளும் 66133 குடியிருப்புகளும் உள்ளன. மேலும், 24 குடிசை பகுதிகளும் உள்ளன அவற்றில் கொசுப்புழு வளரும் இடங்களான 12299 மேல்நிலைத்தொட்டிகளும் 5892 கிணறுகளும் 17249 கீழ்நிலைத்தொட்டிகளும் மற்றும் 9770 தொட்டிகளும் மண்டலம் 12 ல் உள்ளன. மேலும், 82.8 கி.மீ. நீளம் திறந்த மற்றும் மூடிய மழைநீர் கால்வாய்களும் மற்றும் 7 கி.மீ. நீர்நிலைகளும் உள்ளன.

மேற்குறிப்பிட்ட அனைத்து குடிசை பகுதிகளிலும், குடியிருப்புகளிலும் மற்றும் நீர்நிலைகளிலும் பொது சுகாதார நலன் கருதி மலேரியா மற்றும் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள், மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் நீர்வழிப்பாதைகளில் கொசு புழு நாசினி தெளிக்கும் பணிகள், தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் பதிவாகும் மலேரியா மற்றும் டெங்கு நோயாளிகளின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு உரிய தடுப்பு நடவடிக்கைகள், டெங்கு நோயை பரப்பும் ஏடிஸ் கொசுக்கள் பெருமளவில் உற்பத்தியாகும் பழைய டயர்கள் அகற்றும் பணி , உபயோகமற்ற பொருட்களான தேங்காய் ஓடு, ஆட்டுக்கல், உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள் ஆகியவற்றில் மழை நீர் தேங்காவண்ணம் உடனுக்குடன் தினசரி அனைத்து கோட்டங்களிலும் அப்புறப்படுத்தும் பணிகள் மற்றும் கொசுப்புழு வளரும் இடங்களான மேல்நிலைத் தொட்டி, கிணறு கீழ் நிலை தொட்டி முதலானஅனைத்து இடங்களிலும் கொசுப்புழு வளராமல் தடுக்க கொசுப்புழு தடுப்பு மருந்து இடும் பணி மண்டலம் 12 பொது சுகாதாரத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகள் 30.05.2014 நாளிட்ட மன்ற தீர்மானத்தின்படி (மன்றத் தீர்மான எண் 279/2014) சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்ட அண்டை வீட்டார் குழுவில் உள்ள 173 உறுப்பினர்களை கொசு ஒழிப்பு பணி, கொசு மூலம் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு மற்றும் சிக்கன்குனியா முதலான நோய்களை தடுக்கும் பணிக்கு ஈடுபடுத்தி பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு உறுப்பினர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்ட பணியானது 11.08.15 அன்று முடிவடைகிறது.

எனவே, பொது சுகாதார நலன் கருதி, மண்டலம் 12 ல் கொசு ஒழிப்பு பணி, கொசு மூலம் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு மற்றும் சிக்கன்குனியா முதலான நோய்களை தடுக்கும் பணி மேற்கொள்ள சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்ட அண்டை வீட்டார் குழுவின் மூலம் மேற்கொள்ளும் பணியினை நீட்டிப்பு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

மேலும், 30.05.2014 நாளிட்ட மன்ற தீர்மானத்தின்படி (மன்றத் தீர்மான எண் 279/2014) ‘‘சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தில் பதிவு செய்துள்ள அண்டை வீட்டுக்குழுக்கள் / மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களை கொண்டு மண்டலங்களில் தேவைக்கேற்ப, மலேரியா பணிக்கு ஈடுபடுத்தி கொள்ள தீர்மானித்து இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.'' என மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கூடுதலாக மண்டலம் 15ல் 01.07.2014 முதல் 31.06.2015 வரைக்கான புதிய ஒப்பம் கோரவும் அதற்கான செலவின தொகைக்கு மாமன்றத்தின் அனுமதி கோரியதில் மாமன்ற தீர்மான எண்.309, நாள்.30.05.2014ல் ‘‘துப்புரவு மற்றும் மலேரியா பணியார்களை தனியார் ஏஜென்சி மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ள நடைமுறை ரத்து செய்யப்பட்டு, சுவர்ண ஜெயந்தி நகர்புற வேலைவாய்ப்புத் திட்டம் மூலம், திட்ட அலுவலரால் நேரடியாக பட்டியல் பெறப்பட்டு, அப்பட்டியலில் இருக்கும் நபர்களுக்கு மட்டுமே துப்புரவு பணி மற்றும் மலேரியா தூர்வாரும் பணி வழங்கவம், தனியார் ஏஜென்சி முறை ரத்து செய்ய தீர்மானித்து இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.'' எனவும் மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், 04.07.15 அன்று முதன்மை செயலர்/ஆணையாளர் அவர்களின் வாராந்திர துப்புரவு பணி கலந்தாய்வு கூட்டத்தில் மாண்புமிகு மேயர் அவர்கள் மலேரியா பணிக்கு சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்ட உறுப்பினர்களை மட்டுமே ஈடுபடுத்த உத்தரவிட்டுள்ளார்.

எனவே, மேற்கண்ட அறிவுரைகளின்படி, மண்டலம்–12ல் உள்ள 12 கோட்டங்களில் கொசு ஒழிப்பு பணி, கொசு மூலம் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு மற்றும் சிக்கன்குனியா முதலான நோய்களை தடுக்கும் பணி மேற்கொள்ள சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்ட அண்டை வீட்டார் குழுவின் 173 உறுப்பினர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளும் பணியினை 12.08.2015 முதல் 11.08.2016 வரை ஒப்பந்த அடிப்படையில் நீட்டிப்பு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

மேற்கண்ட பணிக்குரிய தோராயமான செலவின விபரப் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1 | மொத்த கோட்டங்கள் | 12 |
| 2 | தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை | 173 |
| 3 | ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு தேவைப்படும் தினக்கூலி | ரூ.295.00 (ரூபாய் இருநூற்று தொண்ணூற்று ஐந்து மட்டும்) |
| 4 | ஒரு நாளைக்கு 173 நபர்களுக்கு தேவைப்படும் தினக்கூலி | ரூ.295x173=ரூ.51,035.00 (ரூபாய் ஐம்பத்தோரு இலட்சத்து முப்பத்தி ஐந்து மட்டும்) |
| 5 | நீட்டிப்பு காலமான 12.08.2015 முதல் 11.08.2016 வரை 173 நபர்களுக்கு தேவைப்படும் தினக்கூலி | ரூ. 295 x 173 x 365 = ரூ. 1, 86, 27, 775 .00 (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தி ஆறு இலட்சத்து இருபத்தி ஏழாயிரத்து எழுநூற்று எழுபத்தைந்து மட்டும்) |
| 6 | பயன்படுத்தப்படும் கணக்கு குறியீடு | 30-32-02 (ANTI MOSQUITO OPERATION) / 210-10-06-05 (PAYMENT TO CASUAL STAFFS – OTHERS) |

மேலும், 16.07.15 அன்று நடைபெற்ற மண்டலம் 12 வார்டு குழுவின் ஒப்புதல் பெற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம்–12ல் நீட்டிப்பு காலமான 12.08.2015 முதல் 11.08.2016 வரை கொசு ஒழிப்பு பணி, கொசு மூலம் பரவும் நோய்களான மலேரியா, டெங்கு மற்றும் சிக்கன்குனியா முதலான நோய்களை தடுக்கும் பணி மேற்கொள்ள 173 பணியாளர்களை சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்ட அண்டை வீட்டார் குழு உறுப்பினர்களை ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ளவும்
2. அப்பணியாளர்களுக்கு நீட்டிப்பு காலமான 12.08.2015 முதல் 11.08.2016 வரை தினக்கூலி வழங்க தேவையான தோராய தொகை ரூ.1,86,27,775.00 (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தி ஆறு இலட்சத்து இருபத்தி ஏழாயிரத்து எழுநூற்று எழுபத்தைந்து மட்டும்) மலேரியா பணியாளர் செலவினத்தில் கணக்கு தலைப்பு எண்.30-32-02 (ANTI MOSQUITO OPERATION) / 210–10–06–05 (PAYMENT TO CASUAL STAFFS–OTHERS)ன் கீழ் செலவினம் செய்யவும்.

மேற்கண்ட 1 மற்றும் 2 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "19.08.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.38/2015, நாள்.19.08.2015ன்படி இதற்கு நிலைக்குழு (பொதுசுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> "21.08.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.240/2015, நாள். 21.08.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**க.து.ந.க.எண்.பி3/12245 /2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.455/2015 **பொருள் எண்.06**

**சென்னை மாநகராட்சி – கல்வித்துறை – 2015–2016ம் ஆண்டு சிறப்பு வகுப்புகள்–10ம் வகுப்புகள் மற்றும் 12ம் வகுப்பு மாணவர்கள் – சிற்றுண்டி (சுண்டல்) வழங்கஅனுமதி**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் 10ம் மற்றும் 12–ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவிகளுக்கு அயற்சியை போக்கும் விதமாகவும், கற்றலின் முழு அடைவினை பெறுவதின் பொருட்டும் சுண்டல் வழங்கப்படும் என்று அறிவித்ததன்படி ஒவ்வொரு ஆண்டும் 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு சுண்டல் வழங்கப்பட்டு வருகிறது. இந்த கல்வி ஆண்டில் (2015–2016) 10 மற்றும் 12ம் வகுப்பில் படிக்கும் 13,233 மாணவ மாணவியர்கள் எதிர்வரும் மார்ச்/ஏப்ரல் மாதங்களில் பொதுத்தேர்வினை எதிர்நோக்க உள்ளனர். இம்மாணவர்களுக்கு, கடந்த ஆண்டைப் போலவே, மாலை–4 மணிக்கு மேல் 6–மணி வரை ஆசிரியர்களின் வழி காட்டுதலில் மேற்பார்வை வகுப்புகள் வழக்கமாக நடைபெறவும் அம்மாணவர்களுக்கு மாலை–4 மணியளவில் சுண்டல் வழங்கி கற்றல் நிகழ்வினை தொடரவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மாணவர்கள் விருப்பத்துடன் சுவைத்து மகிழ வாரத்தின் 6 நாட்களுக்கும் (ஞாயிறு தவிர) ஆறு வகையான சுண்டல் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வகையில் ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு ரூ.8/– செலவினம் எதிர்நோக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சியின் கல்வித்துறையின் கீழ் செயல்படும் 32 மேல்நிலை, 38 உயர்நிலைப்பள்ளிகள் ஆக மொத்தம் 70 பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கும் சுண்டல் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. மாணவர்களின் எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வகையில் சுண்டல் தயாரிப்பதற்காக தானியம் வாங்க மற்றும் சுண்டல் சமைத்து வழங்கிட ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு ரூ.8/– என நிர்ணயிக்கப்படுகிறது.

70 பள்ளிகளில் பயிலும் 13,233 மாணவ / மாணவிகளுக்கு இவ்வகையில் சுண்டல் வழங்க செப்டம்பர் 2015 முதல் மார்ச் 2016 வரை (10ம் வகுப்பு மாணவர்களுக்கு 164 நாட்களுக்கும், 12ம் வகுப்பு மாணவர்களுக்கு 140 நாட்களுக்கும்) ரூ.1,61,92,416/– செலவினம் எதிர்பார்க்கப்படுகிறது. செலவின விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

மொத்த செலவின விவரம் செப்டம்பர் 2015 முதல் மார்ச் 2016 முடிய.

| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை | ஒரு மாணவனுக்கு செலவு | ஒரு நாள் செலவு | நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 10–ம் வகுப்பு | 7143 | ரூ.8.00/- | ரூ.57,144/- | 164 | ரூ. 93,71,616/- |
| 12–ம் வகுப்பு | 6090 | ரூ.8.00/- | ரூ.48,720/- | 140 | ரூ. 68,20,800/- |
| | | | | மொத்தம் | **ரூ.1,61,92,416/-** |

**முதல் தவணையாக (மூன்று மாதங்களுக்கு செப்டம்பர் 2015, அக்டோபர் 2015 (ம) நவம்பர் 2015) காசோலை பெற செலவின விவரம்**

| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை | ஒரு மாணவனுக்கு செலவு | ஒரு நாள் செலவு | நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 10–ம் வகுப்பு | 7143 | ரூ.8.00/- | ரூ.57,144/- | 71 | ரூ.40,57,224/- |
| 12–ம் வகுப்பு | 6090 | ரூ.8.00/- | ரூ.48,720/- | 71 | ரூ.34,59,120/- |
| | | | | மொத்தம் | **ரூ.75,16,344/-** |

**இரண்டாவது தவணையாக (மூன்று மாதங்களுக்கு டிசம்பர் 2015, ஜனவரி 2016 (ம) பிப்ரவரி 2016) காசோலை பெற செலவின விவரம்**

| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை | ஒரு மாணவனுக்கு செலவு | ஒரு நாள் செலவு | நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 10–ம் வகுப்பு | 7143 | ரூ.8.00/- | ரூ.57,144/- | 69 | ரூ.39,42,936/- |
| 12–ம் வகுப்பு | 6090 | ரூ.8.00/- | ரூ.48,720/- | 69 | ரூ.33,61,680/- |
| | | | | மொத்தம் | **ரூ.73,04,616/-** |

**மூன்றாவது தவணையாக (மார்ச் 2016) காசோலை பெற செலவின விவரம்**

| வகுப்பு | மாணவர்களின் எண்ணிக்கை | ஒரு மாணவனுக்கு செலவு | ஒரு நாள் செலவு | நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 10–ம் வகுப்பு | 7143 | ரூ.8.00/- | ரூ.57,144/- | 24 | ரூ.13,71,456/- |
| | | | | **மொத்தம்** | **ரூ.13,71,456/-** |

இச்செலவினம் தலைமையாசிரியர்கள் மூலமாக அவரவர் பள்ளிகளிலேயே சுண்டல் தயாரித்து வழங்கும் விதத்தில் மாணவ/மாணவிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, செலவினம் மேற்கொண்டு முதல் தவணை, இரண்டாவது தவணை, மூன்றாவது தவணை முடிந்தவுடன் உரிய இரசீதுகளை கல்வித்துறைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. சுண்டல் வழங்கும் இத்திட்டத்தினை சென்னை உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளில் 10ம் மற்றும் 12ம் வகுப்பு பயிலும் 13,233 மாணவர்களுக்கு செப்டம்பர் 2015 முதல் மார்ச் 2016 வரை செயல்படுத்தவும்,
2. ஒரு மாணவருக்கு ரூ.8/–வீதம் 10–ஆம் வகுப்பு பயிலும் 7,143 மாணவர்களுக்கு 164 நாட்களுக்கு **ரூ.93,71,616/–**ம், 12–ம் வகுப்பில் பயிலும் 6,090 மாணவர்களுக்கு 140 நாட்களுக்கு **ரூ.68,20,800/–**ம் ஆக மொத்தம் **ரூ.1,61,92,416/–**க்கு அனுமதியும்,
3. முதல் தவணையாக மூன்று மாதங்களுக்கு (செப்டம்பர் 2015 முதல் நவம்பர் 2015 வரை) 71 நாட்களுக்கு 10–ம் வகுப்பிற்கு ஆகும் செலவு **ரூ.40,57,224/-**ம், 12–ம் வகுப்பிற்கு ஆகும் செலவு **ரூ.34,59,120/-** ஆகிய மூன்று மாதங்களுக்கு முன்பணமாக கணக்கு குறியீட்டு எண்.460–50–01–19 Advance recoverable expenses என்ற தலைப்பில் **ரூ.75,16,344/-**முதல் முன்பணமாகவும், இரண்டாம் தவணையாக மூன்று மாதங்களுக்கு (டிசம்பர் 2015 முதல் பிப்ரவரி 2016 வரை) 69 நாட்களுக்கு 10–ம் வகுப்பிற்கு ஆகும் செலவு **ரூ.39,42,936/-** மற்றும் 12–ம் வகுப்பிற்கு ஆகும் செலவு **ரூ.33,61,680/-**ம் ஆகிய மூன்று மாதங்களுக்கு முன்பணமாக கணக்கு குறியீட்டு எண்.460–50–01–19 Advance recoverable expenses என்ற தலைப்பில் **ரூ.73,04,616/-** இரண்டாம் முன்பணமாகவும், மூன்றாவது தவணையாக 10–ம் வகுப்பிற்கு ஒரு மாதத்திற்கு (மார்ச் 2016) 24 நாட்களுக்கு **ரூ.13,71,456/-**ம், முன்பணமாக கணக்கு குறியீட்டு எண்.460–50–01–19 Advance recoverable expenses என்ற தலைப்பில் **ரூ.13,71,456/-** மூன்றாவது முன்பணமாகவும், மூன்று தவணையாக வழங்க அனுமதியும்,
4. இத்தொகையினை கல்வி அலுவலர் அவர்களின் பெயரில் வழங்கவும், இத்தொகையை கணக்கு குறியீட்டு எண்.E-80-82-01, 230-11-01-01 கல்வி தர மேம்பாடு – சிறப்பு வகுப்புகள் என்ற நிதி ஒதுக்கீட்டில் நேர் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி) வின் கூட்டம் 18.08.2015 அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.26/2015ன்படி நிலைக்குழு (கல்வி) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண். 245/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**க.து.ந.க.எண்.அ2/11363/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.456/2015 **பொருள் எண்.07**

**கல்வித்துறை – சென்னை மாநகராட்சி – 60 சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு படிக்கும் மாணவ / மாணவியர்களின் அறிவியல் திறன் மேம்பட நடமாடும் அறிவியல் ஆய்வகம் மூலம் அறிவியல் பரிசோதனைகளை தாமாக செய்து அறிவியல் கற்பதற்கும், அதிக மாணவர்கள் உள்ள பள்ளியின் அறிவியல் ஆய்வகம் மேம்படுத்துவதற்கும் தோராயமாக ரூ. 69,17,000/– தொகையில் விலைப்புள்ளி மூலம் ஒரு ஆண்டுக்கு அமைப்பதற்கும், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கும் அனுமதி**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி,** அறிவியல் சிந்தனை அறிவியல் ஆய்வகத்தில் மேம்படுகிறது. சிறு வயதிலேயே ஆராய்ச்சி எண்ணம் உருப்பெற வேண்டும். அதற்கான வாய்ப்புகளை உருவாக்க தாமாக செய்து அறிவியல் கற்பதற்கும், இளம் அறிவியல் அறிஞர்களை உருவாக்கிடவும் நடமாடும் அறிவியல் ஆய்வகம் அமைத்தல் அவசியமாகிறது.

சென்னை மாநகராட்சியின் கீழ் 70 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் இயங்கி வருகின்றன. இதில் 32 சென்னை மேல்நிலைப்பள்ளிகள், 38 சென்னை உயர்நிலைப்பள்ளிகள். இப்பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு மாணாக்கர்கள் பயின்று வருகின்றனர். ஏற்கனவே சென்னை மாநகராட்சி பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை உள்ள மாணாக்கர்களுக்கு 20 பள்ளிகளில் அறிவியல் ஆய்வகம் அமைக்கப்பட்டு அவை சீரிய முறையில் செயல்பட்டு மாணவர்களின் அறிவியல் திறன் மேம்பட்டுள்ளது.

எனவே, 2015–2016 ஆம் இக்கல்வியாண்டில் சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 9ஆம் வகுப்பு மற்றும் 10ஆம் வகுப்பு படிக்கும் மாணவ / மாணவியர்களின் அறிவியல் திறன் மேம்பட நடமாடும் அறிவியல் ஆய்வகம் மற்றும் மேம்பாட்டான அறிவியல் ஆய்வகம் அமைப்பது சென்னை பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களும் தனியார் பள்ளிக்கு இணையாக தமது அறிவியல் ஆற்றலை மேம்படுத்த மற்றும் போட்டி தேர்வுகளில் முக்கிய இடங்களை பிடிக்க ஏதுவாக இருக்கும். இதன் மூலம் அறிவியலில் மாணாக்கர்கள் அதிக மதிப்பெண் பெற்று மேற்படிப்பு படித்தல் எளிதாகும்.

அறிவியல் திறனை மாணாக்கர்களியிடேயே மேம்படுத்த சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் 10 பட்டதாரி ஆசிரியர்கள் 1 தலைமை ஆசிரியர் கொண்ட அறிவியல் குழு அமைக்கப்பட்டது. அவர்களின் பரிந்துரையின் படி, மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் முதல் 10 பள்ளிகள் தேர்ந்தெடுத்து அவற்றில் அறிவியல் ஆய்வகம் மேம்படுத்துவது எனவும், 4 பள்ளிகளில் நடமாடும் அறிவியல் ஆய்வகம் மையம் அமைக்கப்பட்டு, அவற்றில் இருந்து ஒரு மையத்திற்கு 15 பள்ளிகள் என 4 மையத்திற்கு 60 சென்னை பள்ளிகளில் செயல்பட உள்ளது. இதன் மூலம் சென்னை மாநகராட்சியில் 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணாக்கர்களும் பயன் பெறுவார்கள்.

10 பள்ளிகளில் ஆய்வக மேம்பாட்டிற்காக ரூ.35,85,000/– செலவு ஆகும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நடமாடும் அறிவியல் மையம் அமைக்க ஒரு ஆண்டுக்கு ஆகும் செலவு விவரம். ( ஒரு யூனிட்டு = 15 பள்ளிகள் )

| | |
|---|---|
| கண்காட்சி பொருட்கள் வாங்க | ரூ. 5,00,000/– |
| Resource Teachers ( 2 Nos) | ரூ. 2,70,000/– |
| போக்குவரத்து ( மையப்பள்ளியில் இருந்து பிற 14 பள்ளிகளுக்கு ) | ரூ. 63,000/– |
| **மொத்தம்** | **ரூ. 8,33,000/–** |

நான்கு நடமாடும் அறிவியல் மையத்திற்கான செலவு ரூ.8,33,000X4=ரூ.33,32,000/– என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. 60 சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 9 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு படிக்கும் மாணவ / மாணவர்களின் அறிவியல் திறன் மேம்பட நடமாடும்

அறிவியல் ஆய்வகம் மூலம் அறிவியல் பரிசோதனைகளை தாமாக செய்து அறிவியல் கற்பதற்கும், அதிக மாணவர்கள் உள்ள பள்ளியின் அறிவியல் ஆய்வகம் மேம்படுத்துவதற்கும் தோராயமாக ரூ.69,17,000/– (35,85,000+33,32,000= 69,17,000/–) தொகையில் விலைப்புள்ளி அல்லது திறந்த ஒப்பந்த புள்ளி மூலம் ஒரு ஆண்டுக்கு அமைப்பதற்கு அனுமதியும்,

2. அச் செலவினத்தை துறை குறியீடு எண் :E, பிரிவு எண் 80–82–01, கணக்கு குறியீடு 230–11–01–01 என்ற கல்வித்துறை மேம்பாடு நிதியில் செலவு மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 2 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி) வின் கூட்டம் 18.08.2015 அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.25/2015ன்படி நிலைக்குழு (கல்வி) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.244/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**க.து.ந.க.எண்.பி5 /2075/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.457/2015 **பொருள் எண்.08**

**மண்டலம்–5, வார்டு–58, ரிப்பன் மாளிகை வளாகத்தில் வடக்கு பகுதியில் தரைதளம் 5 தளங்கள் கொண்ட இணை அலுவலக கட்டடத்தில் தரைதளம் மற்றும் முதல்தளத்தில் உள்ள கலையரங்க கட்டிடத்திற்கு நவீன நாற்காலிகள் (Modular Chairs) 443 எண்ணிக்கையில் கொள்முதல் செய்தல் பணிக்கான மதிப்பீட்டிற்கு அனுமதி**

**வார்டு எண் :58** **மண்டலம் : 5**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர். | மண்டலம்–5, வார்டு–58, ரிப்பன் மாளிகை வளாகத்தில் வடக்கு பகுதியில் தரைதளம் 5 தளங்கள் கொண்ட இணை அலுவலக கட்டடத்தில் தரைதளம் மற்றும் முதல்தளத்தில் உள்ள கலையரங்க கட்டிடத்திற்கு நவீன நாற்காலிகள் (Modular Chairs) 443 எண்ணிக்கையில் கொள்முதல் செய்தல் |
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | மாண்புமிகு மேயர் |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் –5 |
| 4 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | பெறப்பட்டுள்ளது |
| 5 | தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகா செயல்முறை ஆணை மற்றும் நாள் | மேற்பார்வை பொறியாளர் (கட்டடம்) T.S.No |
| 6 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | Godrej & Boyce Mfg.Co.Ltd நிறுவனத்தின் பெயரில் DGS&D விலையில் கொள்முதல் செய்ய |
| 7 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 56,86,259.00 |
| 8 | நிதியின் தன்மை இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | மூலதனநிதி ரூ. 56,86,259.00 |

ரிப்பன் மாளிகை வளாகத்தின் வடக்கு பகுதியில் கீழ்தளம் தரைதளம் 5 தளங்கள் கொண்ட இணை அலுவலக கட்டடம் கட்டப்பட்டு பணி முடிக்கப்பட்டு மேற்கண்ட அனைத்து துறைகளும் தற்போது இயக்கப்பட உள்ளதால் இணை அலுவலக கட்டடத்தில் தற்போது தரைதளம் மற்றும் முதல்தளத்தில் உள்ள கலையரங்க கட்டிடத்திற்கு 443 எண்ணிக்கையில் நவீன நாற்காலிகளை (Modular Chairs) திருவாளர்கள். Godrej & Boyce Mfg.Co.Ltd நிறுவனத்தின் பெயரில் DGS&D விலையில் கொள்முதல் செய்ய விலைப்புள்ளி மதிப்பீடு ரூ.56,86,259/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நவீன நாற்காலிகள் (Modular Chairs) திருவாளர்கள். Godrej & Boyce Mfg.Co.Ltd நிறுவனத்தின் பெயரில் DGS&D விலையில் **443** எண்ணிக்கையில் கொள்முதல் செய்ய விலைப்புள்ளி மதிப்பீடு ரூ.56,86,259/–க்கு (ரூபாய் ஐம்பத்தாறு இலட்சத்து என்பத்தாறாயிரத்து இறுநூற்று ஐம்பத்தொன்பது மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள விலைப்புள்ளி திட்ட மதிப்பீட்டிற்கு தற்பொழுது தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **20.08.2015** அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **31.08.2015** அன்று தீர்மான எண்**209/2015**ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.
>
> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **21.08.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **31.08.2015** அன்று தீர்மான எண்.**246/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண்.பி5 /1500/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.458/2015 **பொருள் எண்.09**

**மண்டலம்–5, வார்டு–49, பழைய வண்ணாரப்பேட்டையில் சோமு தெருவில் கணினி மையம் கட்டும் பணிக்கான மதிப்பீட்டிற்கு அனுமதி**

**வார்டு எண் :49** **மண்டலம் : 5**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர். | மண்டலம்–5, வார்டு–49, பழைய வண்ணாரப்பேட்டை இராயபுரம் சோமு தெருவில் சென்னை நடுநிலைப்பள்ளி இடிக்கப்பட்டு காலியாக உள்ள இடத்தில் கணினி மையம் கட்டும் பணி. |
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | மாண்புமிகு மேயர் |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்–5 |
| 4 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | பெறப்பட்டுள்ளது |
| 5 | தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல்முறை ஆணை மற்றும் நாள் | பின்னர் பெறப்படும். |
| 6 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2014-2015ஆம் ஆண்டின் பொதுப் பணித்துறையின் தோராய தரை பரப்பளவு விலைப்பட்டியல்களின் அடிப்படை விவரப்படி |
| 7 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 2,81,30,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ . 2,29,51,178.93 |
| | (ஆ) மேலான மேற்பார்வை செலவு | ரூ. 22,95,117.89 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | ரூ. 5,73,779.47 |
| | (ஈ) கலந்தறிதர் கட்டணம் | ரூ. 11,47,558.95 |
| | (ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 2,29,511.79 |
| | (எ) தர நிர்ணயம் | ரூ. 2,29,511.79 |
| | (ஏ) எதிர்பாரா செலவு | ரூ. 5,68,341.17 |
| | (ஐ) மின்சாரம்/குடிநீர் இணைப்பு மற்ற பிற இனங்கள் | ரூ. 1,00,000.00 |
| | (ஒ) மண் பரிசோதனை | ரூ. 35,000.00 |
| | மொத்தம் | ரூ. 2,81,30,000.00 |
| 8 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 9 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த வார்டு குழுவின் தீர்மான எண் மற்றும் நாள் | பெறப்படவுள்ளது. |
| 10 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | புதிய பணி |
| 11 | நிதியின் தன்மை | மூலதன நிதி |
| 12 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு | ரூ. 2,81,30,000.00 |

| | | |
|---|---|---|
| | தேவைப்படும் நிதி | |

மேற்கண்ட பணிக்காக பொதுப்பணித்துறையின் தோராய தரை பரப்பளவு விலைப்பட்டியல்களின் அடிப்படையில் ரூ.2,81,30,000/–க்கு (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தோறு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள தோராய திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (கல்வி) வின் கூட்டம் **18.08.2015** அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **31.08.2015** அன்று தீர்மான எண்.**24/2015**ன்படி நிலைக்குழு (கல்வி) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **20.08.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **31.08.2015** அன்று தீர்மான எண்**211/2015**ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **21.08.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **31.08.2015** அன்று தீர்மான எண்.**247/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண்.பி10/868/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 04.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.459/2015 **பொருள் எண்.10**

**மண்டலம்–10, வார்டு–142, சைதாப் பேட்டையில் ஏற்கனவே உள்ள பழைய மார்க்கெட் கட்டிடங்களை இடிப்பதற்கும் மற்றும் சைதாப்பேட்டை மார்க்கெட் மற்றும் வணிக வளாகம் கட்டும் பணிக்கான மதிப்பீட்டிற்கு அனுமதி**

**வார்டு எண் :142** **மண்டலம் : 10**

| | | |
|---|---|---|
| | பணியின் பெயர். | மண்டலம்–10, வார்டு–142, சைதாப் பேட்டையில் ஏற்கனவே உள்ள பழைய மார்க்கெட் கட்டிடங்களை இடிப்பதற்கும் மற்றும் சைதாப்பேட்டை மார்க்கெட் மற்றும் வணிக வளாகம் கட்டும் பணி |
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | மாண்புமிகு மேயர் அவர்களின் நிதி நிலை அறிக்கை 2013-2014 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | வருவாய்த்துறை |
| 4 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | பெறப்பட்டுள்ளது |
| 5 | தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல்முறை ஆணை மற்றும் நாள் | தலைமைப் பொறியாளர் (கட்டடம்) |
| 6 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2015 -2016 பொதுப்பணித்துறையின் கட்டடபரப்பளவின் விலை விகிதப்படி |
| 7 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 20,96,00,000.00 |
| | (அ) கட்டுமான பணிச்செலவு | ரூ . 16,32,89,156.85 |
| | (ஆ) மேலான மேற்பார்வை செலவு | ரூ . 1,63,28,915.68 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | ரூ. 40,82,228.92 |
| | (ஈ) எதிர்பாரா செலவு | ரூ. 40,82,228.57 |
| | (உ) மின்தூக்கி செலவீனம் (Providing Lift Provision) | ரூ. 1,02,00,000.00 |
| | (ஊ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 16,32,891.57 |
| | (எ) கலந்தறிதற்கட்டணம் 5% | ரூ. 81,64,457.84 |
| | (ஏ) தர கட்டுப்பாடு 1% | ரூ. 16,32,891.57 |
| | (ஐ) மின்சாரம்/குடிநீர் இணைப்பு | ரூ. 1,00,000.00 |
| | (ஒ) பிற இனங்கள் | ரூ. 60,000.00 |
| | மொத்தம் | ரூ.20,96,00,000.00 |
| | 1 சதுர அடிக்கு ஆகும் செலவு | 1363 /சதுர அடி |
| 9 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 10 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த வார்டு குழுவின் தீர்மான எண் மற்றும் நாள் | பெறப்படவுள்ளது |
| 11 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | புதிய பணி |
| 12 | நிதியின் தன்மை இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | மூலதனநிதி ரூ.20,96,00,000.00 |

| | | |
|---|---|---|
| 13 | இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் நிலத்தின் பரப்பளவு தளம் வாரியாக | 67.35சதுர மீட்டர் |
| 14 | அந்த கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | இல்லை |
| 15 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ----- |
| 16 | கட்டிடம் இடிக்கப்பட்ட பின் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது | நவீன மார்க்கெட் மற்றும் வணிக வளாகம் |
| 17 | கட்டிடம் இடிப்பதற்கு காரணம் | நவீன மார்க்கெட் மற்றும் வணிக வளாகம் கட்டப்படவுள்ளதால் |
| 18 | கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் | மாண்புமிகு மேயர் அவர்களின் நிதி நிலை அறிக்கை 2013-2014 |
| 19 | வார்டு குழு பரிந்துரை தீர்மான எண் | பின்னர் பெறப்படும் |

மண்டலம்–10, வார்டு–142, சைதாப்பேட்டையில் உள்ள ஜீனிஸ் சாலையில் ஏற்கனவே உள்ள காய்கறி அங்காடியை இடித்து விட்டு வணிக வளாகம் கட்டும் பணிக்காக முதலில் ரூ.9,05,50,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தீர்மானம் பெறப்பட்டுள்ளது. அதன் பின்னர் வடிவமைப்பு மாற்றப்பட்டு புதிதாக தரைதளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளம் ஆகிய கட்டுமான வடிவமைப்பு பெறப்பட்டு அவ்வரைபடத்திற்காக நேரில் கடைகளில் உரிமையாளர்களுக்கு விவரிக்கப்பட்டது. இதனை துணை ஆணையர் (பணிகள்) அவர்களால் 05.02.2015 அன்று அனைத்து உரிமையாளர்கள் முன்னிலையில் கருத்து கேட்கப்பட்டது. அதன் பின்னர் சில மாற்றங்கள் செய்து புதிய வடிவமைப்பு தரைதளம் மற்றும் இரண்டு தளங்கள் கொண்ட வணிகவளாக கட்டடம் கட்ட முடிவு செய்யப்பட்டது

தற்போது இப்பணிக்காக பொதுப்பணித்துறையின் கட்டட பரப்பளவு விலை விகித அடிப்படையில் 2015-2016 ஆம் ஆண்டின் தோராய விலை விவரப்படி ரூ.20,96,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்போது அந்த இடத்தில் உள்ள உரிமையாளர்களுக்கு மாற்று இடத்தில் கடைகள் அமைத்துதரப்படவேண்டும். மேலும், Bio metric முறையில் கடை உரிமையாளர்களை ஒழுங்கு படுத்தி வருவாய்த்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதன் பின்னர் பணி துவங்கப்பட வேண்டும்.

மேற்கண்ட பணிக்காக ஏற்கனவே அங்குள்ள பழைய கடைகளை இடித்துவிட்டு மார்க்கெட் மற்றும் வணிகவாளகம் கட்டுவதற்கும் மற்றும் 2015-2016 ஆம் ஆண்டின் பொதுப்பணித்துறையின் கட்டட பரப்பளவு விலை விகித அடிப்படையில் ரூ.20,96,00,000/–க்கு (ரூபாய் இருபது கோடியே தொண்ணூற்று ஆறு இலட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும் மற்றும் ஹட்கோ (HUDCO) போன்ற நிதி நிறுவனங்களிடம் கடன் பெறவும் அரசின் அனுமதி பெற தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் **20.08.2015** அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **31.08.2015** அன்று தீர்மான எண்**213/2015**ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.
>
> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் **21.08.2015** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **31.08.2015** அன்று தீர்மான எண்.**248/2015**ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண்.பி11/1664/2015**
**ஆணையர்(பொ) அவர்களின் 12.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.460/2015 **பொருள் எண்.11**

**மண்டலம்–11,வார்டு–151வளசர வாக்கத்தில் 100 படுக்கைகள் கொண்ட சமுதாய நல மைய மருத்துவமனை கட்டும் பணிக்கான மதிப்பீட்டிற்கு அனுமதி**

**வார்டு எண் :151** **மண்டலம் : 11**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர். | மண்டலம்–11, வார்டு–151 வளசரவாக்கத்தில் சமுதாய நல மைய மருத்துவமனை (100 Beds) கட்டும் பணி |
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை 2012-2013 அறிவிப்பு எண்.48 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்–11 |
| 4 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | பெறப்பட்டுள்ளது |
| 5 | தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல்முறை ஆணை மற்றும் நாள் | பின்னர் பெறப்படும் |
| 6 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2014 -2015 ஆம் ஆண்டின் பொதுப்பணித் துறையின் தோராய தரை பரப்பளவு விலைப்பட்டியல்களின் அடிப்படை விவரப்படி |
| 7 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 7,95,00,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ . 6,09,81,900.00 |
| | (ஆ) மேலான மேற்பார்வை செலவு | ரூ. 60,98,190.00 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | ரூ. 15,24,547.50 |
| | (ஈ) கலந்தறிதர் கட்டணம் | ரூ. 30,49,095.00 |
| | (ஊ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 6,09,819.00 |
| | (எ) தர நிர்ணயம் | ரூ. 6,09,819.00 |
| | (ஏ) எதிர்பாரா செலவு | ரூ. 15,88,077.50 |
| | (ஐ) மின்சாரம்/குடிநீர் இணைப்பு மற்ற பிற இனங்கள் | ரூ. 1,00,000.00 |
| | (ஒ) பிற இனங்கள் | ரூ. 30,49,095.00 |
| | மொத்தம் | ரூ. 7,95,00,000.00 |
| 8 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 9 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த வார்டு குழுவின் தீர்மான எண் மற்றும் நாள் | பெறப்படவுள்ளது |
| 10 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | புதிய பணி |
| 11 | நிதியின் தன்மை | அரசு மான்யம்(என்.யு.எச்.எம்) சுகாதாரத்துறை கட்டடங்கள் |

| | | |
|---|---|---|
| 12 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. 7,95,00,000.00 |

மேற்கண்ட பணிக்காக பொதுப்பணித்துறையின் தோராய தரை பரப்பளவு விலைப்பட்டியல்களின் அடிப்படையில் ரூ.7,95,00,000/–க்கு (ரூபாய் ஏழு கோடியே தொண்ணூற்று ஐந்து இலட்சம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள தோராய திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 19.08.2015 அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.39/2015ன்படி வார்டுகுழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (பொது சுகாதாரம்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.08.2015 அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்212/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.243/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.12.ந.க.எண்.ஆர்3/5267/2014**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 04.05.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.461/2015** **பொருள் எண்.12**

**வருவாய்த்துறை –மண்டலம்–12 , வார்டு–164 – நியூகாலனி பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி சமுதாய நலக்கூடம் – பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிப்பது – வாடகை நிர்ணயம் செய்வதற்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி, விரிவாக்கத்தின்படி, சென்னை மாநகராட்சி மண்டலம்–12ல் இணைக்கப்பட்டுள்ள காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வந்த நியூ காலனி சமுதாய நலக்கூடம், 25.10.2011 முதல் சென்னை மாநகராட்சி, மண்டலம்–12ல் பகுதி–37, வார்டு–164–ல் இணைக்கப்பட்டது. இச்சமுதாய நலக்கூடம் பொறியியல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு அதில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது 4.10.2014 அன்று மண்டலம்–12 வருவாய் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்கண்ட இடத்தினை கள ஆய்வு செய்யப்பட்டு 4720 ச.அடி பரப்பளவு கொண்ட சமுதாய நலக்கூடத்திற்கு உரிய வாடகை நிர்ணயம் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்காக உபயோகப்பட உள்ளது.

எனவே, மேற்கண்ட சமுதாய நலக்கூடம் சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் வரப்பெற்ற நிலையில், பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்களுக்கு பயன்படும் வகையில் பார்வையில் கண்டுள்ள மண்டலம்–12 வார்டு குழுவின் தீர்மான எண்.222 நாள்.17.12.2014–ன் படி மேற்கண்ட சமுதாய நலக்கூடத்திற்கு புதியதாக வாடகை நிர்ணயிக்கலாம் எனவும், ஏழை எளிய மக்களின் பயன்பாட்டிற்காக சமுதாய நலக்கூடத்தை, ஒரு நாள் வாடகையாக ரூ.8212/– எனவும் , அரை நாள் வாடகை ரூ.4106/– எனவும் நிர்ணயம் செய்ய 12–வது வார்டு குழுவின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்கண்ட சமுதாய நலக்கூடத்தின் உட்புற மற்றும் வெளிப்புற அமைப்பின் வண்ண புகைப்படங்கள் நடப்பு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, வார்டு எண்.164, நியூகாலனி பகுதியில் அமைந்துள்ள 4720 சதுர அடி பரப்பளவு கொண்ட சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாய நலக்கூடத்தினை பொது மக்களின் பயன்பாட்டிற்கு அனுமதிக்கும் பொருட்டு,

1. முழு நாள் (24 மணி நேரம்) வாடகை – ரூ. 8212/–
2. அரை நாள் (12 மணி நேரம்) வாடகை – ரூ. 4106/–

என வாடகை நிர்ணையித்து செய்து 12வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.222, நாள்.17.12.2014ல் ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே, மண்டலம்–12 , வார்டு–164ல் நியூகாலனி பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி சமுதாய நலக்கூடத்திற்கு 12வது மண்டல வார்டு குழு ஒப்புதல் அளித்துள்ள வாடகையை நிர்ணயம் செய்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிப்பதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "21.08.2015 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.242/2015, நாள்.21.08.2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/34421/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.462/2015** **பொருள் எண்.13**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

05.12.2014 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, திரு.எம். சங்கரபாபு, உதவி செயற்பொறியாளர், மண்டலம்–3 அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.08.2015 பிற்பகல் முதல் ஓய்வு பெறவுள்ளார்.

திரு. எம். சங்கரபாபு, உதவி செயற்பொறியாளர், மண்டலம்–3 அவர்கள், சென்னை மாநகராட்சி உதவி வரைவாளராக 25.02.1982 அன்று முதன்முதலில் பணியில் சேர்ந்துள்ளார். இளநிலை பொறியாளராக 16.08.1990 அன்று பதவி உயர்வு பெற்று, இப்பதவியில் 17.08.2000 அன்று தேர்வு நிலையும் மற்றும் 17.08.2010ல் சிறப்பு நிலையும் பெற்றுள்ளார். மேலும், உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று 15.05.2013 அன்று வடக்கு வட்டார அலுவலகத்தில் பணியில் சேர்ந்து, தற்போது மண்டலம்–3ல் பணிபுரிந்து வருகிறார்.

தனியர், சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த (25.02.1982 முதல் 31.08.2015 வரை) காலக்கட்டங்களில் கீழ் குறிப்பிட்டுள்ள அட்டவணையில் காணும் துறை/மண்டலங்களிலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை மற்றும் முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் / நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

**அட்டவணை**

| வ. எண். | பதவி | துறைகள் | பணியாற்றிய காலம் | |
|---|---|---|---|---|
| | | | முதல் | வரை |
| 1 | உதவி வரைவாளர் | பணித்துறை | 25.02.1982 | 30.07.1984 |
| 2 | உதவி வரைவாளர் | பணித்துறை (நகரமைப்பு) | 31.07.1984 | 11.05.1990 |
| 3 | வரைவாளர் | மண்டலம்–10 (பழைய மண்டலம்–8) | 12.05.1990 | 16.08.1990 |
| 4 | இளநிலை பொறியாளர் | கட்டிடத்துறை (மாற்றுப்பணி தலைமை பொறியாளர் (பொது) அலுவலகம்) | 16.08.1990 | 14.07.1994 |
| 5 | இளநிலை பொறியாளர் | மண்டலம்–10 (பழைய மண்டலம்–8) | 15.07.1994 | 29.05.1995 |
| 6 | இளநிலை பொறியாளர் | கட்டிடத்துறை (மாற்றுப்பணி தலைமை பொறியாளர், (பொது) அலுவலகம்) | 30.05.1995 | 14.05.2013 |
| 7 | உதவி செயற்பொறியாளர் | வடக்கு வட்டாரஅலுவலகம் | 15.05.2013 | 26.08.2014 |
| 8 | உதவி செயற்பொறியாளர் | மண்டலம்–3 | 27.08.2014 | இந்நாள் வரை (31.08.2015) |

திரு. எம். சங்கரபாபு, உதவி செயற் பொறியாளர், மண்டலம்–3, அவர்கள் பணிபுரிந்த துறை/மண்டலங்களிலிருந்து பெறப்பட்ட தணிக்கை தடைகள் முறையே கண்காணிப்பு பொறியாளர் (பணிகள்), மண்டல அலுவலர் 10, கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்), தலைமை பொறியாளர் (பொது), துணை ஆட்சியர் (நிர்வாகம்) (வடக்கு) ஆகியோர்களின் குறிப்புரைகளில், தனியர் பணியாற்றிய காலங்களில் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை எனவும், பிற்காலங்களில் இத்தனியர் மீதான தணிக்கைத் தடைகள் இருப்பது தெரியவந்தால் தனியரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யலாம் என்ற நிபந்தனைக்குட்படுத்தி தனிக்கைத்தடை குறிப்புகள் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

18.06.2015 நாளிட்ட சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமம் , விழிப்பு அலுவலர் அவர்களின் குறிப்பில், திரு. எம். சங்கரபாபு, உதவி செயற் பொறியாளர், பகுதி–6, மண்டலம்–3, அவர்களின் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. 15.07.2015 நாளிட்ட கூட்டுறவு சங்க கடிதத்தில் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஏதுமில்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

இத்தனியருக்கு உதவி வரைவாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 25.02.1982 அன்றைய தேதியில் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு 25.02.1984 அன்று தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் 33 ஆண்டுகள் 6 மாதம் 7 நாட்கள் மொத்த பணிக்காலம் முடித்துள்ளார்.

தனியர் வகித்துவரும் உதவி செயற்பொறியாளர் பதவியானது வகுப்பு 2ன்கீழ் வருவதால் இத்தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

07.08.2015 நாளிட்ட நிதி ஆலோசகர் அவர்களின் கடிதத்தில், தனியர் இளநிலை பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளராக மண்டலம் மற்றும் துறைகளில் பணிபுரிந்த காலங்களில் 2011–12ஆம் ஆண்டு முடியவுள்ள தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள் இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கைகளின்படி நிலுவை ஏதும் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2012–13 முதல் 2015–16ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையில் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை. தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை பத்திகள் நிலுவை இருப்பின் பொறுப்பு பணியாளரையே சாரும் எனவும், இதுகுறித்து மேல் நடவடிக்கை மேற்கொண்டு தணிக்கை தடைகளை நிவர்த்தி செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

10.08.2015 நாளிட்ட கடிதத்தில் திரு.எம்.சங்கரபாபு, உதவி செயற்பொறியாளர், மண்டலம்–3 இவர் மீதான நிதி சம்மந்தப்பட்ட தணிக்கை தடைகள், சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு இருப்பது நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவருமாயின் அத்தொகையினை அன்னாரது ஓய்வூதிய பணப்பயன்களில் இருந்து பிடித்தம் செய்துகொள்ள சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளார்.

மேற்காண் தனியரின் பணிப்பதிவேட்டினை ஆராய்ந்ததில், தனியர் பணிமாறுதலில், 14.07.1994–ல் கட்டிடத்துறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, 20.07.1994 அன்று மண்டலம்–8–ல் (தற்போது புதிய மண்டலம்–10) பணியில் சேர்ந்துள்ளார். இதற்கு இடைப்பட்ட காலமான 15.07.1994 முதல் 19.07.1994 வரை 5 நாட்கள் தனியர் விடுப்பு ஏதும் எடுத்ததிற்கான பதிவுகள் ஏதும் பணிப்பதிவேடில் காணப்படவில்லை. இருப்பினும், தற்போதைய மண்டலம்–10லிருந்து பெறப்பட்ட அறிக்கையில் தனியர் 15.07.1994 முதல் 29.05.1995 வரையிலான காலத்திற்கு தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, திரு. எம். சங்கரபாபு, உதவி செயற்பொறியாளர், மண்டலம்–3 அவர்கள் மீது சென்னை மாநகராட்சி, உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையினரால் தெரிவிக்கப்படும் தணிக்கைத் தடைகள்/நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில், அவற்றிற்கு தனியரை முழு பொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய தொகை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி, தனியரை 31.08.2015 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க, நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.15.ந.க.எண்.அ1/834/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 14.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.463/2015** **பொருள் எண்.14**

**நீதி மன்ற பேராணையின் அடிப்படையில் பஞ்சாயத்து செயலாளராக பணிபுரிந்து 30.04.2013ல் ஓய்வு பெற்ற திரு.பானுகுமார் அவர்களுக்கு ஒட்டு மொத்த தொகையாக ரூ.50,000/–மும் சிறப்பு ஓய்வூதியமாக மாதம் ரூ.700/– வழங்க அனுமதி**

திரு.கோ.பானுகுமார், செம்மஞ்சேரி ஊராட்சியில் 01.12.1987 முதல் 30.04.1988 வரை பகுதி நேர எழுத்தராகவும், 01.05.1988 முதல் 31.12.1990 வரை முழு நேர தற்காலிக எழுத்தராகவும் 01.01.1991 முதல் பஞ்சாயத்து உதவியாளராக மதிப்பூதியத்திலும், 01.01.1996 முதல் 31.12.2011 வரை பஞ்சாயத்து உதவியாளராக வரையறுக்கப்பட்ட ஊதிய விகிதங்களிலும் பணிபுரிந்துள்ளார்.

சென்னை மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டபோது செம்மஞ்சேரி ஊராட்சியில் பணிபுரிந்த திரு.கோ.பானுகுமார், பஞ்சாயத்து செயலர் அவர்களை 08.03.2012 நாளிட்ட சுற்றறிக்கையின்படி மண்டலம்–15 பணியிலிருந்து விடுவிக்க தெரிவிக்கப்பட்டது. 12.03.2012 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி சென்னை மாநகராட்சி மண்டலம்–15 பணியிலிருந்து திரு.கோ.பானுகுமார் 12.03.2012 அன்று பிற்பகல் விடுவிக்கப்பட்டார்.

17.08.2012 நாளிட்ட சென்னை உயர்நீதிமன்ற பேராணை மனு எண்.W.P. 18300/12 மற்றும் M Pros 1/2012 மற்றும் 2/2012 ஆகியவற்றின் மீது .17.08.2012 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் படியும், திரு.கோ.பானுகுமார் அவர்கள் விருப்பம் தெரிவித்தன் படியும் அரசின் ஆணைகளுக்குட்பட்டு 11.09.2012 நாளிட்ட சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின் படி, சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ல் 14.09.2012 அன்று பஞ்சாயத்து செயலாளராக மீண்டும் பணியில் சேர்ந்தார்.

12.12.2012 நாளிட்ட சென்னை மாநகராட்சி பொதுத்துறை சுற்றறிக்கைபடி மண்டலம்–15லிருந்து திரு. கோ. பானுகுமார் அவர்கள் 30.04.2013 அன்று பிற்பகல் ஓய்வு பெற அனுமதியளிக்கப்பட்டது. 25.03.2014 நாளிட்ட இணை இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக் கடிதத்தில், தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 1978–ன் படி ஊராட்சிகளில் பணி புரியும் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் பெறத்தகுதி இல்லாததால், அன்னாருக்கு ஓய்வூதியத் தணிக்கை சான்று வழங்க வேண்டிய கேள்வி எழவில்லை எனவும், ஊராட்சிகளில் பணி புரிந்து ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு விதிகளின்படி வழங்கப்படும் Exgratia தொகை வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் உயர்நீதி மன்றத்தில் நீதிப்பேராணை எண்.W.P.No.26757 of 2014 and M.P.No.1 of 2014 ன் படி தொடர்ந்த வழக்கில் 25.11.2014 அன்று பிறப்பித்த உத்தரவில் கீழ்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது.

**"…Considering the submissions made by the learned counsel appearing on either side, without going into merits of the case, a direction is issued to the 1st respondent to pass appropriate orders on the representation of the petitioner dated 22.07.2013 and on the proposal of the Ward Committee, Chennai City Municipal Corporation dated 12.08.2013 by taking into consideration of the provisions of the Chennai City Municipal Corporation Act, 1919 within a period of eight weeks from the date of receipt of copy of this order.**

**The writ petition is disposed of accordingly, No costs. Consequently, the connected miscellaneous petition is closed…"**

24.06.2015 நாளிட்ட உள்ளாட்சி நிதி தணிக்கை துறை இணை இயக்குனர்(பொ) அவர்களின் கடிதத்தில் அரசாணை (நிலை) எண்.22, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நாள்.14.02.2011ன்படி கிராம ஊராட்சிகளில் ஊராட்சி உதவியாளர்களாக (அரசு ஆணை எண்.52, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நாள்.29.08.2011ன் படி ஊராட்சி உதவியாளர் பணியிடம் ஊராட்சி செயலராக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது) ஊராட்சி செயலராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறுபவர்களுக்கு ஒட்டு மொத்த தொகையாக ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் சிறப்பு ஓய்வூதியமாக மாதம் ரூ.700/– (ரூபாய் எழுநூறு மட்டும் ) 14.02.2011 முதல் வழங்கலாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

**அரசாணையின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு :**

(அ) " வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறும் போது ஒட்டு மொத்தத் தொகையாக ரூ.50,000/– ( ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும் ) வழங்கப்படும் .

(ஆ) சிறப்பு ஓய்வூதியமாக பிரதி மாதம் ரூ.700/– ( ரூபாய் எழுநூறு மட்டும் ) வழங்கப்படும் .

(இ) பணியிலுள்ள ஊராட்சி உதவியாளர்களுக்கு மருத்துவப்படி மாதம் ரூ. 100/–(ரூபாய் நூறு மட்டும் வழங்கப்படும் "

மேலும், உள்ளாட்சித் தணிக்கைத்துறை இணை இயக்குநர் (பொ) அவர்களின் 24.06.2015 நாளிட்ட கடிதத்தில் ஊராட்சியில் பணிபுரிந்து பின்னர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட ஊராட்சியில் பணிபுரிந்த பணியாளர்கள் மாநகராட்சிக்கு ஈர்க்கப்பட்டிருப்பின், மாநகராட்சி பணியாளராக தகுதி பெறுவதற்கு முன்பே ஓய்வு பெறும் இவரை போன்ற பிற ஊராட்சி செயலர்களுக்கும், பணியாளர்களுக்கும் மேற்படி அரசாணையினை நடைமுறைபடுத்துவது குறித்து மாநகராட்சி மாமன்றத் தீர்மானத்தில் முடிவு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.22, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, நாள்.14.02.2011 மற்றும் உள்ளாட்சி நிதி, தணிக்கைத்துறை இணை இயக்குநர் (பொ) கருத்துரைபடியும் திரு.கோ.பானுகுமார் பஞ்சாயத்து செயலர் அவர்களுக்கு ஒட்டுமொத்த தொகை ரூ.50000/– மற்றும் சிறப்பு ஓய்வூதியம் மாதம் ரூ.700/– ஆகியவை வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/12426/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.464/2015** **பொருள் எண்.15**

**ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டதால் திரு.பி.பானுகுமார், உதவி செயற்பொறியாளர், அவர்களின் பெயரை 2015–2016ம் ஆண்டின் செயற்பொறியாளர் தெரிவு பட்டியலில் சேர்த்து கருத்தியலான பதவி உயர்வு வழங்கவும் திருத்திய தெரிவு பட்டியல் வெளியிடவும் அனுமதி**

30.04.2015 நாளிட்ட மன்றத்தீர்மானத்தில், 2015–2016 ஆம் ஆண்டின் செயற்பொறியாளர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியல் மன்ற தீர்மான எண்.217/2015 நாள்.30.04.2015 வாயிலாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | உதவி செயற் பொறியாளரின் பெயர் (திருவாளர்கள்) | உதவி செயற் பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | அரசாணை (ப) எண்.177, நாள்.16.03.2015ன்படி தனியர் உதவி செயற் பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 01 | பி.சிவசங்கர், திடக்கழிவு மேலாண்மை துறை, தலைமையிடம். | 23.05.2005 | – | செயற்பொறியாளர் பதவி உயர்வு (30.04.2015) |
| 02 | எம்.புகழேந்தி, மண்டலம்–9. | 01.09.2005 | – | செயற்பொறியாளர் பதவி உயர்வு (30.04.2015) |
| 03 | பி.சிவக்குமார், தரக்கட்டுப்பாடு. | 22.05.2007 | – | செயற்பொறியாளர் பதவி உயர்வு (30.04.2015) |
| 04 | கே.வெற்றிஎழிலன், மண்டலம்–7. | 18.05.2007 | – | செயற்பொறியாளர் பதவி உயர்வு (30.04.2015) |
| 05 | ஆர்.சுபாஷ், மண்டலம்–11. | 06.02.2009 | – | செயற்பொறியாளர் பதவி உயர்வு (30.04.2015) |
| 06 | வி.பெரியசாமி, மண்டலம்–10. | 08.02.2010 | 08.02.2010 | - |
| 07 | ஜெ.ராமமூர்த்தி, பேருந்து சாலைகள்துறை த/இ | 08.02.2010 | 08.02.2010 | - |
| 08 | பி.பாசு திட்டம், தலைமையிடம் | 16.12.2010 | 08.02.2010 | - |
| 09 | ஆர்.எ.பிரபாகர், இயந்திர பொறியியல் துறை, தலைமையிடம் | 16.12.2010 | 08.02.2010 | - |
| 10 | வி.சின்னதுரை, மழைநீர் வடிகால்துறை, தலைமையிடம். | 16.12.2010 | 08.02.2010 | - |
| 11 | டி.வேலுச்சாமி, | 16.12.2010 | 08.02.2010 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | தி.க.மே.துறைதலைமையிடம், | | | |
| 12 | எல்.ஸ்ரீதரன், மத்திய வட்டார அலுவலகம் | 20.12.2010 | 08.02.2010 | - |
| 13 | ஆர்.ஜெயக்குமார், கட்டடத்துறை. | 16.12.2010 | 08.02.2010 | - |
| 14 | சி.சொக்கலிங்கம்பிள்ளை மண்டலம்–5. | 02.02.2011 | 08.02.2010 | - |
| 15 | எம்.பழனி, வடக்கு வட்டார அலுவலகம். | 02.02.2011 | 08.02.2010 | - |
| 16 | கே.கார்த்திகேயன், மண்டலம்–6. | 28.01.2011 | 08.02.2010 | - |
| 17 | எம்.முத்துகிருஷ்ணன், இயந்திர பொறியியல் துறை, தலைமையிடம் | 20.04.2011 | 08.02.2010 | - |
| 18 | வி.கண்ணையன், திடக்கழிவு மேலாண்மைத்துறை, தலைமையிடம் | 28.01.2011 | 08.02.2010 | - |
| 19 | ட்டி.பத்மநாபன் மழைநீர்வடிகால்துறை தலைமையிடம் | 11.07.2011 | 08.02.2010 | - |
| 20 | எஸ்.குமாரசாமி மழைநீர்வடிகால்துறை தலைமையிடம் | 24.02.2011 | 08.02.2010 | - |

இந்த தெரிவுப்பட்டியலில்2015–2016ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கு தெரிவுபட்டியல் தயாரிக்கும் தருவாயில் (மைய நாள்.01.04.2015) திரு.பி.பானுக்குமார், உதவி செயற்பொறியாளர் (கருத்தியலாக உதவி செயற்பொறியாளர் பணிநியமன நாள் **08.02.2010)** அவர்கள் மீது மண்டலம்–9, பகுதி– 21, கோட்டம்–111ல் உள்ள நுங்கம்பாக்கம்,ஹாடோஸ் சாலை 2வது தெருவிலுள்ள ராயல் பார்க் ரிஜென்சி குழும ஹோட்டல் விதிமுறைக்கு புறம்பாக தரை தளம் மற்றும் 4 அடுக்கு மாடி கட்டிடமாக கட்டப்பட்டு செயல்பட்டு கொண்டிருந்த கட்டிடத்திற்கு, குடியிருப்பு கட்டிடமாக வரைபடம் அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கப்பட்ட இடத்தை வணிக பயன்பாட்டிற்கு அனுமதி வழங்க பரிந்துரை செய்து அக்கட்டிடத்திற்கு வணிக பயன்பாடு உரிமம் வழங்குவதற்கு காரணமாக இருந்ததற்காக இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்புத்துறை அரசுக்கு அறிக்கை அனுப்பியதை தொடர்ந்து, மண்டலம்–9ல் உதவி செயற்பொறியாளர் ஆக பணிபுரிந்த திரு.பி.பானுகுமார், மீது சென்னை மாநகராட்சி பணியமைப்பு (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970, துணை விதி 10(b)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிலுவையிலிருந்ததால், 2015–2016 ஆம் ஆண்டிற்கான செயற் பொறியாளர் பதவிக்காக தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியலில் தனியரின் பெயரை சேர்க்காமல் ஒத்தி வைக்கப்பட்டு மன்றத் தீர்மானம் எண்.217/15, நாள்:30.04.2015ல் நிறைவேற்றப்பட்டது.

19.06.2013 நாளிட்ட குற்றசாட்டு குறிப்பாணை மீது 05.07.2013 நாளிட்ட தனியரின் தன்னிலை விளக்கம் அளித்துள்ளார். 25.10.2015 நாளிட்ட விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கையில் தனியரின் மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிருபிக்கப்படவில்லை என நிராகரித்து 20.07.2015 நாளிட்ட அரசாணை(ப) எண்.459, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.4) துறை, நாள்:20.07.2015ல் **தனியரின் மீதான குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்குமாறு ஆணை** பிறப்பிக்கப்பட்டுள்ளது.

20.07.2015 நாளிட்ட அரசாணையின் அடிப்படையில், 12.08.2015 நாளிட்ட சென்னை மாநகராட்சி ஆணையர்(பொறுப்பு) அவர்களின் செயல்முறை ஆணையின்படி, தனியரின் மீது தொடரப்பட்டிருந்த ஒழுங்கு நடவடிக்கையில் ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் **தனியரின் மீதான குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டு ஆணை** பிறப்பிக்கப்பட்டுள்ளது.

14.08.2015 நாளிட்ட கடிதத்தில், திரு.பி.பானுக்குமார், உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற் பொறியாளர் (பொறுப்பு) திடக்கழிவு மேலாண்மை துறை தலைமை அலுவலகம் சென்னை மாநகராட்சி அவர்கள் தன்மீது நிலுவையிலிருந்து தொடரப்பட்டிருந்த ஒழுங்கு நடவடிக்கையில் ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் மீது மேல்நடவடிக்கை நிறுத்தப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால், செயற்பொறியாளர் பதவிக்கு 2015–2016 ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியலில் தனியரின் பெயரை சேர்த்து, மூப்பு நிலை நிர்ணயம் செய்து, செயற்பொறியாளர் பதவியில் கருத்தியலாக மன்றத் தீர்மானம் எண்.217/2015 நாள்.30.04.2015 ன்படி செயற்பொறியாளராக பதவி உயர்வு வழங்குமாறு கோரியுள்ளார்.

சென்னை மாநகராட்சியில் 2015–2016 ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு 30.04.2015 நாளிட்ட மன்றத் தீர்மானத்தில் ஒப்புதல் பெறப்பட்டு தெரிவுப்பட்டியலில் இடம்பெற்றிருந்த 5 உதவி செயற்பொறியாளர்களுக்கு சென்னை மாநகராட்சி முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி செயற்பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண். | உதவி செயற் பொறியாளரின் பெயர் (திருவாளர்கள்) | குறிப்பு |
|---|---|---|
| 01 | பி.சிவசங்கர், திடக்கழிவு மேலாண்மை துறை,(கு.இ) | செயற்பொறியாளர் பதவி உயர்வு (30.04.2015) |
| 02 | எம்.புகழேந்தி,மண்டலம்–9. | செயற்பொறியாளர் பதவி உயர்வு (30.04.2015) |
| 03 | பி.சிவக்குமார் தரக்கட்டுப்பாடு. | செயற்பொறியாளர் பதவி உயர்வு (30.04.2015) |
| 04 | கே.வெற்றிஎழிலன், மண்டலம்–7. | செயற்பொறியாளர் பதவி உயர்வு (30.04.2015) |
| 05 | ஆர்.சுபாஷ், மண்டலம்–11. | செயற்பொறியாளர் பதவி உயர்வு (30.04.2015) |

செயற்பொறியாளர் பதவிக்கு இறுதி தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் போது திரு.பி.பானுக்குமார், உதவி செயற்பொறியாளர் அவர்களின் பெயர் உதவி செயற்பொறியாளர்களின் பணிமூப்புபட்டியலில் வ.எண்.11ல் இடம் பெற்றிருந்தது. தனியர் மீது சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 துணை விதி எண். 10(b)ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்ததால் தனியரது பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்க்க தகுதியற்றவராக கருதி தவிர்க்கப்பட்டது.

19.06.2013 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைகளின்படி, திரு.பி.பானுக்குமார், உதவி செயற்பொறியாளர், அவர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் 12.08.2015 நாளிட்ட செயல்முறை ஆணை மூலமாக கைவிடப்பட்டதால், 30.04.2015 நாளிட்ட மன்ற தீர்மான எண்.217/2015 ஒப்புதல் அளிக்கப்பட்ட 2015–2016ஆம் ஆண்டிற்கான செயற் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில், திரு.பி.பானுக்குமார், உதவி செயற்பொறியாளர் அவர்களின் உடனடி இளையவரான (Immediate Juniors) திரு.ஜெ.ராமமூர்த்தி, அவர்களுக்கு முன்னதாக முன்தேதியிட்டு (with retrospective effect from the date on which his juniors were promoted) அரசாணை எண்.368 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள் 18.10.93ல் தெரிவித்துள்ளவாறு, கருத்தியலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

தற்போது செயற்பொறியாளர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியலில், தனியரின் இளையவரான திரு ஜெ.ராமமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் அவர்களுக்கு தற்போது செயற்பொறியாளர் காலிப்பணியிடம் ஏதும் இல்லாததால், அன்னாருக்கு செயற்பொறியாளராக இதுநாள் வரை பதவி உயர்வு வழங்கப்படவில்லை.

எனவே, திரு.பி.பானுக்குமார், உதவி செயற்பொறியாளர், அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை கோப்புகள் மீது மேல்நடவடிக்கை கைவிடப்பட்டதின் அடிப்படையில், 30.04.2015 நாளிட்ட மன்ற தீர்மான எண்.217/2015 ஒப்புதல் அளிக்கப்பட்ட செயற்பொறியாளர் இறுதி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள **வரிசை எண்.6ல் உள்ள திரு.வி.பெரியசாமி உதவி செயற்பொறியாளர் அவர்களின் பெயருக்கு பின்னரும் வரிசை எண்.07ல் உள்ள திரு.ஜெ.ராமமூர்த்தி உதவி செயற்பொறியாளர்** உடனடி இளையவர் (Immediate Junior) **அவர்களின் பெயருக்கு முன்னால் வரிசை எண்.6Aல்** திரு.பி.பானுக்குமார், உதவி செயற்பொறியாளர் மூப்புநிலை நிர்ணயம் செய்து செயற் பொறியாளராக பதவிக்கு கீழ்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ள தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்க்க மன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக்குழு மூலமாக மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறிப்பில் முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

திரு.பி.பானுக்குமார், உதவி செயற் பொறியாளர் அவர்களுக்கு செயற்பொறியாளர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியலில், அவரது மூப்புநிலை நிர்ணயம் செய்யும்பட்சத்தில் தெரிவுப்பட்டியல் பின்வருமாறு அமையும்.

| வ. எண். | உதவி செயற் பொறியாளரின் பெயர் (திருவாளர்கள்) | உதவி செயற் பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | அரசாணை (ப) எண்.177, நாள்.16.03.2015ன்படி தனியர் உதவி செயற் பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 01 | பி.சிவசங்கர், தி.க.மே.துறை தலைமையிடம் | 23.05.2005 | – | செயற்பொறியாளர் பதவி உயர்வு (30.04.2015) |
| 02 | எம்.புகழேந்தி, மண்டலம்–9. | 01.09.2005 | – | செயற்பொறியாளர் பதவி உயர்வு (30.04.2015) |
| 03 | பி.சிவக்குமார், தரக்கட்டுப்பாடு. | 22.05.2007 | – | செயற்பொறியாளர் பதவி உயர்வு (30.04.2015) |
| 04 | கே.வெற்றிஎழிலன், மண்டலம்–7. | 18.05.2007 | – | செயற்பொறியாளர் பதவி உயர்வு (30.04.2015) |
| 05 | ஆர்.சுபாஷ், மண்டலம்–11. | 06.02.2009 | – | செயற்பொறியாளர் பதவி உயர்வு (30.04.2015) |
| 06 | வி.பெரியசாமி, மண்டலம்–10. | 08.02.2010 | 08.02.2010 | - |
| **6A** | **பி.பானுக்குமார்** | 08.02.2010 | 08.02.2010 | |
| 07 | ஜெ.ராமமூர்த்தி, பேருந்து சாலைகள்துறை த/இ | 08.02.2010 | 08.02.2010 | - |
| 08 | பி.பாசு திட்டம், தலைமையிடம் | 16.12.2010 | 08.02.2010 | - |
| 09 | ஆர்.எ.பிரபாகர், இயந்திர பொறியியல் துறை, தலைமையிடம் | 16.12.2010 | 08.02.2010 | - |
| 10 | வி.சின்னதுரை, மழைநீர் வடிகால்துறை, தலைமையிடம். | 16.12.2010 | 08.02.2010 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | டி.வேலுச்சாமி, தி.க.மே.துறை தலைமையிடம் | 16.12.2010 | 08.02.2010 | - |
| 12 | எல்.ஸ்ரீதரன், மத்திய வட்டார அலுவலகம் | 20.12.2010 | 08.02.2010 | - |
| 13 | ஆர்.ஜெயக்குமார், கட்டடத்துறை | 16.12.2010 | 08.02.2010 | - |
| 14 | சி.சொக்கலிங்கம்பிள்ளை மண்டலம்–5. | 02.02.2011 | 08.02.2010 | - |
| 15 | எம்.பழனி, வடக்கு வட்டார அலுவலகம். | 02.02.2011 | 08.02.2010 | - |
| 16 | கே.கார்த்திகேயன், மண்டலம்–6. | 28.01.2011 | 08.02.2010 | - |
| 17 | எம்.முத்துகிருஷ்ணன், இயந்திர பொறியியல் துறை, தலைமையிடம் | 20.04.2011 | 08.02.2010 | - |
| 18 | வி.கண்ணையன், திடக்கழிவு மேலாண்மைத்துறை, தலைமையிடம் | 28.01.2011 | 08.02.2010 | - |
| 19 | ட்டி.பத்மநாபன் மழைநீர்வடிகால்துறை தலைமையிடம் | 11.07.2011 | 08.02.2010 | - |
| 20 | எஸ்.குமாரசாமி மழைநீர்வடிகால்துறை தலைமையிடம் | 24.02.2011 | 08.02.2010 | - |

எனவே, திரு.பி.பானுக்குமார், உதவி செயற்பொறியாளர் அவர்களின் பெயரை 2015-2016 ஆம் ஆண்டின் செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் சேர்த்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ3/33006/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.465/2015 **பொருள் எண்.16**

**பணியமைப்பு**

அரசாணை (வாலாயம்) எண்.2743, பொது (சிறப்பு–அ) துறை, நாள்.21.07.2015ன்படி, திரு.எம்.முகமது பாதுஷா, மாவட்ட வருவாய் அலுவலர் / முதுநிலை மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், தஞ்சாவூர், அவர்கள், சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலவராக மண்டலம்–2ல் அயற்பணியில் 03.08.2015 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

'' இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவு மற்றும் தகவலுக்காக வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதனை மன்றம் பதிவு செய்கின்றது''

*******

**பொ.து.ந.க.எண். ஈ3 / 30380 / 2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.466/2015 **பொருள் எண்.17**

**பணியமைப்பு**

அரசாணை (வாலாயம்) எண்.2744, பொது (சிறப்பு–அ) துறை, நாள்.21.07.2015ன்படி, திருமதி.வெ.கஸ்தூரி, துணை ஆட்சியர் / ஈரோடு மாவட்ட ஆட்சியரின் முன்னாள் நேர்முக உதவியாளர் (பொது) அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலராக பதவி உயர்வு பெற்று, சென்னை மாநகராட்சியில் உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) ஆக அயற்பணியில் 23.07.2015 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

'' இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவு மற்றும் தகவலுக்காக வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதனை மன்றம் பதிவு செய்கின்றது''

*******

**பொ.து.ந.க.எண். ஈ3 / 32747 / 2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.467/2015 **பொருள் எண்.18**

**பணியமைப்பு**

அரசாணை (வாலாயம்) எண்.2744, பொது (சிறப்பு–அ) துறை, நாள்.21.07.2015ன்படி, திருமதி.எஸ்.முத்துமாரி, துணை ஆட்சியர்/உதவி ஆணையர் (ஆயத்துறை), இராமநாதபுரம், அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலராக பதவி உயர்வு பெற்று, சென்னை மாநகராட்சி, நிலம் மற்றும் உடைமைத்துறையில், மாவட்ட வருவாய் அலுவலர் ஆக அயற்பணியில் 31.07.2015 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவு மற்றும் தகவலுக்காக வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண். ஈ3 / 31486 / 2015**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.468/2015 **பொருள் எண்.19**

**பணியமைப்பு**

அரசாணை (வாலாயம்) எண். 2744, பொது (சிறப்பு–அ) துறை, நாள்.21.07.2015ன்படி, திரு.ட்டி.செங்கோட்டையன், துணை ஆட்சியர்/மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், சேலம் அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலராக பதவி உயர்வு பெற்று, சென்னை மாநகராட்சியில் மண்டல அலுவலவராக மண்டலம்–9ல் அயற்பணியில் 29.07.2015 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

'' இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவு மற்றும் தகவலுக்காக வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதனை மன்றம் பதிவு செய்கின்றது''
*******

**பொ.து.ந.க.எண். ஈ3 / 33007 / 2015**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.469/2015 **பொருள் எண்.20**

**பணியமைப்பு**

கூடுதல் தலைமைச் செயலாளர் / நில நிர்வாக ஆணையர் மற்றும் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் (பொ) அவர்களின் கடிதம், எண்.பணி1(3)/DC69/2015, நாள்.24.07.2015ன்படி, திரு.ஆர்.ரவிகண்ணன், வட்டாட்சியர், விழுப்புரம் மாவட்ட வருவாய் அலகு அவர்கள் துணை ஆட்சியராக பதவி உயர்வு பெற்று, சென்னை மாநகராட்சியில் மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில் துணை ஆட்சியர் (நிர்வாகம்) ஆக அயற்பணியில் 03.08.2015 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவு மற்றும் தகவலுக்காக வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது"
*******

**ப.து.ந.க.எண்/170/2015**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 20.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.470/2015 **பொருள் எண்.21**

**தானப்பத்திரம்**

மண்டலம்–2, வார்டு–15ல் திரு. A.வேணுகோபால் மற்றும் திரு.V.சரவணன் அவர்கள் சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டார அலுவலகத்தில் திட்ட அனுமதி விண்ணப்பம் SD/WDCN02/00215/2015, நாள்.04.05.2015ல் நில அளவை எண். S.No's. 24/6, 24/7, 24/8, 25/3, 34/1, 35/1, 36/3B, இடையஞ்சாவடி கிராமம் என்ற இடத்தில் மனைப்பிரிவு செய்ய விண்ணப்பித்துள்ளார். வடக்கு வட்டார அலுவலகத்தில் கூர்ந்தாய்வு செய்ததில் விண்ணப்பதாரர் மேற்படி மனையினை மனைபிரிவிற்கு உட்படுத்தும்போது நிலத்திற்கு அணுகுவதற்கு அணுகு சாலை 4006 சதுர மீட்டர் பரப்பளவும், மனை பிரிவில் புதியதாக அமைக்கப்படும் சாலைக்கென 535.63 ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய வேண்டும்.

இது தொடர்பாக, கீழ்க்காணும் புல எண்களின் விண்ணப்பதாரர்கள் நிலத்தினை தானமாக சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்திட ஒப்புதல் அளித்துள்ளார்.

அணுகுசாலைக்கான நிலம்:–

| வ.எண் | புல எண் | பரப்பளவு |
|---|---|---|
| 1 | 24/6,7,8 | 930.58 சதுர மீட்டர் |
| 2 | 25/3 | 2225.30 சதுர மீட்டர் |
| 3 | 34/1 | 849.666 சதுர மீட்டர் |
| | மொத்தம் | 4006 சதுர மீட்டர் |

மனைபிரிவில் புதிய சாலைக்கான நிலம்:–

| வ.எண் | புல எண் | சாலையின் பரப்பளவு |
|---|---|---|
| 1 | 35/1 | 455.63 சதுர மீட்டர் |
| 2 | 36/3B | 80.00 சதுர மீட்டர் |
| | மொத்தம் | 535.63 சதுர மீட்டர் |

இதற்கு 2வது வார்டு குழுவும் பரிந்துரை செய்துள்ளது. (தீர்மானம் எண்.058, நாள்.07.07.2015) சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலத்தினை சென்னை மாநகராட்சி தானப்பத்திரம் மூலம் எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்–2, வார்டு–15க்கு உட்பட்ட இடையஞ்சாவடி கிராமம், நில அளவை எண். S.No's. 24/6, 24/7, 24/8, 25/3, 34/1, 35/1, 36/3Bல் அமைந்துள்ள இடத்தில் அணுகு சாலைக்கென உள்ள 4006 ச.மீ. பரப்பளவும், புதியதாக சாலைக்கென ஒதுக்கப்பட்ட 535.63 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தினை தானப்பத்திரம் மூலம் சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளவும்,
2. மேற்படி இடத்தின் சாலை அபிவிருத்தி பணிக்காக ஆகும் செலவுத் தொகையான ரூ.48,00,000/– ஐ (ரூபாய் நாற்பத்து எட்டு இலட்சம் மட்டும்) மனுதாரரிடம் வசூல் செய்திடவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) வின் கூட்டம் 17.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.32/2015ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ப.து.ந.க.எண்/153/2015**

**ஆணையர் (பொ) அவர்களின் 12.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.471/2015 **பொருள் எண்.22**

**தானப்பத்திரம்**

மண்டலம்–4, கோட்டம்–45ல் ஸ்ரீ சூர்யா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரதிநிதியான திரு.குமரவேல், பழைய கதவு எண். 14, புதிய கதவு எண்.14, ஸ்டீபன்சன் சாலை, சென்னை புரசைவாக்கம்–பெரம்பூர் வட்டத்தில் R.S.No.505/13, Block No.26, பெரம்பூர் கிராமம் என்ற இடத்தில், திட்ட மற்றும் கட்டட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டார அலுவலகத்தில் PPA/WDCN04/06047/2014, நாள்.25.08.2014ல் விண்ணப்பித்துள்ளார். அவர் திட்ட மற்றும் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய ஸ்டீபன்சன் சாலை "சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம்–II"ன்படி 18மீ சாலையாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தான பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும். எனவே, ஸ்ரீ சூர்யா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரதிநிதியான திரு.குமரவேல், மனை உரிமையாளர் அவர்கள் சாலை விரிவாக்கம் செய்ய (நீளம்1.23மீ×அகலம்12.10மீ) 14.88ச.மீ. நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தானப்பத்திரம் மூலம் எடுத்துக் கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க வ.வ.அ.ந.க.எண்.இ8/3260/2015 கடிதத்தில் நிலம் மற்றும் உடமைத் துறைக்கு வடக்கு வட்டார அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்டது.

நி.ம.உ.து.ந.க.எண்.DA1/1378/2015, நாள்.30.06.2015ல் நிலம் மற்றும் உடைமைத் துறையிலிருந்து பணித்துறைக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கு வேண்டி அளிக்கப்படும் நிலத்தினை ஸ்ரீ சூர்யா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரதிநிதியான திரு.குமரவேல் அவர்களிடமிருந்து சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் ஸ்ரீ சூர்யா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரதிநிதியான திரு.குமரவேல் அவர்களிடமிருந்து பழைய கதவு எண். 14, புதிய கதவு எண்.14, ஸ்டீபன்சன் சாலை, புரசைவாக்கம், சென்னை புரசைவாக்கம்–பெரம்பூர் வட்டத்தில் R.S.No.505/13, Block No.26, பெரம்பூர் கிராமத்தில் உள்ள 14.88 ச.மீ பரப்பளவு நிலத்தினை சாலை விரிவாக்கத்திற்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனமான **ரூ.27,000/–** யை "ஆணையர் சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக விண்ணப்பதாரரிடம் இருந்து பெற்று கொள்ளவும்,

(3) தானமாக வழங்கிய நிலத்திற்கு தளப்பரப்பு குறியீடு (FSI) உபயோகப்படுத்தாததால் நிலத்தின் உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு "வளர்ச்சி உரிமை சான்றிதழ்" சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க வேண்டி பரிந்துரைப்பதற்கும்,

மேற்கண்ட (1) முதல் (3) வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) வின் கூட்டம் 17.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.31/2015ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ப.து.ந.க.எண்/139/2015**

**ஆணையர் (பொ) அவர்களின் 12.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.472/2015 **பொருள் எண்.23**

**தானப்பத்திரம்**

மண்டலம்–5, கோட்டம்–57ல் திரு. V.T. ராமகிருஷ்ணன் அவர்களின், பழைய கதவு எண். 190, புதிய கதவு எண்.12,அண்ணாபிள்ளை தெரு, கொத்தவால்சாவடி, சௌகார்பேட்டை, சென்னை–600 001, புரசைவாக்கம் வட்டம், Re.S.No.5733, Block No.50, வ.உ.சி.நகர் கிராமம், என்ற இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கும், திட்ட மற்றும் கட்டிட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டார அலுவலகத்தில் PPA/WDCN05/01955/2015, நாள்.27.03.2015ல் விண்ணப்பித்துள்ளார். இந்த விண்ணப்பம் வடக்கு வட்டார அலுவலகத்தில் உள்ள நகரமைப்பு பிரிவின் மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விரிவான வளர்ச்சி திட்ட வரைபடத்தின் வழிகாட்டுதலின் மூலம் ''சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம்–II''ன்படி 18மீ சாலையாக விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று உள்ளது. மேலும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தான பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும். எனவே, திட்ட மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்துள்ள மனையிலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய (6.10மீ×2.65மீ=16.16ச.மீ) 16.16 ச.மீ பரப்பளவு நிலத்தினை தானபத்திரத்தின் மூலம் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க மனுதாரர் விருப்பம் தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

வ.வ.அ.ந.க.எண்.இ8/4411/2015, நாள்.22.05.2015 கடிதத்தின்படி, வடக்கு வட்டார அலுவலகத்திலிருந்து மேற்கண்ட விவரங்களுடன் இக்கோப்பு நிலம் மற்றும் உடைமை துறைக்கு தொடர் மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது. மேலும், நி.ம.உ.து.ந.க.எண்.DA-1/2054/2015, நாள்.30.06.2015 கடிதத்தின்படி நிலம் மற்றும் உடைமை துறைக்கு வரப்பெற்ற கோப்புகளின் மீது துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) அவர்களின் அறிவுறுத்தலின்படி உடனடியாக தீர்வு பெறும் பொருட்டு உரிய மேல் நடவடிக்கைக்காக இக்கோப்பு நிலம் மற்றும் உடைமை துறையிலிருந்து பணித்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே,

(1) திரு.V.T.ராமகிருஷ்ணன் என்பவரிடம் இருந்து தான பத்திரம் மூலம் பழைய கதவு எண்.190, புதிய கதவு எண்.12, அண்ணாபிள்ளை தெரு, கொத்தவால்சாவடி, சௌகார்பேட்டை, சென்னை–600 001, Re.S.No.5733, Block No.50, வ.உ.சி.நகர் கிராமத்தில் அமைந்துள்ள மனையில் 16.16 ச.மீ. பரப்பளவு நிலத்தினை சாலை விரிவாக்கத்திற்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செவாகும் செலவீனம் ரூ. 29,000/– யை ''ஆணையர் சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் வரைவு காசோலையாக மனை உரிமையாளரிடமிருந்து பெற்று கொள்ளவும்,

(3) தானமாக வழங்கிய நிலத்திற்கு தளப்பரப்பு குறியீடு (FSI) உபயோகப்படுத்தாததால் நிலத்தின் உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழ்'' சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க வேண்டி பரிந்துரைப்பதற்கும்,

மேற்கண்ட (1) முதல் (3) வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) வின் கூட்டம் 17.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.29/2015ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ப.து.ந.க.எண்/146/2015**

**ஆணையர் (பொ) அவர்களின் 12.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.473/2015 **பொருள் எண்.24**

**தானப்பத்திரம்**

மண்டலம்–5, கோட்டம்–62ல் திரு. M. காளமேகம் மற்றும் K. சந்திரமோகன் அவர்களின் பழைய கதவு எண். 108, புதிய கதவு எண்.150, சுவாமி நாயக்கன் சாலை, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை–600 002 மயிலாப்பூர் – திருவல்லிக்கேணி வட்டம், R.S.No.1120, Block No.15, சிந்தாதிரிப்பேட்டை கிராமம், என்ற இடத்திற்கு கட்டிட தகர்ப்பு மற்றும் புதியதாக கட்டிடம் கட்டுவதற்கான அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டார அலுவலகத்தில் PPA/WDCN05/00870/2015, நாள்.13.02.2015ல் விண்ணப்பித்துள்ளார். இந்த விண்ணப்பம் வடக்கு வட்டார அலுவலகத்தில் உள்ள நகரமைப்பு பிரிவின் மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விரிவான வளர்ச்சி திட்ட வரைபடத்தின் வழிகாட்டுதலின் மூலம் "சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம்–II"ன்படி 15மீ சாலையாக விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று கண்டறியப்பட்டது. மேலும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தான பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும். எனவே, திட்ட மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்துள்ள மனையிலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய (8.80மீ × 1.40 மீ) 12.32ச.மீ பரப்பளவு நிலத்தினை தானபத்திரத்தின் மூலம் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க மனுதாரர் விருப்பம் தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

வ.வ.அ.ந.க.எண்.இ8/03479/2015, நாள்:23.04.2015 கடிதத்தின்படி, வடக்கு வட்டார அலுவலகத்திலிருந்து மேற்கண்ட விவரங்களுடன் இக்கோப்பு நிலம் மற்றும் உடைமை துறைக்கு தொடர் மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது. மேலும், நி.ம.உ.து.ந.க.எண்.DA–1/1615/2015, நாள்.30.06.2015 நாளிட்ட கடிதத்தின்படி நிலம் மற்றும் உடைமை துறைக்கு வரப்பெற்ற கோப்புகளின் மீது துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) அவர்களின் அறிவுறுத்தலின்படி உடனடியாக தீர்வு பெறும் பொருட்டு உரிய மேல் நடவடிக்கைக்காக இக்கோப்பு நிலம் மற்றும் உடைமை துறையிலிருந்து பணித்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே,

(1) திரு. M. காளமேகம் மற்றும் K. சந்திரமோகன் என்பவர்களிடம் இருந்து தான பத்திரம் மூலம் பழைய கதவு எண். 108, புதிய கதவு எண்.150, சுவாமி நாயக்கன் சாலை, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை–600 002, R.S.No.1120, Block No.15, சிந்தாதிரிப்பேட்டை கிராமத்தில் அமைந்துள்ள மனையில் 12.32 ச.மீ. பரப்பளவு நிலத்தினை சாலை விரிவாக்கத்திற்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செவாகும் செலவீனம் ரூ. 21,600/– யை "ஆணையர் சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக மனை உரிமையாளரிடமிருந்து பெற்று கொள்ளவும்,

(3) தானமாக வழங்கிய நிலத்திற்கு தளப்பரப்பு குறியீடு (FSI) உபயோகப்படுத்தாததால் நிலத்தின் உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு "வளர்ச்சி உரிமை சான்றிதழ்" சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க வேண்டி பரிந்துரைப்பதற்கும்,

மேற்கண்ட (1) முதல் (3) வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) வின் கூட்டம் 17.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.30/2015ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/1804/2015**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 21.08.2015 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.474/2015 **பொருள் எண்.25**

**மதிப்பீடு 2015 – 2016 – மழைநீர் வடிகால் துறை – மண்டலம்–12, வார்டு 158–ல் மழைநீர் வடிகால் துறையில் 2014–15ம் ஆண்டின் அலுவலக விலைபட்டியல்களில் அடிப்படையில் மதிப்பீடு ரூ.3,13,34,000/– க்கு – நிர்வாக அனுமதி**

கீழ் குறிப்பிட்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3,13,34,000/– அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

1. பணியின் விவரம்:

| வ. எ ண் | பணியின் பெயர் | பணியின் விவரம் | நீளம் (மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1. | மண்டலம்–12 வார்டு 158–ல் நந்தம்பாக்கம், துளசிங்கபுரம் முதல் கணபதி காலனி வழியாக அடையாறு ஆறு வரை புதிய ஆர்.சி.சி.பெட்டக வடிவ 1200 X 1200மிமீ புதிய மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி | மழைநீர் வடிகால்வாய் பணி | 1100மீ | ரூ.31334000/– |

2. பரிந்துரை செய்தவரின் விவரம் : மண்டல அலுவலர் மண்டலம்–12
3. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் : மழைநீர் வடிகால் துறை
4. தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி : தலைமைப்பொறியாளர் / ம.நீ.வ.து.(ம) சி.தி
5. சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி : மழைநீர் வடிகால் துறை
6. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது : 2014 – 2015ஆம் ஆண்டு விலைபட்டியலின்படி
7. மதிப்பீட்டின் தொகை
   அ) பணியின் செலவீனம் : ரூ. 29284269.92
   ஆ) மேற்பார்வை செலவினம் : ரூ. 732106.75
   இ) தமிழ் நாடு கட்டுமான தொழிலாளர் : ரூ. 292842.80
   ஈ)குடிநீர், கழிவுநீர் மற்றும் மின்சார செலவினம் : ரூ. 292673.78
   எ)மற்ற எதிர்பாரா செலவு : ரூ. 732106.75
   மொத்தம் ரூ. 31334000.00
8. மழைநீர் வடிகால் கட்டுவது நடைபாதை பகுதியாக அல்லது சாலைப்பகுதியாக என்பது குறிப்படவும் : –
9. ஒரு மீட்டருக்கு மதிப்பீடு : ரூ. 26622.07 பை/மீ
10. வரைபடம் இணைக்கப்பட்டுள்ளதா : ஆம்
11. மதிப்பீட்டிற்கு ஒப்பதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் தேதி : வார்டுகுழு தீர்மானம் பின்னர் பெறப்படும்
12. மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா ? ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது ஏற்கனவே செய்திருப்பின் வேலையின் முடிவுத் தொகை : –
12. நிதியின் மூலத்தன்மை : மழைநீர் வடிகால் துறை மூலதன நிதி / 2015–2016

மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.3,13,34,000/– மதிப்பீட்டிற்கு சென்னை மாநகராட்சி சட்டம் 1919 விதி 78ன்படி எதிர்வரும் உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாட்டை எதிர் நோக்கி அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணிக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.08.2015 அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.239/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண். 297/2015ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**திக.மே.து.ந.க.எண்.அ7/2171/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 25.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.475/2015** **பொருள் எண்.26**

**திடக்கழிவு மேலாண்மைத் துறை – மண்டலம்–15 – பகுதி–44 மற்றும் 45 – வார்டுகள் 192 முதல் 200 வரை – கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு பணி – தற்போது பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் கூடுதல் பணியாளர்கட்கு ஏற்கனவே சுவர்ண ஜெயந்தி திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் பணி காலம் 07.10.2015 உடன் முடிவடைவதால் 08.10.2015 முதல் 07.10.2016 வரை கொசு ஒழிப்பு மற்றும் நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள காலநீட்டிப்பு வழங்க அனுமதி**

மண்டலம்–15, சோழிங்கநல்லூர் பகுதியானது 42.23 சதுர கி.மீ. பரப்பளவுடன் 192 முதல் 200 வரையிளான 9 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இம்மண்டலத்தின் தற்போதைய மக்கள் தொகை சுமார் 3.03 இலட்சம் ஆகும். இந்த மண்டலத்தில் 1767 சாலைகள் / தெருக்களும், சுமார் ஐம்பதாயிரத்து எண்ணூற்று இருபத்தைந்து வீடுகளும், 12 கி.மீ நீளத்தில் மழைநீர் கால்வாய்களும், 9.5 கி.மீ நீளத்தில் பக்கிங்காம் கால்வாயும், சுமார் 30 கி.மீ நீளத்தில் திறந்தநிலை கால்வாய்களும் உள்ளன. மண்டலம் 15ன் பொது சுகாதாரத்துறையில் கொசு ஒழிப்பு பணிக்காகவும், நோய்த்தடுப்பு பணிக்காகவும் 129 சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்ட குழு உறுப்பினர்கள் தினக்கூலி அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இத்தினக்கூலிப் பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தும் ஒப்பக் காலம் 07.10.2015 உடன் முடிவடைகிறது.

சோழிங்கநல்லூர் மண்டலம் (மண்டலம் 15), வார்டு 195, கண்ணகி நகர் மற்றும் எழில் நகரில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலம் 23,704 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. சென்னை மாநகராட்சியின் பல்வேறு பகுதிகளில் ஆட்சேபகரமான புறம்போக்கு நிலங்களில் வசித்து வரும் மக்கள் அகற்றப்பட்டு கண்ணகி நகர் மற்றும் எழில் நகரில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். இங்கு கட்டப்பட்டுள்ள அனைத்து குடியிருப்புகளும் பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யும்போது சுமார் 1.00 இலட்சம் மக்கள் இங்கு வசிப்பார்கள் என உத்தேசிக்கப்படுகிறது. எனவே, வார்டு எண்.195–ல் அமைந்துள்ள கண்ணகி நகர் மற்றும் எழில் நகரில் பொதுசுகாதாரப் பணிகள் சிறப்பு கவனம் செலுத்தி மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாக உள்ளது. ஆகவே, சோழிங்கநல்லூர் மண்டலத்தின் வளர்ச்சியையும், மக்கள் தொகை பெருக்கத்தையும் கணக்கில் கொண்டு பணியாளர்கள் தேவை கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

மண்டலம் 15ல் கொசு ஒழிப்புப் பணி மற்றும் நோய்த்தடுப்புப் பணி ஆகியவை முழுமையாக மேற்கொள்ள 129 பணியாளர்கள் தேவை என கீழே பட்டியலிடப்பட்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது. மண்டலம்–15, பகுதி–44 மற்றும் 45க்கு உட்பட்ட வார்டுகளான 192 முதல் 200 வரையிலான 9 வார்டுகளுக்குத் தேவைப்படும் பணியாளர்கள், தற்போது பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் கூடுதலாக தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை ஆகியவை கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பணியாளர்களின் விவரம்**

| வ. எண். | வார்டு எண். | தேவையான பணியாளர்கள் | தற்போது பணிபுரிபவர்கள் | | | | ஒப்பந்த அடிப்படையில் பணியில் ஈடுபடுத்த தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | தினக்கூலி | மொத்தம் | தேவைப்படும் பணியாளர்களில் நிரந்தரப் பணியாளர்கள் தவிர கூடுதலாக தேவைப்படும் பணியாளர்கள் எண்ணிக்கை | |
| 1 | 192 | 17 | 1 | – | 1 | 16 | 16 |
| 2 | 193 | 18 | 2 | – | 2 | 16 | 16 |
| 3 | 194 | 11 | 1 | – | 1 | 10 | 10 |
| 4 | 195 | 20 | – | – | – | 20 | 20 |
| 5 | 196 | 13 | 1 | – | 1 | 12 | 12 |
| 6 | 197 | 19 | 2 | – | 2 | 17 | 17 |
| 7 | 198 | 14 | 1 | – | 1 | 13 | 13 |
| 8 | 199 | 12 | 1 | – | 1 | 11 | 11 |
| 9 | 200 | 15 | 1 | – | 1 | 14 | 14 |
| **மொத்தம்** | | 139 | 10 | – | 10 | 129 | 129 |

சென்னை மாநகராட்சி, மண்டலம் 15, பொது சுகாதாரத்துறையில் கொசு ஒழிப்புப்பணி மற்றும் நோய் தடுப்பு பணி மேற்கொள்ள பணியாளர்களை ஈடுபடுத்துவதற்கானத் தினக்கூலி, திடக்கழிவு மேலாண்மைத்துறை கடிதம் எண். S.W.M.No.A7/0497/2013–ல் நாள் ஒன்றுக்கு ரூ.295/– என கூலி நிர்ணயம்

செய்யப்பட்டுள்ளது. சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் 2012–13ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட கூலித் தொகை ரூ.235/– உடன் துப்புரவுத் தொழிலார்களுக்காக சீருடை, கையுறை, முகக் கவசம், காலணி மற்றும் காப்பீடு ஆகியவற்றிற்கான செலவையும் கணக்கிட்டு ரூ.60/–ஐ கூடுதலாக சேர்த்து ரூ.295/–என தினக்கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

மண்டலம்–15ல், சுவர்ண ஜெயந்தி நகர்புற வேலைவாய்ப்புத் திட்ட குழு உறுப்பினர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் பொது சுகாதாரப் பணிக்கான ஒப்பந்தக்காலம் 07.10.2015 உடன் முடிவடைகிறது. சுவர்ண ஜெயந்தி நகர்புற வேலைவாய்ப்புத்திட்ட குழு உறுப்பினர்களை பணியில் ஈடுபடுத்தும் ஒப்பந்தக்காலம் முடியும் நாட்களுக்குப் பிறகு பணி உத்திரவு வழங்கப்படும் நாளிலிருந்து ஒரு வருட காலம் 08.10.2015 முதல் 07.10.2016 வரையில் கொசு ஒழிப்புப் பணி மற்றும் நோய்த்தடுப்புப் பணிகள் சுவர்ண ஜெயந்தி திட்ட குழு உறுப்பினர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ள கீழ்கண்டவாறு உத்தேச மதிப்பீடு கணக்கிடப்படுகிறது.

1. மொத்த பணியாளர்கள் – 129
2. தினசரி ஊதியம் / நபர் – ரூ.295/–
3. மொத்த பணி நாட்கள் – 365 நாட்கள்
4. மதிப்பீடு – ரூ.129 x 295 x 365 = ரூ. 1,38,90,075/–

(ரூபாய் ஒரு கோடியே முப்பத்து எட்டு இலட்சத்து தொண்ணூறாயிரத்து எழுபத்து ஐந்து மட்டும்)

எனவே,

அ) மண்டலம்–15, பகுதி–44 மற்றும் 45 வார்டு எண்.192 முதல் 200 வரையிலான 9 வார்டுகளில் கொசு ஒழிப்புப் பணி மற்றும் நோய்த்தடுப்புப் பணி மேற்கொள்ள சுவர்ண ஜெயந்தி திட்ட குழு உறுப்பினர்கள் 129 பணியாளர்களை 365 நாட்களுக்கு பணியில் ஈடுபடுத்தவும்.

ஆ) ரூ.1,38,90,075/– செலவு மேற்கொள்ளும் வரை ரூ.10,00,000/–க்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மிகாத வகையில் தனித்தனியாக தேவைக்கேற்ப விலைப்புள்ளி கோரி பணி ஒப்படைக்கவும்,

இ) இதற்காகும் செலவுத் தொகையான ரூ.1,38,90,075/– (ரூபாய் ஒரு கோடியே முப்பத்து எட்டு இலட்சத்து தொண்ணூறாயிரத்து எழுபத்து ஐந்து மட்டும்) பிரிவு குறியீடு 30–32–04 மற்றும் கணக்கு குறியீடு 210–10–06–02 நிரந்தரமற்றவர் சம்பளம் சுகாதாரப்பணி என்ற தலைப்பில் பட்டியை தீர்வு செய்யவும்.

. மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 19.08.2015 அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.40/2015ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.251/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.அ1/1783/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.476/2015** **பொருள் எண்.27**

**ஜப்பான் நாட்டில் நடைபெறும் கழிவு நீர் பணிகள் பொறியியல் மற்றும் மழைநீர் வடிகால் தொழில்நுட்பம் என்ற தலைப்பில் செப்டம்பர் 23 முதல் டிசம்பர் 05, 2015 வரை நடைபெறவுள்ள குழு பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள சென்னை மாநகராட்சி மழைநீர் வடிகால் துறையின் கண்காணிப்பு பொறியாளர் மற்றும் ஒரு செயற்பொறியாளர் கலந்து கொள்வதற்கு அனுமதி**

02.07.2015 நாளிட்ட கடிதத்தில், மழைநீர் வடிகால் துறையில் பணிபுரியும் பொறியாளர்கள் திரு.கே.சின்னசாமி, கண்காணிப்பு பொறியாளர் மற்றும் திரு.ஜி.தமிழ்செல்வன், செயற்பொறியாளர் அவர்கள் இருவரும் பட்டதாரி பொறியாளர் என்பதாலும் கணிப்பொறி அறிவு மற்றும் ஆங்கில புலமை உள்ளவர்கள் என்பதாலும் சென்னை மாநகராட்சியில் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் நடைபெறும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் திட்டங்களை விரைவில் முடிப்பதற்கு ஜப்பானில் நடைபெறும் பயிற்சி வகுப்புகள் உதவும் என்பதாலும் மழைநீர் வடிகால் துறைலிருந்து இரண்டு பொறியாளர்களை ஜப்பான் நாட்டிற்கு செல்ல முதன்மை செயலர்/ஆணையர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு கடிதம் அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC3) துறை, அரசாணை எண்(D)478, நாள்.24.07.2015ல் மழைநீர் வடிகால் துறையில் பணிபுரியும் இரண்டு பொறியாளர்கள் திரு.கே.சின்னசாமி, கண்காணிப்பு பொறியாளர் மற்றும் திரு.ஜி.தமிழ்செல்வன், செயற்பொறியாளர் அவர்கள் செப்டம்பர் 23 முதல் டிசம்பர் 05, 2015 வரை ஜப்பானில் நடக்கும் கழிவுநீர் பணிகள் பொறியியல் மற்றும் மழைநீர் வடிகால் தொழில்நுட்பம் என்ற தலைப்பின் கீழ் நடைபெறவுள்ள குழு பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்வதற்கு ஜப்பான் நாட்டிற்கு செல்ல அனுமதி அளித்தும் மழைநீர் வடிகால் துறையில் பொறியாளர்கள் ஜப்பான் நாட்டிற்கு சென்று வரும் காலத்தினை பணிக்காலமாக கருதியும் இந்நிகழ்விற்கு மன்றத்தின் அனுமதி பெறவும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னை மாநகராட்சி வடிகால் துறையின் பொறியாளர்கள் ஜப்பான் நாட்டில் தங்கும் செலவுகள், பயணச் செலவுகள் காப்பீட்டு செலவுகள் மற்றும் நுழைவு கட்டணம் ஆகிய அனைத்து செலவுகளையும் ஜப்பான் நாட்டில் உள்ள அமைப்பு ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நிறுவனம் Japan International Co-operation Agency (JICA) ஏற்றுக்கொள்வதாக தெரியவந்துள்ளது.

எனவே நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC3) துறை, அரசாணை எண்(D)478, நாள்.24.07.2015ன்படி திரு.கே.சின்னசாமி, கண்காணிப்பு பொறியாளர் மற்றும் திரு.ஜி.தமிழ்செல்வன், செயற்பொறியாளர் அவர்கள் செப்டம்பர் 23 முதல் டிசம்பர் 05, 2015 வரை ஜப்பானில் நடக்கும் குழு பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்வதற்கு ஜப்பான் நாட்டிற்கு செல்ல நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**நி.நி.பி.ந.க.எண். க(ம)மா–1/ 1644 /2014**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.477/2015** **பொருள் எண்.28**

**இந்தியன் வங்கி மற்றும் கனரா வங்கி நடப்பு கணக்கு – ரூ.100.00 கோடி வரை அதிகப் பற்று (Over Draft in Current Account) பெறுவதற்கு அனுமதி**

மன்றத் தீர்மான எண்.613/2014, நாள்.29.12.2014.ன்படி 2014–15 நிதியாண்டில் சென்னை மாநகராட்சி அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் (15 மண்டலங்கள்) பல்வேறு வளர்ச்சிப் பணிகள் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் அரசு மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதால் நிதிச்சுமையினை நிர்வகிக்கும் வகையில் ரூ.50.00 கோடி இந்தியன் வங்கி, ஜார்ஜ் டவுன் கிளையிலிருந்தும் மற்றும் ரூ.50.00 கோடி கனரா வங்கி, பூங்கா நகர் கிளையிலிருந்தும் நடப்பு கணக்கில் அதிகப் பற்று (Over Draft) பெறுவதற்காக அனுமதி பெறப்பட்டது.

இதனடிப்படையில், இந்தியன் வங்கி மற்றும் கனரா வங்கியில் தேவைக்கேற்ப அவ்வப்போது அதிகப் பற்று (Over Draft) பெறப்பட்டு பின்பு திரும்ப செலுத்தப்பட்டு வருகிறது.

எனவே, சென்னை மாநகராட்சிக்கு அவ்வப்போது ஏற்படும் நிதிச் சுமையினை நிர்வகிக்கும் வகையில் இந்தியன் வங்கி, ஜார்ஜ் டவுன் கிளையில் ரூ.100.00 கோடியும் மற்றும் கனரா வங்கி பூங்கா நகர் கிளையில் ரூ.100.00 கோடியும் அதிகப் பற்று (Over Draft) பெறுவதற்கும், இரு வங்கிகளிலிருந்தும் அதிகபட்சமாக ரூ.100.00 கோடி வரை மட்டும் அதிகப் பற்று (Over Draft) பெறுவதற்கும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.249/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**சு.து.ந.க.எண்.பி2/5250/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.478/2015** **பொருள் எண்.29**

**பொதுசுகாதாரத்துறை– அம்மா உணவகங்கள்– சென்னை மாநகராட்சி அம்மா உணவங்கள் சிறப்பாக செயல்பட்டு வருவது –2015 ம் ஆண்டிற்கான சிறந்த செயல்பாட்டிற்கான நல்ஆளுமை விருது (Best Practices award) மற்றும் பரிசுத்தொகை ரூ.2.00 லட்சம் – 15.08.2015 அன்று சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் வழங்கப்பட்டது – மன்றத்தின் அனுமதி**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பசிப்பிணியை போக்கவும், நோயற்ற சமுதாயத்தை உருவாக்கும் வகையிலும், சத்தான உணவுவகைகளை, ஏழை எளிய மக்கள் மலிவு விலையில், வயிறார உண்ணும் வகையிலும், சென்னை மாநகரில் வாழும் ஏழை எளிய மக்கள், அன்றாட கூலி வேலை செய்பவர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள், கட்டிட தொழிலாளிகள், பாரம் தூக்குபவர்கள் என குறைந்த வருவாயில் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் அடிதட்டு மக்களுக்கும் மற்றும் சென்னைக்கு பணிநிமிர்த்தமாக வந்து செல்பவர்கள் பயன் பெறும் வகையில் சுகாதாரமான மற்றும் தரமான உணவுகளை மலிவு விலையில் வழங்குவதற்காக அம்மா உணவகங்கள் துவங்க உத்தரவிட்டார்கள்.

இதன் அடிப்படையில், மண்டலங்களில் 245 அம்மா உணவகங்கள் மற்றும் 7 பெரிய அரசு மருத்துவமனைகளில் 7 அம்மா உணவகங்கள் துவங்கப்பட்டு மொத்தம் 252 அம்மா உணவகங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இந்த செயல்பாடுகளை அரசு பரிசீலித்து, 2015ம் ஆண்டிற்கான சிறந்த செயல்பாட்டிற்கான நல்ஆளுமை விருது மற்றும் பரிசுத்தொகை ரூ.2.00 லட்சம், (Cheque No. 305825 dt. 11.08.2015 State Bank of India-Mandaveli Branch) 15.08.2015 அன்று தலைமைச்செயலகக் கோட்டையில் நடைப்பெற்ற சுதந்திர தின விழாவில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை, சட்டம் நீதிமன்றங்கள், சிறைச்சாலைத்துறை அமைச்சர், மாண்புமிகு சென்னை மாநகர மேயர், அரசு முதன்மைச் செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை, முதன்மைச் செயலர்/ ஆணையர் சென்னை மாநகராட்சி ஆகியோர்களிடம் சென்னை மாநகராட்சியின் சிறந்த செயல்பாட்டிற்கான "**நல்ஆளுமை விருது" மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்களால் வழங்கப்பட்டது.

எனவே

1. 2015ம் ஆண்டிற்கான, சிறந்த செயல்பாட்டிற்கான நல்ஆளுமை விருது (Best Practices award) மற்றும் பரிசுத்தொகை ரூ.2.00 லட்சம், 15.08.2015 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் தகவலுக்கும்,
2. பரிசுத்தொகை ரூ.2.00 லட்சத்தினை ஆணையர், சென்னை மாநகராட்சி என்ற பெயரில் நிரந்தர வைப்புநிதியில் (Fixed Deposit) பொது சுகாதாரத்துறையில் வைத்து பராமரிக்கவும்,
3. இந்த நிரந்தர வைப்புநிதியில் (Fixed Deposit) இருந்த பெறப்படும் வட்டித்தொகையில் சிறப்பாக செயல்படும் சென்னை மாநகராட்சியில் அம்மா உணவகங்களுக்கு விருது / பரிசு வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 19.08.2015 அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.41/2015ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.255/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**நி.நி.பி.ந.க.எண். க(ம)மா–1/1042/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.479/2015** **பொருள் எண்.30**

**கடன் மற்றும் மான்யம் – 2015–2016 – 4127 உட்புறச் சாலைப் பணிகளுக்கு – டுபிட்கோ நிதி நிறுவன MIDF நிதியின் கீழ் கடன் பெறுவதற்கு – மன்றத்தின் அனுமதி**

சென்னை மாநகராட்சியில் 2015–16ம் நிதியாண்டில் சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களில் உள்ள தார்சாலைகள் 3168 எண்ணிக்கையில் ரூ.479.30 கோடியில் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் 1974 எண்ணிக்கையில் ரூ.228.10 கோடியில் மொத்தம் 5142 சாலைகள் ரூ.707.40 கோடியில் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு, இப்பணிகளுக்காக TUFIDCO மற்றும் TNUDF நிதி நிறுவனங்களுக்கு கடன் வழங்க கோரி தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் மூலம் கடிதம் அனுப்பப்பட்டது.

தற்பொழுது, பார்வையில் கண்ட TUFIDCO தனது கடிதத்தில் 2169 தார் சாலைகள் ரூ.23902.00 இலட்சம் மற்றும் 1958 சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் ரூ.15495.00 இலட்சம் ஆக மொத்தம் 4127 உட்புறச் சாலைகள் ரூ.39397.00 இலட்சத்தில் பணிகளை மேற்கொள்ள வரையறுத்து, இதில் 50 விழுக்காடு ரூ.19698.00 லட்சம் தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டுக் கழகத்தின் (TUFIDCO) வழியாக M.I.D.F. நிதியின்கீழ் ஆண்டுக்கு 4 விழுக்காடு வட்டி விகிதத்தில் 15 ஆண்டு காலம் திருப்பி செலுத்தக்கூடிய கடன் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. எஞ்சிய தொகையான ரூ.19699.00 இலட்சம் சென்னை மாநகராட்சியின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளது.

மேலும், TUFIDCO தனது கடிதத்தில் மேற்கண்ட கடனை பெறுவதற்கு தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டுக் கழகம் கேட்டுக் கொண்டுள்ள மாதிரி படிவத்தில் உள்ளபடி கீழ்காணும் 1 முதல் 5 இனங்களுக்கு (ஆங்கிலம் மற்றும் தமிழ்) நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**Format for Council resolution (As prescribed by TUFIDCO)**

1. Resolved that the Council of Corporation of Chennai is authorizing the Commissioner to borrow the loan of **Rs.19698.00** lakhs under the MIDF Scheme for the following project as per the terms and conditions prescribed by TUFIDCO.

(Rs. in lakhs)

| Sl. No | Name of the Project | Estimated Cost | Chennai Corporation Component | MIDF Loan |
|---|---|---|---|---|
| 1 | Improvement of 2169 BT Roads | 23902.00 | 11951.00 | 11951.00 |
| 2 | Improvement of 1958 Cement Concrete Roads | 15495.00 | 7748.00 | 7747.00 |
| | **TOTAL** | **39397.00** | **19699.00** | **19698.00** |

2. Further resolved to authorize the Commissioner to execute the loan agreement and other documents, if any with TUFIDCO and complete all other formalities including affixing the common seal of Corporation of Chennai on the documents to be executed with TUFIDCO on behalf of Corporation of Chennai.
3. Further resolved to open an escrow account on property tax, professional tax collection and other revenues shall be escrowed favouring TUFIDCO. This account will be in existence till the time of clearing the loan and other dues of this project to TUFIDCO.
4. Further resolved that the Council of Corporation of Chennai is authorizing the Commissioner, Corporation of Chennai (authorized signatory) to make necessary budgetary provisions in Corporation of Chennai annual budget for the repayment of principal and interest and other money due for the loan availed for the project proposal to TUFIDCO.
5. Further resolved to agree to adjust by the Government of Tamil Nadu from the funds receivable for Corporation of Chennai such as the State Finance Commission, Devolution of funds, grants, share on tax due to Corporation of Chennai from the State Government, in the event of default in the repayment of principal, interest and other money due to TUFIDCO in respect of loans availed for this project.

**மன்றத் தீர்மானம் (டுபிட்கோ மாதிரிப் படிவம்)**

1. எம்.ஐ.டி.எப். நிதியின் கீழ் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு தமிழ்நாடு நகர்புற அடிப்படை வசதிகள் நிதி மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து **ரூ.19698.00** லட்சங்களை கடனாக பெறுவதற்கு ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களுக்கு இம்மாமன்றம் அங்கீகாரம் அளிக்கிறது.

(ரூ. லட்சத்தில்)

| வ. எண் | பணிகளின் பெயர் | திட்ட மதிப்பீடு | சென்னை மாநகராட்சியின் பங்கு | எம்.ஐ.டி.எப். கடன் |
|---|---|---|---|---|
| 1 | 2169 தார் சாலைகள் மேம்படுத்துதல் | 23902.00 | 11951.00 | 11951.00 |
| 2 | 1958 சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மேம்படுத்துதல் | 15495.00 | 7748.00 | 7747.00 |
| | **மொத்தம்** | **39397.00** | **19699.00** | **19698.00** |

2. மேலும், சென்னை மாநகராட்சி சார்பாக டுபிட்கோ நிதி நிறுவனத்துடன் கடன் தொகைக்கான உடன்படிக்கை மற்றும் ஆவணங்கள் சென்னை மாநகராட்சி பொது முத்திரையிடுதல் ஆகிய அனைத்து நடைமுறைகளையும் இந்நிதி நிறுவனத்துடன் செயல்படுத்துவதற்கு மாமன்றம் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் ஆணையர் அவர்களுக்கு அங்கீகாரம் செய்ய தீர்மானிக்கப்படுகிறது.
3. மேலும், சொத்துவரி, தொழில்வரி மற்றும் இதர வரவினங்களுக்கு தனியே ஒரு ESCROW கணக்கு துவக்கப்பட்டு பராமரிப்பதற்கும், மேலும் இக்கணக்கு டுபிட்கோ நிறுவனத்திடமிருந்து பெறப்படும் கடன் தொகை திரும்ப செலுத்தி கடன் முடிவடையும் வரை பராமரிக்க மாமன்றம் அனுமதிக்கப்படுகிறது.
4. மேலும், டுபிட்கோ நிதி நிறுவனத்திடமிருந்து மேற்கண்ட திட்டங்களுக்கு பெறப்பட்ட கடன் தொகையினை திருப்பி செலுத்த வருடாந்திர வரவு செலவு திட்டத்தில் தேவையான ஒதுக்கீடு செய்து இக்கடன் மற்றும் வட்டித் தொகையினை மற்றும் இக்கடன் தொடர்பான நிலுவைகளை திரும்பச் செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் ஆணையர் அவர்களுக்கு அங்கீகாரம் அளிக்க தீர்மானிக்கப்படுகிறது.
5. மேலும், இக்கடன் தொகையினை சென்னை மாநகராட்சி செலுத்தத் தவறும் பட்சத்தில் அதிகார பகிர்வு மூலம் தமிழ்நாடு அரசிடமிருந்து பெறப்படும் மாநில நிதிக்குழு மானியத்தில் நேர்செய்ய இம்மாமன்றம் அனுமதி அளிக்கிறது.

மேற்கண்ட 1 முதல் 5 வரை (ஆங்கிலம் மற்றும் தமிழில்) உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.256/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ப.து.ந.க.எண்/163/2015**
**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 27.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.480/2015** **பொருள் எண்.31**

**தானப்பத்திரம்**

மண்டலம்–2, வார்டு–17ல் திரு.K.V.திருப்பத்தையா, K.V.T. Realtors (P) Ltd., அவர்கள் S.Nos. 197, 198/2C, 199/2B, 200/1 & 200/2 வடபெரும்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள இடத்தில் வீட்டு மனைகளாக பிரிப்பதற்கு வேண்டி சென்னை மாநகராட்சியில் திட்ட அனுமதி விண்ணப்பம் வடக்கு வட்டார அலுவலகத்தில் சமர்ப்பித்தார்.

திட்ட அனுமதி ஒப்புதல் வழங்க வேண்டி அவ்விண்ணப்பம் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு வடக்கு வட்டார அலுவலகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டது.

வீட்டு மனைப்பிரிவு விண்ணப்பம், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் கூர்ந்தாய்வு செய்து வளர்ச்சி விதிமுறைகளுக்கு உட்பட்டு வரைபடம் மாற்றி அமைக்கப்பட்டது.

விண்ணப்பதாரர் திரு.K.V.திருப்பத்தையா, K.V.T. Realtors (P) Ltd., அவர்கள் மனைப்பிரிவு செய்ய வேண்டி வளர்ச்சிக் கட்டணம், கூர்ந்தாய்வு கட்டணம் மற்றும் இதர கட்டணத்தை சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் செலுத்தி உள்ளார்.

மனைப்பிரிவு செய்ய வேண்டிய இடத்தில் அமைந்துள்ள சாலை மற்றும் திறந்த வெளி ஒதுக்கீட்டு நிலம் சென்னை மாநகராட்சியிடம் தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட பிறகு தான் வீட்டு மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் வழங்க இயலும்.

சாலை மற்றும் பூங்கா (திறந்த வெளி ஒதுக்கீட்டு) நிலங்களை சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ள வேண்டி உறுப்பினர்–செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அவர்கள் கடிதம் எண்.L1/12987/2014, நாள்.03.06.2015 மூலம் வடக்கு வட்டார அலுவலகத்திற்கு அனுப்பி உள்ளார்.

அந்நிலங்களை எடுத்துக் கொள்ள மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி, கண்காணிப்பு பொறியாளர் (வடக்கு) அவர்கள் வ.வ.அ.ந.க.எண்.இ8/5842/2015, நாள்.07.07.2015 கடிதத்தின் வாயிலாக பணித் துறைக்கு அனுப்பி உள்ளார்.

மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள சாலைப் பகுதியில், மனுதாரர் திரு.K.V.திருப்பத்தையா, K.V.T. Realtors (P) Ltd., அவர்கள் தாங்களே சாலை அமைக்கும் பணிகளை அவர்களின் சொந்த செலவில் மேற்கொள்வதாகவும், சாலைக்கென ஒதுக்கப்பட்ட 9850 ச.மீ பரப்பளவும், பூங்கா (திறந்த வெளி ஒதுக்கீட்டிற்கு) ஒதுக்கப்பட்ட 4122 ச.மீ பரப்பளவு நிலத்தினையும் தானப்பத்திரம் மூலம் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க சம்மதம் தெரிவித்துள்ளார்.

சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலத்தில் மனுதாரரே சென்னை மாநகராட்சி நிர்ணயிக்கும் தரக் கட்டுப்பாட்டினை பின்பற்றி சாலை அமைக்க அறிவுறுத்தலாம் என்று கருதப்படுகிறது.

வீட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க வேண்டி, சாலை மற்றும் பூங்காவிற்கு (திறந்த வெளி ஒதுக்கீட்டிற்காக) குறிப்பிடப்பட்டுள்ள நிலங்களை சென்னை மாநகராட்சி தானப்பத்திரம் மூலம் எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(அ) வீட்டு மனைப்பிரிவு வழங்க வேண்டி S.Nos. 197, 198/2C, 199/2B, 200/1 & 200/2 வடபெரும்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள இடத்தில், சாலைக்கென ஒதுக்கப்பட்ட 9850 ச.மீ. பரப்பளவு இடத்தையும் மற்றும் பூங்காவிற்கு (திறந்த வெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு) ஒதுக்கப்பட்ட 4122 ச.மீ. பரப்பளவு இடத்தையும் திரு.K.V.திருப்பத்தையா, K.V.T. Realtors (P) Ltd., என்பவரிடம் இருந்து தானப்பத்திரம் மூலம் சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளவும்,

(ஆ) சாலைக்கென ஒதுக்கப்பட்ட 9850 ச.மீ. நிலத்தில் மனுதாரரே அவரின் சொந்த செலவில் சாலைப் பணிகளை சென்னை மாநகராட்சியின் மேற்பார்வையில் அமைக்கவும்,

மேற்கண்ட (1) மற்றும் (2) வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) வின் கூட்டம் 17.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.34/2015ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ப.து.ந.க.எண்/142/2015**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 27.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.481/2015** **பொருள் எண்.32**

**தானப்பத்திரம்**

மண்டலம்–10, கோட்டம்–134ல் திரு.A.S.ஜார்ஜ் மற்றும் திரு.அப்பாஸ் செரீப் ஆகியோரின் பிரதிநிதி திரு.D.ராஜாசிங்,(GPA), பழைய கதவு எண்.350, 350/1, 348, 350/73, புதிய கதவு எண். 73, 74, 76 மற்றும் 78 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024, எழும்பூர் – நுங்கம்பாக்கம் வட்டம், T.S.No.3/1, 3/2, 4, 9 & 10, Block No.28, புலியூர் கிராமத்தில் உள்ள இடத்திற்கு கட்டிட தகர்ப்பு மற்றும் மனை உட்பிரிவு அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மத்திய வட்டார அலுவலகத்தில் SD/WDCNo.10/00227/2014, நாள்.11.04.2014ல் விண்ணப்பித்துள்ளார். இந்த விண்ணப்பம் மத்திய வட்டார அலுவலகத்தில் உள்ள நகரமைப்பு பிரிவின் மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விரிவான வளர்ச்சி திட்ட வரைபடத்தின் வழிகாட்டுதலின் மூலம் "சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம்–II"ன்படி 30.5மீ சாலையாக விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று கண்டறியப்பட்டது. மேலும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும். எனவே, திட்ட மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்துள்ள மனையிலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய {[(0.9+1.28+1.88)/3=1.35மீ] × [21.17மீ] = 28.58 ச. மீ)} 28.58 ச. மீ பரப்பளவு நிலத்தினை தானப்பத்திரத்தின் மூலம் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க மனுதாரர் விருப்பம் தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

வ.அ.ம.ந.க.எண்.இ10/00227/2014, நாள்:12.03.2015 கடிதத்தின்படி, மத்திய வட்டார அலுவலகத்திலிருந்து மேற்கண்ட விவரங்களுடன் இக்கோப்பு நிலம் மற்றும் உடைமை துறைக்கு தொடர் மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது. மேலும், நி.ம.உ.து.ந.க.எண்.DA-1/1039/2015, நாள்.30.06.2015ன்படி நிலம் மற்றும் உடைமை துறைக்கு வரப்பெற்ற கோப்புகளின் மீது துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) அவர்களின் அறிவுறுத்தலின்படி உடனடியாக தீர்வு பெறும் பொருட்டு உரிய மேல் நடவடிக்கைக்காக இக்கோப்பு நிலம் மற்றும் உடைமை துறையிலிருந்து பணித்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே,

(1) திரு. A.S.ஜார்ஜ் மற்றும் திரு.அப்பாஸ் செரீப் ஆகியோரின் பிரதிநிதி திரு. D. ராஜாசிங், (GPA) என்பவரிடம் இருந்து தான பத்திரம் மூலம் பழைய கதவு எண். 350/1, 348, புதிய கதவு எண். 74, 76 மற்றும் 78 ஆற்காடு சாலை, கோடம்பாக்கம் , சென்னை–600 024, T.S.No.3/1, 3/2 & 4, Block No.28, புலியூர் கிராமத்தில் அமைந்துள்ள மனையில் 28.58 ச.மீ. பரப்பளவு நிலத்தினை சாலை விரிவாக்கத்திற்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செவாகும் செலவீனம் ரூ.47,600/– யை "ஆணையர் சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக மனை உரிமையாளரிடமிருந்து பெற்று கொள்ளவும்,

(3) தானமாக வழங்கிய நிலத்திற்கு தளப்பரப்பு குறியீடு (FSI) உபயோகப்படுத்தாததால் நிலத்தின் உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு "வளர்ச்சி உரிமை சான்றிதழ்" சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க வேண்டி பரிந்துரைப்பதற்கும்,

மேற்கண்ட (1) முதல் (3) வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) வின் கூட்டம் 17.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.33/2015ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/2843/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.482/2015 பொருள் எண்.33**

**மண்டலம்–6, வார்டு–75ல் சிவசண்முகபுரம் ஏ.பிளாக் 1வது தெரு, ஓட்டேரியில் உள்ள 667 சதுர அடி கொண்ட சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பல்நோக்கு கட்டிடத்தை பூங்கா நகர் கூட்டுறவு சங்க பண்டக சாலையின் (சிந்தாமணி கூட்டுறவு சங்கம்) நியாய விலைக்கடை நடத்துவதற்கு மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய அனுமதி**

இணை பதிவாளர் / மேலாண்மை இயக்குநர், பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை அவர்களின் 17.04.2015 நாளிட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்–6, வார்டு–75ல் தனியார் கட்டிடத்தில் செயல்பட்டு வரும் பூங்கா நகர் கூட்டுறவு சங்க பண்டகசாலையின் (வள்ளுவன் தெரு 3டிபி045) நியாய விலை கடையில் 1000த்திற்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் உள்ளதால், நியாய விலைக்கடைக்கு அருகில் சிவசண்முகபுரம் ஏ.பிளாக், 1வது தெரு, ஓட்டேரி, சென்னை–12ல் மாமன்ற உறுப்பினர், வார்டு–75 அவர்களின் வளர்ச்சி நிதியில் இருந்து 850 சதுரஅடி அளவில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாகவும், இதனை நியாய விலைக்கடைக்கு ஒதுக்கீடு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மான எண்.312/2013ல் பொது மக்கள் நலன் கருதி, வியாபார நோக்கமின்றி செயல்படும் அரசு நிறுவனமான நுகர்பொருள் வாணிப கழக நியாய விலைக்கடைகளுக்கு, கூட்டுறவு நியாய விலைக்கடைகளுக்கும் கடைகள் ஒதுக்கீடு செய்யும்போது மாத வாடகையாக சதுர அடி ஒன்றிற்கு ரூ.5/– என நிர்ணயம் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு கடைகள் ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டு வருவது நடைமுறையிலுள்ளது.

இதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மண்டலம்–6, வார்டு–75ல் சிவசண்முகபுரம் ஏ.பிளாக் 1வது தெரு, ஓட்டேரி, சென்னை–12ல் உள்ள 667 சதுர அடி கொண்ட பல்நோக்கு கட்டிடத்தை சிந்தாமணி கூட்டுறவு சங்கத்திற்கு நியாய விலைக்கடை நடத்த மன்றத்தீர்மானம் எண்312/2013ன்படி சதுர அடிக்கு ரூ.5/– என வாடகை நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்ய 6வது மண்டல வார்டு குழுவின் தீர்மான எண்.49, நாள்.10.07.2015ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மண்டலம்–6, வார்டு–75ல் சிவசண்முகபுரம் ஏ.பிளாக் 1வது தெரு, ஓட்டேரி, சென்னை–12ல் உள்ள 667 சதுர அடி கொண்ட பல்நோக்கு கட்டிடத்திற்கு, சதுர அடிக்கு ரூ.5/– வீதம் மாத வாடகை ரூ.3335/– மற்றும் 12 மாத வாடகை முன் பணமாக ரூ.40,020/–யை செலுத்த வேண்டும் என்றும், கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யவிருப்பின் சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடனும் பூங்கா நகர் கூட்டுறவு சங்கத்திற்கு (சிந்தாமணி கூட்டுறவு சங்கம்) நியாய விலைக்கடை நடத்துவதற்கு ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.259/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/2842/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.483/2015** **பொருள் எண்.34**

**மண்டலம்–6, கோட்டம்–78, நரசிங்கபெருமாள் கோயில் தெரு, சூளை சென்னை–112ல் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தை பூங்கா நகர் கூட்டுறவு சங்கத்திற்கு (சிந்தாமணி கூட்டுறவு சங்கம்) மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக (அமுதம் சில்லறை அங்காடி) நியாய விலை கடைகள் நடத்த மாத வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி.**

மன்றத்தீர்மான எண்.357/2010, 29.07.2010 நாளிட்ட மத்திய வட்டார அலுவலகத்திற்குட்பட்ட பழைய மண்டலம்–7, வார்டு–10, புதிய மண்டலம்–6, வார்டு–78ல் எண்–1/1, நரசிங்க பெருமாள் கோயில் தெரு, சூளை, சென்னை–112ல் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 800 சதுர அடி கொண்ட பல்நோக்கு கட்டிடத்தை நியாய விலைக்கடைக்காக பூங்கா நகர் கூட்டுறவு சங்கததிற்கு (சிந்தாமணி கூட்டுறவு சங்கம்) சதுர அடிக்கு ரூ.20/– என வாடகை நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மன்றத் தீர்மான எண்.312/2013ன்படி பொது மக்கள் நலன் கருதி, வியாபார நோக்கமின்றி செயல்படும் அரசு நிறுவனமான நுகர்பொருள் வாணிப கழக நியாய விலைக்கடைகளுக்கும், கூட்டுறவு நியாய விலைக்கடைகளுக்கும் இனி வரும் காலங்களில் மாத வாடகை 1 சதுரடி ரூ.5/– என்று நிர்ணயம் செய்து வழங்கப்பட்டு வருவது நடைமுறையில் உள்ளது.

இதற்கிடையே மேற்கண்ட கட்டிடத்தின் ஒரு பகுதியை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் அமுதம் சில்லரை அங்காடி நியாய விலைக் கடைக்காக ஒதுக்கீடு செய்து தருமாறு 03.10.2012, 25.04.2013 மற்றும் 12.06.2013 நாளிட்ட கடிதங்கள் மூலம் கோரப்பட்டுள்ளது. மாமன்ற உறுப்பினர் வார்டு–78 அவர்களின் 08.11.2012 மற்றும் 05.12.2012 நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்கு ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 20.12.2014ல் சிந்தாமணி கூட்டுறவு சங்கத்தின் இசைவு கடித நகல் பெறப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மான எண்.357/2010, 29.07.2010ன்படி மண்டலம்–6, கோட்டம்–78, எண்.1/1, நரசிங்க பெருமாள் கோயில் தெரு, சூளை, சென்னை–112ல் உள்ள 800 சதுர அடி கட்டிடத்தை சிந்தாமணி கூட்டுறவு சங்கத்திற்கு நியாய விலை கடை நடத்த ஒதுக்கீடு செய்யப்பட்டது. மொத்த கட்டிடமும் தங்களுக்கு தேவையில்லை என்று தெரிவித்தால் மன்றத்தீர்மானத்தின்படி 1 சதுர அடிக்கு ரூ.5/– என வாடகை நிர்ணயம் செய்து 400 சதுர அடி கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் அமுதம் சில்லரை அங்காடிக்கு ஒதுக்கீடு செய்யவும், 400 சதுரடி கட்டிடத்தை சிந்தாமணி கூட்டுறவு சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்யவும் வார்டுகுழுத் தீர்மானம் எண்.48/2015 நாள். 10.07.2015 ன்படி தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மண்டலம்–6, கோட்டம்–78, எண்.1/1 நரசிங்க பெருமாள் கோயில் தெரு, சூளை சென்னை–112ல் உள்ள 800 சதுரடி கட்டிடத்தை மொத்த கட்டிடமும் தங்களுக்கு தேவையில்லை என்று தெரிவித்ததால் மன்றத்தீர்மானத்தின்படி 1 சதுரடிக்கு ரூ.5/– வீதம் என வாடகை நிர்ணயம் செய்து 400 சதுரடி கட்டிடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் அமுதம் சில்லரை அங்காடிக்கு மாத வாடகை ரூ.2000/– மற்றும் 12 மாத முன்பணமாக ரூ.24,000/–யை செலுத்த வேண்டும் என்றும், 400 சதுரடி கட்டிடத்தை பூங்கா நகர் கூட்டுறவு சங்கத்திற்கு (சிந்தாமணி கூட்டுறவு சங்கத்திற்கு) 1 சதுரடி ரூ.5/– வீதம் மாத வாடகை ரூ.2000/– மற்றும் 12 மாத முன்பணமாக ரூ.24,000/–யை செலுத்த வேண்டும் என்றும் கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்யவிருப்பின் சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையுடனும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் அமுதம் சில்லரை அங்காடிக்கு மற்றும் பூங்கா நகர் கூட்டுறவு சங்கத்திற்கு (சிந்தாமணி கூட்டுறவு சங்கம்) நியாய விலை கடைகள் நடத்துவற்கு ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.260/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**வ.து.ந.க.எண்.ஜி1/2986/2015.**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.484/2015** **பொருள் எண்.35**

**தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வாயிலாக இ–சேவை மையங்கள் – வரிகள் மற்றும் கட்டணங்களை வசூலிக்க ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள மன்றத்தின் அனுமதி**

தமிழ்நாடு அரசு, தேசிய மின் ஆளுகைத் திட்டத்தின் கீழ் (National e-Governance Plan-NeGP) அரசின் அனைத்து சேவைகளையும் பொது மக்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே சென்று வழங்குவதற்கான முயற்சியை மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவைகளை வழங்குவதோடு, அரசின் செயல்பாடுகளில் ஒளிவு மறைவின்மையையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துகிறது.

2014–2015 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட உரையில் நிருவாக ஆளுகை (Governance) என்ற தலைப்பில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பில்,

"நகர்ப்புறங்களில் சொத்து வரி, மின் கட்டணம், குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றல் கட்டணம் உள்ளிட்ட பல்வேறு வரிகளையும், கட்டணங்களையும் பொது மக்கள் ஒரே இடத்தில் செலுத்திட வசதியாக, சென்னை மாநகரத்தில் பத்து இடங்களில் நகர்ப்புற இ–சேவை மையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விரைவில் தொடங்கி வைக்க உள்ளார்கள் என்றும், இந்தப் பொது சேவை மையங்கள் பொது மக்களுக்கான மின்னணுச் சேவைகளையும், பிற சேவைகளையும் வழங்கும் என்றும் சென்னை மாநகரில் மேலும் இது போன்ற 200 இ–சேவை மையங்கள் தொடங்கப்படுவதுடன் பிற மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கும் இத்தகைய வசதிகள் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்" என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.02.2014 அன்று தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில் நுட்பவியல் துறையின் மூலம் சென்னை மாநகரில் முன்னோடித் திட்டமாக 14 நகர்ப்புற இ–சேவை மையங்கள் (Urban Common e-Service Centres), தமிழ்நாடு அரசு இ–சேவை வலைதளம், சென்னை மற்றும் இதர 25 மாவட்டங்களில் மின் மாவட்டத் திட்டம் ஆகியவற்றை தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 04.08.2014 அன்று ஆற்றிய உரையில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் வாயிலாக அரசு இ–சேவை மையங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து, சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மண்டலம் மற்றும் வார்டு அலுவலகங்களில், இ–சேவை மையங்களை அமைக்க ஏதுவாக இடங்களை ஒதுக்கீடு செய்து தர, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தினரால் அளிக்கப்பட்ட கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, தலைமை அலுவலகம், மண்டல அலுவலங்கள் மற்றும் 50 வார்டு அலுவலகங்களில் இடங்கள் தெரிவு செய்யப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.07.2015 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மூலமாக அமைக்கப்பட்டுள்ள இ–சேவை மையங்களை துவக்கி வைத்தார்கள்.

சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் அமைக்கப்படும் இந்த இ–சேவை மையங்களில், அரசு துறைகள் மூலமாக வழங்கப்படும், சாதிச் சான்றிதழ், வருவான சான்றிதழ் போன்றவை அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள குறைந்த கட்டண அடிப்படையில் வழங்கப்படும். சென்னை மாநகராட்சியால் வழங்கப்படும் சேவைகளான பிறப்பு/இறப்பு சான்றிதழ்கள் வழங்குதல், சொத்துவரி மற்றும் இதர வரிகளை செலுத்துதல் போன்ற சேவைகளும் இந்த இ–சேவை மையங்கள் மூலம் தொடர்ந்து வழங்கப்படும். சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கட்டடங்களில் இ–சேவை மையங்கள் இயங்குவதால், இச்சேவைகளை கட்டணங்கள் ஏதும் இல்லாமல் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் முன்வந்துள்ளது. மேலும், அனைத்து வார்டு பகுதி மக்களுக்கு தமிழக அரசின் சேவைகள் எளிதில் சேரும்பொருட்டு, பகுதி அலுவலகங்கள் மற்றும் பிற வார்டு அலுவலகங்கள் ஆகியவற்றில் கூடுதலாக இ–சேவை மையங்களை அமைக்கவும் முன்வந்துள்ளது.

எனவே, தமிழக அரசின் சேவைகளை சென்னை மாநகராட்சி மூலமும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்துடன் இணைந்து, பொதுமக்களிடம் எளிதில் சேர்க்க ஏதுவாக, தமிழ்நாடு

அரசு கேபிள் டிவி நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ள நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.257/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**வ.து.ந.க.எண்.ஜி4/4315/2015.**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.485/2015** **பொருள் எண்.36**

**வருவாய் துறை – புவிசார் தகவல் அமைப்பு(GIS) – உதவியுடன் சென்னை மாநகராட்சியின் வருவாயினை ஈட்டுவதற்கு மன்றத்தின் அனுமதி**

புவிசார் தகவல் அமைப்பு (GIS) உதவியுடன் தேவையான விவரங்களை சேகரித்து, சேகரித்த விவரங்களின் அடிப்படையில் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிந்து எளிதில் திட்டங்களை வகுக்க நவீன யுக்திகள் பல உள்ளன.

தமிழக அரசின் நான்காவது நிதிக்குழுவின் பரிந்துரை எண்.22(8)ல், புவிசார் தகவல் அமைப்பு (GIS) உதவியுடன், நவீன யுக்திகளை பயன்படுத்தி, நகரில் உள்ள சொத்துக்களின் விவரங்களை சேகரித்து, சொத்துவரி விதிப்பினை உறுதி செய்து, உள்ளாட்சி அமைப்பிற்கான வருவாயினை ஈட்டிட பரிதுரைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில், மதுரை, திருச்சி போன்ற நகரங்களில் இந்த யுக்தியினை பயன்படுத்தி திட்டமிடல்கள் மேற்கொண்டதைப் போன்று, பெரிய மாநகராட்சிகளிலும் இந்த யுக்தியினை பயன்படுத்தி, வருவாயினை ஈட்ட நடவடிக்கை எடுக்கலாம் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட தமிழக அரசின் நான்காவது நிதிக்குழுவின் பரிந்துரையினை தமிழக அரசு ஏற்று, இதுகுறித்து உரிய மேல் நடவடிக்கையினை எடுக்க அறிவுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் 19.06.2015 நாளிட்ட கடிதத்தில், புவிசார் தகவல் அமைப்பு (GIS) உதவியுடன் தேவையான விவரங்களை சேகரித்து, திட்டங்களை தீட்டுவது குறித்து உரிய மேல் நடவடிக்கையினை எடுக்க தகுதியான கலந்தாலோசகரை (Consultant agency) சென்னை மாநகராட்சிக்கு நியமித்து தருவதற்கான ஏற்பாடுகளை செய்துதர திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, புவிசார் தகவல் அமைப்பு (GIS) உதவியுடன், நவீன யுக்திகளை பயன்படுத்தி, நகரில் உள்ள சொத்துக்களின் விவரங்களை சேகரித்து, சொத்துவரி விதிப்பினை உறுதி செய்து, சென்னை மாநகராட்சிக்கான வருவாயினை ஈட்டிடவும், சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்காக தேவைப்படும் பிற விவரங்களை சேகரிக்கவும், சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே உள்ள புவிசார் தகவல் அமைப்பு (GIS) பிரிவினை மேம்படுத்துவது, வருவாய் துறை அலுவலர்கள், புவிசார் தகவல் அமைப்பு (GIS) பிரிவு அலுவலர்கள் மற்றும் இந்த தொழில்நுட்பத்தினை பயன்படுத்தும் அலுவலர்கள் ஆகியோருக்கு தேவையான பயிற்சிகள் அளித்தல் போன்ற பணிகளை முழுமையாக மேற்கொண்டு, இத்திட்டத்தினை முழுமையான முடித்துத் தர தேவையான தகுதிவாய்ந்த ஒரு கலந்தாலோசகரை (Consultant agency) சென்னை மாநகராட்சிக்கு நியமித்துத்தர தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தினைக் கோர நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.258/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**நி.ம.உ.துந.க.எண்.எல்இ9/2629/2015**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.486/2015** **பொருள் எண்.37**

**நிலம் மற்றும் உடைமைத்துறை – மண்டலம்–13, வார்டு–170 செட்டி தோட்டம், பம்பிங் ஸ்டேஷன் தெருவில் சர்வே எண்.65, பிளாக் எண்.22 T.S.No.2-ல் ஆதி திராவிடர் நலத்துறைக்கு சொந்தமான நிலத்தை சமூக நலக்கூடம் கட்டுவதற்காக சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க கோருவதற்கு அனுமதி**

மண்டலம்–13, வார்டு–170 செட்டி தோட்டம் பகுதியை மாண்புமிகு மேயர் அவர்கள் களஆய்வு செய்தபோது சமூக நலக்கூடம் கட்டித்தர பொதுமக்கள் கோரியதன் அடிப்படையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, மாண்புமிகு மேயர் அவர்கள், சமூக நலக்கூடம் கட்டிதர நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

இதனை தொடர்ந்து 13–வது மண்டல அலுவலர்(பொ) அவர்களின் கடிதத்தில் மண்டலம்–13, வார்டு–170 செட்டி தோட்டம் ஜோதியம்மாள் நகர் மற்றும் நெருப்பு மேடு பகுதியில் வசிக்கும் பெரும்பாலான மக்கள் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள தாழ்த்தப்பட்ட இனத்தை சார்ந்தவர்கள் எனவும், இவர்களின் பொது நல பயன்பாட்டிற்காக அப்பகுதியில் சமுதாய நலக்கூடம் எதுவும் இல்லாததால் மேற்படி மக்களுக்காக சென்னை மாநகராட்சியின் மூலம் சமுதாய நலக்கூடம் ஒன்று அமைக்கப்பட வேண்டியது அவசியமாக கருதப்படுவதால் அப்பகுதியில் பம்பிங் ஸ்டேஷன் தெருவில் சர்வே எண்.65, பிளாக் எண்.22, T.S.No.2-ல் ஆதி திராவிடர் நலத்துறைக்கு சொந்தமான 2399 ச.மீ காலி இடத்தில் ஆதி திராவிட மாணவர்களுக்கு (பெண்கள்) விடுதிக்காக ஒதுக்கப்பட்ட நிலம் போக 821.65 ச.மீ நிலம் காலியாக உள்ளதால் மேற்படி காலி நிலத்தில் சென்னை மாநகராட்சி மூலம் சமூக நலக்கூடம் ஒன்று உருவாக்கினால் அப்பகுதி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதால், மேற்படி நிலத்தை ஆதி திராவிட நல துறையிடமிருந்து தானமாக பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்து வார்டுகுழு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மேல் நடவடிக்கைக்காக இத்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தனி வட்டாட்சியர்/நி.ம.உ.து–வின் புலத்தணிக்கை குறிப்பில் மேற்படி நிலமானது சென்னை மாநகராட்சி நிரந்தர நிலப்பதிவேட்டில் சர்வே எண்.2 (பழைய சர்வே எண்.65/1) சர்கார் புஞ்சை 0.39 ஏக்கர் சரவணப்பிள்ளை மகன் ஜகனாத பிள்ளை, எஸ்.டி. நாதன், காலி என பதிவுகள் உள்ளதாகவும், மாம்பலம் வட்டாட்சியர் அலுவலக நிரந்தர நிலப்பதிவேட்டில் உட்பிரிவு செய்யப்பட்டு சப்– டிவிஷன் 1, பழைய சர்வே எண்.65/1, சர்கார் புறம் போக்கு நிலம் சுமார் ஹெக்டேர் 0.23.99.0 ஏர்ஸ் பரப்பளவு தமிழ்நாடு அரசு காலி மனை என பதிவாகியுள்ளதாக தெரிவித்து அதற்கு ஆதாரமாக வட்டாச்சியர் அலுவலக ஆவணங்களின் நகல் பெற்று சமர்ப்பித்துள்ளார்.

மேலும் மேற்படி நிலமானது நில பொறுப்பு சான்று (TCC) படிவம் மூலமாக சிறப்பு வருவாய் அலுவலர் மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலகம், சென்னை 600 001 அவர்களால் ஆதி திராவிடர் நலத்துறைக்கு பெறப்பட்டுள்ளதாகவும், மேற்படி புலம் முழுவதும் சுற்றிலும் காம்பவுண்டு சுவர் போடப்பட்டு காலி மனையாக உள்ளதாகவும், காம்பவுண்டு சுவர் நடுவில் கிரில் கேட் அமைக்கப்பட்டுள்ளதாகவும் காலியிடம் மிகவும் சுகாதாரமற்ற நிலையில் கழிவுகள் நிறைந்து காணப்படுவதாகவும், புலத்தை நில அளவை செய்தபோது சமூக நலக்கூடம் கட்ட உத்தேசித்துள்ள இடம் 741 ச.மீ அளவில் உள்ளதால் சென்னை மாநகராட்சி மூலம் சமூக நலக்கூட கட்டிடம் கட்ட ஆதி திராவிடர் நலத்துறைக்கு சொந்தமான மேற்படி காலியிடம் தகுந்ததாக உள்ளதால் சென்னை மாவட்ட ஆதி திராவிடர் நலத்துறையிடமிருந்து நிலத்தினை பெற்று சமூக நலக்கூடம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே மண்டலம்–13, வார்டு–170, சைதாப்பேட்டை நகரம், செட்டி தோட்டம், பம்பிங் ஸ்டேஷன் தெருவில் பிளாக் எண். 22, சர்வே எண்.2 (பழைய சர்வே எண்.65/1) சர்க்கார் புறம்போக்கு ஆதி திராவிட நலத்துறைக்கு சொந்தமான 741 ச.மீ பரப்பளவுள்ள நிலத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக சமூக நலக்கூடம் அமைப்பதற்கு சென்னை மாநகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்யுமாறும் அவசர அவசியம் கருதி மேற்படி புலத்தில் முன்நுழைவு அனுமதி வழங்குமாறும் ஆதி திராவிட நலத்துறை / இயக்குநரை கோருவதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.252/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண்.பி2/3245/2012**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.487/2015** **பொருள் எண்.38**

**மண்டலம் –2, வார்டு –20, மணலி, காமராஜர் சாலையில் வாகன இயக்கூர்தி நிலையம் (மண்டலம்–3க்காக) கட்டும் பணிக்கான ஒப்பத்தை ரத்து செய்து ஒப்பந்ததாருக்கு பிணை வைப்புத்தொகையை திரும்ப வழங்க அனுமதி**

மண்டலம்–2, வார்டு–20, மணலி, காமராஜர் சாலையில் வாகன இயக்கூர்தி நிலையம் (மண்டலம்–3க்காக) கட்டும் பணிக்காக 03.01.2014 அன்று ஒப்பம் கோரப்பட்டது. இதில் திரு.P.திருமூர்த்தி அவர்கள் குறைந்த ஒப்பந்ததாரராக தேர்வு செய்யப்பட்டு மன்றத்தீர்மானம் பெற்று ஒப்பந்ததாரருக்கு 14.07.2014 அன்று பணி ஆணை வழங்கப்பட்ட து.

இந்நிலையில் மேற்கண்ட பணி செய்ய தேர்வு செய்யப்பட்ட இடம் மண்டலம்–2 சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர்அகற்று வாரியத்திற்கு தேவைப்பட்டதால் (CMWSSB) மேற்கண்ட இடத்தினை அளிக்க மண்டலம்–2 வது வார்டு குழு தீர்மானம் பெறப்பட்டு சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்திற்கு அந்த இடம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. இதனால் மண்டலம்–2க்கு உரிய மேற்கண்ட இடத்தில் மண்டலம்–3ற்கான வாகன இயக்கூர்தி நிலையம் கட்ட போதுமான இடம் இல்லை.

தற்போது மண்டல அலுவலகம்–3ன் பயன்பாட்டிற்காக மண்டலம்–7, வார்டு–83 சர்வே.எண்.639/2 அம்பத்தூர் மதனகுப்பம் சாலையில் வாகன இயக்கூர்தி நிலையம் கட்டும் பணிக்காக (மண்டலம்–3ற்காக) ரூ.5,51,00,000/- மதிப்பீட்டில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒப்பந்ததாரர் திரு.P.திருமூர்த்தி அவர்கள் மண்டலம்–3ற்கான வாகன இயக்கூர்தி நிலையம் கட்ட இடம் ஒப்படைப்பு செய்யாததால், இப்பணிக்காக செலுத்தியுள்ள ஒப்ப முன்வைப்புத்தொகையை திரும்ப வழங்குமாறு கடிதத்தில் கோரியுள்ளார்கள்.

எனவே, மண்டலம்–3க்காக வாகன இயக்கூர்தி நிலையம் கட்டும் பணிக்காக மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளதால் மண்டலம்–2, வார்டு–20, மணலி, காமராஜர் சாலையில் மண்டலம்–3க்காக வாகன இயக்கூர்தி நிலையம் கட்டும் பணிக்கான ஒப்பத்தை ரத்து செய்யவும், இப்பணிக்காக ஒப்பந்ததாரர் திரு.P.திருமூர்த்தி அவர்கள் செலுத்தியுள்ள ஒப்ப முன்வைப்புத்தொகையை திரும்ப வழங்கவும் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.08.2015 அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.217/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.
>
2) இந்த பணிக்கான செலவினத்தை தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தின் மூலமாக (வெளி நிதி KFW நிறுவனத்திடம், பெரும பகுதி மானியமாகவும், கடனாகவும் ) மீதம் சென்னை மாநகராட்சியின் நிதியின் கீழ் மின்துறையின் ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் கீழ் மேற்கொள்ளவும்.
3) ஒப்ப நாமூனாவில் குறிப் பிட்டுள்ள நிபந்தனையின்அ டிப் படை யில் துறையின் அளவீட்டு புத்தகத்தில் குறிக்கப்பட்டு பணம் பட்டுவாட செய்யவும்

மேற்காணும் 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) & (2) –ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.08.2015 அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.229/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.269/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பா.து.ந.க.எண்.பி3/1181 /2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.501/2015** **பொருள் எண்.52**

**பாலங்கள் துறை – மண்டலம்–7 வார்டு–83ல் உள்ள கொரட்டூர் ஏரி உபரிநீர் கால்வாயின் குறுக்கே கால்வாய் சாலையில் மதனாங்குப்பம் பிரதான சாலை அருகேயுள்ள தரை பாலத்தினை இடித்து விட்டு புதிய பெட்டக வடிக பாலம் அமைக்கும் பணி – ரூ.3,41,90,000/– க்கு மதிப்பீட்டிற்கு அனுமதி.**

கீழ் குறிப்பிட்ட பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 01. பணியின் பெயர் | : | மண்டலம்–7 வார்டு–83ல் உள்ள கொரட்டூர் ஏரி உபரிநீர் கால்வாயின் குறுக்கே கால்வாய் சாலையில் மதனாங்குப்பம் பிரதான சாலை அருகேயுள்ள தரை பாலத்திை இடித்து விட்டு புதிய பெட்டக வடிக பாலம் அமைக்கும் பணி |
| 02. எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | பாலங்கள் துறை |
| 03. சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | பாலங்கள் துறை |
| 04. தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் நாள் | : | தலைமை பொறியாளர்(பொது)நாள். 26.08.2015 |
| 05. மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன்வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2014– 2015 |
| 06. மதிப்பீட்டின் தொகை | | |
| (அ) பணி செலவினம் மட்டும் | : | ரூ. 28372373.10 |
| (ஆ)மேற்பார்வை செலவினம் 10% | : | ரூ. 2837237.31 |
| (இ) சிறுமேற்பார்வை செலவினம் 2.5% | : | ரூ. 709309.33 |
| (ஈ) மின்விளக்குகள் செலவு | : | ரூ. 1,00,000.00 |
| (உ) தமிழ்நாடு தொழிலாளர்கள் பொது நல நிதி 1 % | : | ரூ. 283723.73 |
| (ஊ) எதிர்பாரா செலவினம் 2.5% | : | ரூ. 703632.80 |
| மொத்தம் | : | ரூ. 3,41,90,000.00 |
| 07. ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு (அ) ஒரு மீட்டருக்கு செலவு | : | – |
| 08. வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா ? | : | ஆம் |
| 09. மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் நாள். | : | வார்டு குழுவின் தீர்மான எண். பின்னர் பெறப்படும். |
| 10. நிதியின் மூலத்தன்மை | : | மூலதன நிதி |
| (அ) வரவு செலவு ஒதுக்கீடு பாலங்கள் மற்றும் சிறு மேம்பாலங்கள் 2014 – 2015 | : | ரூ. 42 கோடி |
| (ஆ) மதிப்பீட்டிற்கு இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள தொகை | : | ஆணையரின் நிர்வாக அனுமதி பெறப்பட்ட பின்னர் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் |
| (இ) மீதம் உள்ள நிதி (அ–ஆ) | : | |
| (ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | ரூ. 3,41,90,000/– |

மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ. ரூ.3,41,90,000/– மதிப்பீட்டிற்கும் தமிழ்நாடு அரசிதழ் எண்.301, நாள்.30.10.2003ல் வெளியிடப்பட்டுள்ள தமிழக அரசின் சட்டம் எண்.9/2003, சென்னை மாநகராட்சியின் சட்டம் விதி 1919ல் விதிகள் 78 மற்றும் 80(2) மற்றும் மன்றத்தின் தீர்மான எண்.639/2003, நாள்.21.11.2003ல் அளிக்கப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படியும் மற்றும் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்ட பின் ஒப்பங்கள் கோரி பணியினை செயல்படுத்தவும் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதியின்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.08.2015 அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.235/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.272/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**க.து.ந.க.எண்.பி1/2349 /2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.502/2015** **பொருள் எண்.53**

**மண்டலம்–9, வார்டு–113, நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலையில் மண்டல அலுவலகம்–9 கட்டும் பணிக்காக மதிப்பீட்டிற்கு அனுமதி**

| | | | |
|---|---|---|---|
| 1 | பணியின் பெயர். | : | மண்டலம்–9, வார்டு–113, நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலையில் மண்டல அலுவலகம்–9 கட்டும் பணி |
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | : | மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை 2013–2014, அறிவிப்பு எண்–82. |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | : | மண்டலம்–9 |
| 4 | சம்பந்தப்பட்ட துறையால் அனுமதி | : | பெறப்பட்டுள்ளது |
| 5 | தொழில் நுட்ப அனுமதி அளித்த அதிகாரி செயல்முறை ஆணை மற்றும் நாள் | : | பின்னர் பெறப்படும் |
| 6 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்யலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | : | 2014 -2015 ஆம் ஆண்டின்அலுவலக விலை விவரப்படி |
| 7 | மதிப்பீட்டின் தொகை | : | ரூ. 9,99,90,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | : | ரூ . 8,79,63,538.96 |
| | (ஆ) மேலான மேற்பார்வை செலவு | : | ரூ. 87,96,353.90 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு | : | ரூ. 8,79,635.39 |
| | (ஈ) எதிர்பாரா செலவு | : | ரூ. 10,31,018.66 |
| | (உ) தமிழ்நாடு கட்டுமாண தொழிலாளர்கள் நல வாரியம் 1% | : | ரூ. 8,79,635.39 |
| | (ஊ) தர நிர்ணயம் | | ரூ. 4,39,817.70 |
| | மொத்தம் | : | ரூ. 9,99,90,000.00 |
| | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | : | ஆம் |
| 9 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த வார்டு குழுவின் தீர்மான எண் மற்றும் நாள் | : | பெறப்படவுள்ளது |
| 10 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | : | புதிய பணி |
| 11 | நிதியின் தன்மை | : | ஹட்கோ நிதி |
| 12 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | : | ரூ. 9,99,90,000.00 |

மேற்கண்ட பணிக்காக 2014-2015 ஆம் ஆண்டில் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் ரூ.9,99,90,000/-க்கு (ரூபாய் ஒன்பது கோடியே தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து தொண்ணூராயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்.6/2008, நாள்.26.08.2008ல் வெளியிடப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படி சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி (78)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.08.2015 அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.238/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.
>
> ''ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.277/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**பா.து.ந.க.எண்.பி3/2220/2013**
**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.503/2015** **பொருள் எண்.54**

**பாலங்கள் துறை – மண்டலம்–9 மற்றும் 10 வார்டு–110 மற்றும் 134ல் உள்ள கோடம்பாக்கம் மேம்பாலத்தில் துரு பிடிக்காத எஃகு (Stainless Steel) கைப்பிடிகள் அமைக்கும் பணி – திருவாளர்கள்.ஸ்டீல் அத்தாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் அவர்களுக்கு ரூ. 1,34,55,000/– க்கு பணியினை அளிக்க அனுமதி**

மண்டலம்–9 மற்றும் 10 வார்டு–110 மற்றும் 134ல் உள்ள கோடம்பாக்கம் மேம்பாலத்தில் துரு பிடிக்காத எஃகு (Stainless Steel) கைப்பிடிகள் அமைக்கும் பணி 2014 – 2015 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி ரூ.1,23,20,000/–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது. மண்டலம்–9 மற்றும் 10 வார்டு–110 மற்றும் 134ல் உள்ள கோடம்பாக்கம் மேம்பாலத்தில் துரு பிடிக்காத எஃகு (Stainless Steel) கைப்பிடிகள் அமைக்கும் பணிக்காக 21.11.2014 அன்று தொழில்நுட்ப ஒப்பம் திறக்கப்பட்டது, அதில் திருவாளர்கள். ஸ்டீல் அதாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் நிறுவனம் மட்டுமே தகுதியான ஒப்பந்ததாரராக தேர்ந்தெடுக்கப்பட்டு, நிதி ஒப்பம் 27.11.2014 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எ ண் | ஒப்பந்தாரர் பெயர் | 2014–2015 ஆம் ஆண்டு விலை விவரப்படி அலுவலக பணித்தொகை | ஒப்பத்தொகை | ஒப்ப சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள். ஸ்டீல் அதாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் நிறுவனம் | ரூ.1,05,30,000/– | ரூ.1,49,50,000/– | (+) 41.97 % |

ஒரே ஒப்பந்ததாரரான திருவாளர்கள். ஸ்டீல் அதாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் நிறுவனம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பத்தொகையான ரூ.1,49,50,000/– 2014–2015 ஆம் ஆண்டு விலை விவரப்படி பணித்தொகையை விட (+) 41.97% அதிகம் ஆகும். எனினும், ஒப்பந்ததாரரிடம் 27.11.2014 அன்று விலைகுறைப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில் தனது கடித நாள் 28.11.2014 மூலம் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். மீண்டும் ஒப்பந்ததாரரிடம் 05.08.2015 அன்று விலைகுறைப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில் தனது கடிதம் மூலம் ஏற்கனவே ஒப்புக்கொண்ட விலை ரூ.11500/–மீ பதிலாக ரூ.10350/– மீ என்று விலைகுறைப்பு செய்வதாக தெரிவித்துள்ளார்.

தற்போது 2 கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரரான திருவாளர்கள். ஸ்டீல் அதாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் நிறுவனம் அவர்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பத் தொகையான ரூ.1,34,55,000/– 2014–2015 ஆம் ஆண்டு விலை விவரப்படி பணித்தொகையை விட (+)27.78 % அதிகம் ஆகும்.

எனவே, திருவாளர்கள். ஸ்டீல் அதாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் நிறுவனம் அவர்களுக்கு 2014–2015 ஆம் ஆண்டு விலைவிவரப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 27.78% சதவீதம் அதிகமான ஒப்பத்தொகை ரூ.1,34,55,000/– க்கு பணியை வழங்க 27.08.2015 அன்று நடைபெற்ற ஒப்ப கூர்ந்தாய்வு குழுமத்தின் பரிந்துரை வேண்டி சமர்பிக்கப்பட்டு அதன்மேல் ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள். ஸ்டீல் அதாரிட்டி ஆப் இந்தியா லிமிடெட் நிறுவனம் அவர்களுக்கு 2014–2015 ஆம் ஆண்டு விலைவிவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 27.78% சதவீதம் அதிகமான ஒப்பத்தொகை ரூ.1,34,55,000/–க்கு பணி ஆணை வழங்க சென்னை மாநகராட்சி சட்டம் விதி 1919ல் விதிகள் 78 மற்றும் 80 (2)ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.08.2015 அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.236/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.
>
> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.273/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.15.ந.க.எண்.பி1/3259/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 29.08.2015 நாளிட்டட குறிப்பு**

**தீர்மான எண்.504/2015** **பொருள் எண்.55**

**மண்டலம்–15 – வைப்பு நிதி பணி – 2015–16 சாலை வெட்டு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் – மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து) முலமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்.டி.எம்.சுப்பிரமணியம் & கோ அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம் 15ல் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மூலம் சாலை வெட்டு மேற்கொள்ள சாலை வெட்டு கட்டணமாக வார்டு 196க்கு ரூ.3,72,49,200/– வசூலிக்கப்பட்டுள்ள வைப்புநிதியிலிருந்து வார்டு எண்.196ல் சாலை வெட்டு மேற்கொண்ட 159 சாலைகளில் சாலை வெட்டு சீரமைக்கும் பணிகளுக்கான மதிப்பீடு தொகை ரூ.2.81 கோடிக்கு 21.08.2015ல் மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து) முலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1088, நாள்.13.08.2015 மற்றும் நமது எம்.ஜி.ஆர் நாளிதழில் 13.08.2015 அன்று வெளியிடப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது.

ஒப்ப நாளான 21.08.2015 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து) அலுவலகத்தில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1) திருவாளர்.டி.எம்.சுப்பிரமணியம் & கோ
2) திருவாளர்.எம்.பி.கே.எண்டர்பிரைசஸ்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திருவாளர்.டி.எம்.சுப்பிரமணியம்&கோ மற்றும் திருவாளர்.எம்.பி.கே. எண்டர்பிரைசஸ் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதி வாய்ந்த ஒப்பந்தரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து) அலுவலகத்தில் 27.08.2015 அன்று திறக்கப்பட்டது.

| வ. எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2014–2015ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்.டி.எம்.சுப்பிரமணியம் & கோ | ரூ.2,40,97,770.19/– | ரூ.2,53,02,658.70/– | (+)5.00% |
| 2 | திருவாளர்.எம்.பி.கே. எண்டர்பிரைசஸ் | ரூ.2,40,97,770.19/– | ரூ.2,65,05,137.43/– | (+)9.99% |

மேற்படி ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்.டி.எம்.சுப்பிரமணியம் & கோ அவர்களிடம் 27.08.2015 அன்று விலைக்குறைப்பு கோரப்பட்டதற்கு திருவாளர்.டி.எம்.சுப்பிரமணியம் & கோ அவர்கள் 27.08.2015 நாளிட்ட கடிதத்தில் ரூ.2,46,76,116.67/–க்கு (+)2.40% அதிகமாக பணி செய்ய இசைவு தெரிவித்தார். எனவே திருவாளர்.டி.எம்.சுப்பிரமணியம் & கோ அவர்களது ஒப்பந்தத்தொகையான ரூ.2,46,76,116.67/– ஆனது 2014–15ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையைவிட (+)2.40% அதிகம் இதனை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (-)0.15% விழுக்காடு குறைவாகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர் 15 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்.டி.எம்.சுப்பிரமணியம் & கோ அவர்களின் ஒப்பத்தொகை ரூ.2,46,76,116.67/– ஆகும். குறைந்த பணிக்காலமான 3 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.
2) இவ்வொப்பத்தொகையானது 2014–15ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+)2.40% விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (-)0.15% விழுக்காடு குறைவாகும். மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரருக்கு பணியினை வழங்க ஒப்ப கூர்ந்தாய்வுக் குழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

சென்னை மாநகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் சென்னை நகரின் மையப்பகுதிகளுக்கு நிகராக சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளதால் விரிவாக்க பகுதிகள் புதிய பொலிவு பெறும்.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்.டி.எம்.சுப்பிரமணியம் & கோ அவர்களின் ஒப்பத்தொகை ரூ.2,46,76,116.67/– ஆகும். குறைந்த பணிக்காலமான 3 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.
2) பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீதத்தில் பணிகள் வழங்கலாம் என 29.10.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது
3) அதன்படி இவ்வொப்பத்தொகையானது 2014–15ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+)2.40% விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (-)0.15% விழுக்காடு குறைவாகும்.

மேலும் இவ்வொப்பமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்.டி.எம்.சுப்பிரமணியம் & கோ அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.2,46,76,116.67/– 2014–15ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (+)2.40% அதிகம் மற்றும் சந்தைவிலையைவிட (-)0.15% குறைவாக உள்ளது, ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு மேற்படி பணியை குறைந்த ஒப்பத்ததாரரான திருவாளர்.டி.எம்.சுப்பிரமணியம் & கோ அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.2,46,76,116.67/– க்கு பணியினை வழங்க சுற்றின் மூலம் ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுமம் 27.08.2015 அன்று பரிந்துரை செய்கிறது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்.டி.எம்.சுப்பிரமணியம் & கோ அவர்களுக்கு 2014–15ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)2.40% அதிகமான ஒப்பத்தொகை ரூ.2,46,76,116.67/–க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி(ம)நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.08.2015 அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.234/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.
>
> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.271/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண்.பி12/1308/2013**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.505/2015** **பொருள் எண்.56**

**மண்டலம்–12, வார்டு–160, சௌரி தெருவில் உள்ள 24 மனி நேர மகப்பேறு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணிக்கு திரு.V.ராமகிருஷ்ணன் அவர்களின் ஒப்பத்தொகையை விட கூடுதலாக 27,81,909.48 பட்டி தீர்வு செய்யவும் மேற்கண்ட பணிக்கான பணிக்காலத்தை 07.03.2015 வரை கூடுதலாக 5 மாதங்களுக்கு நீட்டிப்பு வழங்கவும் அனுமதி**

மண்டலம்–12, வார்டு–160, சௌரி தெருவில் உள்ள 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணிக்காக 2012- 2013 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ரூ.1,38,00,000/- க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 24.05.2013 அன்று ஒப்பம் கோரப்பட்டது. இதில் குறைந்த ஒப்பந்ததாரராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு.V.ராமகிருஷ்ணன் அவர்களின் ஒப்பத்தொகை 1,45,46,297.60 ஆகும்.

மேற்கண்ட பணிக்காக திட்ட மதிப்பீடு தயாரிக்கப்படும்போது சாய்தளம் மற்றும் கீழ் நிலைத்தொட்டி (Ramp and sump) ஆகிய பணிகள் சேர்க்கப்படவில்லை.

மண்டல நல அலுவலர் அவர்களின் கடிதத்தில் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தையும் புதிய கட்டிடத்துடன் இணைத்து சாய்தளம் (Ramp) சாய்தளம் அவசியம் தேவை என 18.08.2014 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் அவசர தன்மையை கருத்தில் கொன்டு சாய்தள பணிகள் ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மற்றும் கீழ்நிலை தொட்டியும் (Sump) அவசியம் தேவைப்படுவதால் அப்பணிகளையும் சேர்த்து செய்யப்பட்டுள்ளது.

இப்பணி தற்சமயம் முடிவுற்று, முடிவு அறிக்கை (Completion Report) தயாரிக்கப்படும் பொழுது ஒப்பந்தம் சாரா இனங்கள் மற்றும் சாய்தளம் மற்றும் கீழ்நிலை நீர் தொட்டி ஆகிய மொத்தமாக செய்து முடிக்கப்பட்டுள்ள பணிகளுக்கான மொத்த தொகை ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகையிவிட கூடுதலாக ரூ.27,81,909.48 கூடுதல் செலவாகி உள்ளது.

| | |
|---|---|
| ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | ரூ.1,45,46,297.60 |
| ஒப்பந்தம் சாரா இனங்கள் மற்றும் சாய்தளம் மற்றும் கீழ்நிலை நீர் தொட்டி ஆகிய மொத்தமாக செய்து முடிக்கப்பட்டுள்ள பணிகளுக்கான முடிவுத்தொகை | ரூ.1,73,28,207.48 |
| ஒப்பந்ததாரர் ஒப்பத்தொகைக்கு கூடுதலாக செய்யப்பட்டுள்ள கூடுதல் மதிப்பீட்டுத்தொகை | ரூ.27,81,909.48 |
| ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகையை விட அதிகமான கூடுதல் மதிப்பீட்டுத்தொகையின் சதவீதம் | 19.12 % |

மேற்கண்ட பணிக்கான காலம் 08.10.2014 அன்று முடிவடைவதால் ஒப்பந்ததாரர் திரு.V.ராமகிருஷ்ணன் மேற்கண்ட காரணங்களால் கூடுதல் பணிக்காலம் 5 மாதங்கள் வழங்குமாறு (07.03.2015 வரை) கோரியுள்ளார்கள்

மேலும் தமிழ்நாடு ஒளிவுமறைவில்லா ஒப்ப சட்டத்தின்படி (Tamil Nadu Teder Transparency ACT 1998) ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்ப தொகைக்கு கூடுதலாக 25 சதவீதத்திற்குள் அதே ஒப்பந்ததாரரை கொண்டு பணிகளை நிறைவேற்றலாம். அதாவது ரூ.1,45,46,298.00 + ரூ.36,36,574.00 (25 சதவீதம்)= ரூ1,81,82,873.00 ஒப்பத் தொகைக்குள் பணிகளை மேற்கொள்ளலாம். இவ்வகையில் கூடுதல் பணிகளை நிறைவேற்றினால் மறுபடியும் ரூ.36,36,574.00ஒப்பம் கோரி முடிவு செய்து பணிகளை நிறைவேற்ற ஆகும் காலதாமதம் தவிர்க்கப்படும். தற்போது ஒப்பந்ததாரர் செய்து முடித்துள்ள பணிக்கான இறுதித்தொகை ரூ.1,73,28,207.48 ஆகும்

ஒப்பந்ததாரர் ஏற்கனவே 2013 – 2014 ஆம் ஆண்டின் விலைவிவரப்படி ஒப்புக்கொண்ட விலைகளுக்கு ஒப்பந்ததாரர் பணி மேற்கொண்டுள்ளதால் மாநகராட்சிக்கு எந்த வித இழப்பும் ஏற்படாது. இப்பணியானது மதிப்பீட்டுத்தொகையை விட கூடுதலாக செய்யப்பட்ட பணிகளின் சதவீதம் 19.12% . தற்சமயம் பணி நிறைவுற்று பயன்பாட்டிற்கு வரும் நிலையில் உள்ளது.

எனவே, மண்டலம்–12, வார்டு–160, சௌரி தெருவில் உள்ள 24 மனி நேர மகப்பேறு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணிக்கு ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகையை விட கூடுதலாக 27,81,909.48 பட்டி தீர்வு செய்யவும் மேற்கண்ட பணிக்கான பணிக்காலத்தை கூடுதலாக 5 மாதங்களுக்கு நீட்டிப்பு வழங்கவும் (07.03.2015 வரை) நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 20.08.2015 அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.237/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.
>
> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.278/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ப.து.ந.க.எண்.155/2015**

**முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 29.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.506/2015** **பொருள் எண்.57**

**தானப்பத்திரம்**

மண்டலம்–5, கோட்டம்–58ல் திரு.K.ஜமீல் பாஷா (என்கிற) மொகமது ஜமீல் மற்றும் 2 நபர்கள், பழைய கதவு எண். 6, புதிய கதவு எண்.11, வேப்பேரி பிரதான சாலை, பெரியமேடு, சென்னை–600 003 கோட்டை – தண்டையார்பேட்டை வட்டம், R.S.No.409/2, Block No.11, வேப்பேரி கிராமம், கோட்டம்–58 , மண்டலம்– 5ல் உள்ள இடத்திற்கு கட்டிட தகர்ப்பு மற்றும் புதியதாக கட்டிடம் கட்டுவதற்கான அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டார அலுவலகத்தில் PPA/WDCN05/00748/2015, நாள்:07.02.2015ல் விண்ணப்பித்துள்ளார். இந்த விண்ணப்பம் வடக்கு வட்டார அலுவலகத்தில் உள்ள நகரமைப்பு பிரிவின் மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விரிவான வளர்ச்சி திட்ட வரைபடத்தின் வழிகாட்டுதலின் மூலம் ''சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II''–ன் படி 24மீ சாலையாக விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று கண்டறியப்பட்டது. மேலும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி சாலை விரிவாக்கத்திற்கு நிலத்தினை தான பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி வழங்க இயலும். எனவே, திட்ட மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்துள்ள மனையிலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய {[8.5மீ] × [(3.7+3.47)/2மீ] = 30.58 ச.மீ)} 30.58 ச.மீ பரப்பளவு நிலத்தினை தானபத்திரத்தின் மூலம் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க மனுதாரர் விருப்பம் தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

வ.வ.அ.ந.க.எண்.இ8/03485/2015, நாள்:22.04.2015கண்ட கடிதத்தின்படி, வடக்கு வட்டார அலுவலகத்திலிருந்து மேற்கண்ட விவரங்களுடன் இக்கோப்பு நிலம் மற்றும் உடைமை துறைக்கு தொடர் மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டது. மேலும், நி.ம.உ.து.ந.க.எண். DA-1/1554/2015, நாள்.30.06.2015 நிலம் மற்றும் உடைமை துறைக்கு வரப்பெற்ற கோப்புகளின் மீது துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) அவர்களின் அறிவுறுத்தலின்படி உடனடியாக தீர்வு பெறும் பொருட்டு உரிய மேல் நடவடிக்கைக்காக இக்கோப்பு நிலம் மற்றும் உடைமை துறையிலிருந்து பணித்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே,

(1) திரு. K.ஜமீல் பாஷா (என்கிற) மொகமது ஜமீல் மற்றும் 2 நபர்கள் என்பவர்களிடம் இருந்து தான பத்திரம் மூலம் பழைய கதவு எண். 6, புதிய கதவு எண்.11, வேப்பேரி பிரதான சாலை, பெரியமேடு, சென்னை–600 003, R.S.No.409/2, Block No.11, வேப்பேரி கிராமத்தில் அமைந்துள்ள மனையில் 30.58 ச.மீ. பரப்பளவு நிலத்தினை சாலை விரிவாக்கத்திற்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செவாகும் செலவீனம் ரூ. 55,000/– யை ''ஆணையர் சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் வரைவு காசோலையாக மனை உரிமையாளரிடமிருந்து பெற்று கொள்ளவும்,

(3) தானமாக வழங்கிய நிலத்திற்கு தளப்பரப்பு குறியீடு (FSI) உபயோகப்படுத்தாததால் நிலத்தின் உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழ்'' சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க வேண்டி பரிந்துரைப்பதற்கும்,

மேற்கண்ட (1) முதல் (3) வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ''ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) வின் கூட்டம் 17.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.35/2015ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ5/2077/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 31.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.507/2015** **பொருள் எண்.58**

**மண்டலம்–3, வார்டு–26 – ஜி.என்.டி. சாலையில் உள்ள கனரக வாகனங்கள் நிறுத்துமிடம் – சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து தானப் பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளுதல் – சென்னை மாநகராட்சிக்கு தானமாக வழங்கும் நிலத்தினை எடுத்துக் கொள்ள அனுமதி**

மண்டல அலுவலர் மண்டலம்–3, அவர்களின் 26.05.2015 நாளிட்ட குறிப்பில் வார்டு–26 ஜி.என்.டி. சாலையில் உள்ள கனரக வாகனங்கள் நிறுத்தும் இடத்தினை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து சென்னை மாநகராட்சி வசம் தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பது தொடர்பாக உரிய நடவடிக்கைக்கு கோப்பு நிலம் மற்றும் உடைமைத் துறைக்கு வரப்பெற்றுள்ளது.

தனிவட்டாட்சியர்/நிமஉது–ன் புலத்தணிக்கை அறிக்கையில் மண்டலம்–3, வார்டு–26, மாதவரம் வட்டம் (ம) கிராமம், ஜி.என்.டி சாலையில் அமைந்துள்ள கனரக வாகனங்கள் நிறுத்தும் இடம் 21.08.2015 அன்று நேரில் புலத்தணிக்கை மற்றும் அளவீடு செய்யப்பட்டதாகவும் தானமாக வழங்க உள்ள 6.787 ஏக்கர் நிலம் பின்வருமாறு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கனரக வாகனங்கள் நிறுத்த ஒதுக்கப்படும் புலம் விவரம்**

| Details of Parking | Survey No. | Extent in Acres |
|---|---|---|
| PARKING AREA | T.S.No.9, 10, 19 Part, Ward – C, Block No.36 Sl No.808/3 part, 809/1 part, 2 part, 813 part, 814/1, 2 part, 815/1 part, 2 part, 818 part, 819 part, 820/1 part | 3.858 |
| AREA UNDER HT | T T.S.No.39 part Ward – C, Block No.36 Sl No.808/3 part, 809/1 part, 2 part, 813 part, 814/1, 2 part, 815/1 part, 2 part, 818 part, 819 part, 820/1 part | 0.497 |
| TRI ANGULAR PORTION IN HVP | S.No.817/2 part, 827/1 part | 0.175 |
| | | 4.530 Acres |
| **SMALL VEHICLE PARKING AREA** | | |
| PARKING AREA | T.S.No.39 part, ward – C, Block No.22 Sl No. 805/3 part, 808/1A part, 13 part, 808/2 part, 3 part, 804/1 part, 2A part, 2B part, 3 part | 1.100 |
| AREA UNDER HT | Sl No.826 part, 827/1 part, 2 part | 0.380 |
| AUTO WORK SHOP PASSAGE LAND | T.S.No.18 part, 19 Part Sl No. 805/3 part, 808/1A part, 13 part, 2 part | 0.777 |
| **Heavy Vehicle and Small Vehicle Parking Total Area** | **4.530 Acre + 2.257 Acre =** | **6.787 Acres** |

மேலும் புலத்தின் மேலே உயர் மின்னழுத்த கம்பிகள் செல்கின்றது. இரண்டு பொது கழிப்பிடக் கட்டிடங்கள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. புலத்திற்கு நடுவே 60 அடி மற்றும் 80 அடி சாலை அமையப் பெற்று பயன்பாட்டில் உள்ளது. இப்புலம் மாதவரம் ஜி.என்.டி. சாலைக்கு அருகில் உள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் கோப்புடன் வழங்கப்பட்ட வரைப்படத்தில் சர்வே எண். குறிக்கப்படவில்லை. பட்டா நகலில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்கள் வரைப்படத்தில் வேறுபடுகிறது. எனவே, தானமாக வழங்க இருக்கும் புலத்திற்கான சரியான சர்வே எண் மற்றும் அதற்கு உண்டான பரப்பு குறித்து விவரம் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தினை கோரலாம் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் 26.08.2015 நாளிட்ட கடிதம் மாவட்ட வருவாய் அலுவலரால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும தலைமை பொறியாளருக்கு நேரில் தனிவட்டாட்சியரால்

வழங்கப்பட்டது. இதன் பேரில் சர்வே எண்கள் குறிப்பிடப்பட்ட வரைப்படம் நில எடுப்பின் மூலம் பெற்ற நிலத்திற்கான பெற்ற பட்டா நகல்கள் பெறப்பட்டது. மேலும் நில எடுப்பின் மூலம் பெறப்பட்ட நிலத்தில் நில ஒதுக்கீட்டாளர்கள் மற்றும் சாலை வசதிக்காக ஒதுக்கப்பட்ட நிலங்கள் போக மீதமுள்ள காலி நிலம் சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இருப்பதால் சர்வே எண்கள் வரைப்படத்தில் பிரித்து காட்டப்பட்டுள்ளது எனவும், ஒப்படைக்கப்படும் புலத்தின் அளவு 6.787 ஏக்கர் எனவும் தெரிவிக்கப்பட்டது. எனவே, மன்றத் தீர்மானம் பெற்று பத்திர பதிவு செய்ய மேல்நடவடிக்கை தொடரலாம் என 26.08.2015 நாளிட்ட தனிவட்டாட்சியர்/நிமஉது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–3, வார்டு–26 ஜி.என்.டி. சாலையில் உள்ள கனரக வாகனங்கள் நிறுத்தும் இடத்தினை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து சென்னை மாநகராட்சி வசம் தானப்பத்திரம் மூலம் மேற்படி நிலத்தினை எடுத்து கொள்வதற்கு வார்டு குழுவின் பரிந்துரையை எதிர்நோக்கி நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) வின் கூட்டம் 17.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.36/2015ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பொ.து.ந.க.எண்.பி1/4471/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.508/2015** **பொருள் எண்.59**

**தேசிய நகர்புற சுகாதாரதிட்டம்– 2014–2015 நிதியாண்டிற்கு ஒப்பளிக்கப்பட்டதின்படி மருத்துவ அலுவலர்கள் (Medical Officers) மற்றும் மருத்துவ சாரா பணியாளர்கள் (Paramedical staff) மற்றும் இதர அலுவலர்கள் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஒப்பம் கோரி வெளி நிறுவனங்கள் மூலமாக பணி அமர்த்த அனுமதி**

சென்னை மாநகராட்சியில் விரிவாக்கம் செய்வதற்கு முன்னர் இருந்த பகுதிகளில் 75 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமும், 93 நகர நல மையங்கள் மூலமும் சென்னை மாநகர மக்களுக்கு மருத்துவ சேவைகள் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த மையங்கள் மூலம் பொதுமருத்துவம், தொற்று நோய்களுக்கான மருத்துவம், குழந்தைகள் மருத்துவம், தாய்சேய் நல மருத்துவம் மற்றும் குடிசை பகுதியில் உள்ள மக்களுக்கான மருத்துவம் போன்ற பல்வேறு மருத்துவ சேவைகள் அளிக்கப்பட்டு வருகிறது.

தேசிய நகர்புற சுகாதார திட்ட வழிகாட்டுதல்களின்படி சென்னை மாநகராட்சி பகுதிகளில் மருத்துவ வசதிகள் ஒருங்கிணைக்கப்பட்டு 50,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று மறுவரை செய்யப்பட்டு, ஏற்கெனவே சென்னை மாநகராட்சில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர நல மையங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, 100 ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றி அமைக்கவும், விரிவாக்கப்பட்ட பகுதிகளில் 40 ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை மாநகராட்சியில் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் ஏற்படுத்த வேண்டிய 40 ஆரம்ப சுகாதார நிலையங்களில், தமிழக அரசின் கீழ் இயங்கி வந்த கீழ்கண்ட 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் (முகலிவாக்கம், மணலி, மணலி புதுநகர், போரூர் மற்றும் செம்மஞ்சேரி) சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதையும் சேர்த்து 25 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன.

23.02.2015 நாளிட்ட முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் ஆணைப்படி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான மருத்துவ அலுவலர்கள் (முழுநேரம்/பகுதி நேரம்) ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த ஒப்பம் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்ததாரருக்கு 01.03.2015ல் பணியாணை வழங்கப்பட்டு மருத்துவ அலுவர்கள் மருத்துவமனையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் 31.03.2015 நாளிட்ட முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் ஆணைகளின்படி மருத்துவ சாரா பணியாளர்கள்(Para Medical Staff) மற்றும் ஆதரவு பணியாளர்கள் (SupportStaff) ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த ஒப்பம் கோரப்பட்டு குறைந்த ஒப்பந்ததாரருக்கு 01.04.2015ல் பணியாணை வழங்கப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தேசிய நகர்புற சுகாதார திட்டத்தின் 2014–2015 ன்படி கூடுதலாக மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவ சாரா பணியாளர்கள் கீழ்கண்ட எண்ணிக்கையில் பணியமர்த்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

| Sl. No | Category of Staff | Qualification | Description |
|---|---|---|---|
| 1 | Medical Officers ( Full time) | MBBS or post graduation in medicine and Registration with MCI | 20 post Sanctioned by NUHM |
| 2 | Medical Officers (Part time) | MBBS or post graduation in medicine and Registration with MCI | 20 (2013-2014) &20 (2014-2015) sanctioned by NUHM |
| 3 | Epidemiologist | MBBS or post graduation in medicine with DPH and Registration with MCI | 1 New post Sanctioned by NUHM (2014-2015) |

| | | | |
|---|---|---|---|
| 4 | Staff Nurses | Staff nurse course (Registration with Nursing council) | 80 posts Sanctioned by NUHM (2014-15) |
| 5 | ANMs | ANM course (Registration with Nursing council) | 122 posts Sanctioned by NUHM (2014-15) |
| 6 | Lab Technicians | DMLT from Govt. Recognized institution with 2 years experience | 20 posts Sanctioned by NUHM (2014-15) |
| 7 | Pharmacists | Bachelor /Diploma in Pharmacy | 20 posts Sanctioned by NUHM (2014-15) |
| 8 | Accounts Officer | Master Degree in Commerce with 5 years experience relevant field and computer knowledge in Tally | 1 New post Sanctioned by NUHM (2014-2015) |

மேற்கண்ட மருத்துவ அலுவலர்கள், மருத்துவ சாரா பணியாளர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம், பணியாளர்களுக்கான இன்சூரன்ஸ் (Employee's State Insurance) மற்றும் பணியாளர்களுக்கான சேம நல நிதி (Employee's Provident Fund), சேவை வரி (Service Tax) மற்றும் சேவைக்கட்டணம் (Service Charges) கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது. மாத ஊதியம் அதிகபட்சம் ரூ.15,001/ பெறும் பணியாளர்களுக்கு ESI, EPF கட்டணங்கள் கிடையாது.

| **Employee's State Insurance** | | **Employee's Provident Fund** | | **Service Tax** | **Service Charges** |
|---|---|---|---|---|---|
| **Employer Contribution in the salary** | Employee Contribution in the salary | **Employer Contribution in the salary** | Employee Contribution in the salary | | |
| **4.75%** | 1.75% | **13.61%** | 12.00% | **14 %** | **5 % (approximately)** |

**Medical Officers and Paramedical staff**

| **Sl. No** | **Category of Staff** | **Minimum Salary per Month (Rs)** | **EPF (13.61%) (Rs)** | **ESI (4.75%)(Rs)** | **Service Charge (5%) approximately** | **Service Tax(14%) (1+2+3+4)** | **Total (1+2+3+4+5)** | **Required Number of Staff** | **Cost per year Rs (6x7x12)** |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** |
| 1 | Medical Officers (Full time) | 40000 | NA | NA | 2000 | 5880 | 47880 | 20 | 11491200 |
| 2 | Medical Officers (Part time) | 23000 | NA | NA | 1150 | 3381 | 27531 | 40 | 13214880 |
| 3 | Epidemiologist | 45000 | NA | NA | 2250 | 6615 | 53865 | 1 | 646380 |
| 4 | Staff Nurses | 8000 | 1089 | 380 | 400 | 1382 | 11251 | 80 | 10800960 |
| 5 | ANMs | 8000 | 1089 | 380 | 400 | 1382 | 11251 | 122 | 16471464 |
| 6 | Lab | 8000 | 1089 | 380 | 400 | 1382 | 11251 | 20 | 2700240 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Technicians | | | | | | | | |
| 7 | Pharmacists | 10000 | 1361 | 475 | 500 | 1727 | 14063 | 20 | 3375120 |
| 8 | Accounts Officer | 30000 | NA | NA | 1500 | 4410 | 35910 | 1 | 430920 |
| | Total | | 4628 | 1615 | 8600 | 26159 | 213002 | **304** | **59131164** |

எனவே,

1. அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு 1 முதல் 8 வரையில் உள்ள தேவையான மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவ சாரா பணியாளர்கள் மற்றும் இதர அலுவலர்களை தகுதி வாய்ந்த வெளிநிறுவனம் மூலம் ஓராண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்திடவும்,
2. இப்பணிகளுக்கென தோரய செலவினம் ரூ. **5,91,31,164/** க்கு நிர்வாக அனுமதியும் ,
3. இந்த பணியிடங்களுக்கு மின்னணு ஒப்பம் கோர அனுமதியும் ,
4. இச்செலவினம், சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்த செலவினத்தினை தேசிய நகர்புற சுகாதார திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியில் ஈடு செய்ய அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் கூட்டம் 19.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.42/2015ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.279/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/2621/2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 29.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.509/2015 பொருள் எண்.60**

**மண்டலம்–13, வார்டு–175–ல் உள்ள காந்தி நகர் 4–வது பிரதான சாலையினை அரசாணைப்படி "பா.இராமச்சந்திர ஆதித்தனார் சாலை" என பெயர்மாற்றம் செய்யப்பட்ட விவரம்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க சென்னை மாநகராட்சி, மண்டலம்–13, வார்டு–175–ல் 1100 மீ. நீளமும் 11 மீ. அகலமும் உள்ள காந்தி நகர் 4–வது பிரதான சாலைக்கு பா. இராமச்சந்திர ஆதித்தனார் சாலை என பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி காந்தி நகர் 4வது பிரதான சாலையானது கெனால் பாங்க் சாலையையும் துர்காபாய் தேஷ்முக் சாலையையும் இணைக்கும் முக்கிய சாலையாக உள்ளதாலும், திரு.பா.இராமச்சந்திர ஆதித்தனார் வாழ்ந்த காலகட்டத்தில் மக்களுக்கான கல்வி துறையில் மகத்தான சாதனையும், பத்திரிக்கை துறையிலும் மக்களுக்கு பயன்படும்படியான சிறந்த கருத்துக்களையும் வழங்கியவர் என்பதாலும், மேலும் காந்தி நகர் 4–வது பிரதான சாலையில் வசித்து வந்தவர் என்பது மிகவும் பெருமைக்குரியது என்பதினாலும் அச்சாலையினை "பா.இராமச்சந்திர ஆதித்தனார் சாலை" என பெயர் மாற்றம் செய்ய அரசினை கோருவதற்கு சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானம் எண்.422/2015, நாள்.03.08.2015–ல் மண்டலம்–13, வார்டு–175, பகுதி–40ல் உள்ள காந்தி நகர் 4–வது பிரதான சாலையினை "பா.இராமச்சந்திர ஆதித்தனார் சாலை" என தமிழிலும் "B. Ramachandra Adithanar Road" என ஆங்கிலத்திலும் பெயர் மாற்றம் செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசின் ஆணை வேண்டி கடிதம் அனுப்பப்பட்டது.

இதனை தொடர்ந்து, அரசாணை (நிலை) எண்.124, நாள். 12.8.2015 ஆம் நாளிட்ட அரசாணையில் அரசாணை (ப) எண்.573 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 14.12.2001–லிருந்து விலக்களித்து, சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானம் எண்.422/2015, நாள்.03.08.2015–ன்படி காந்தி நகர் 4–வது பிரதான சாலையினை "பா.இராமச்சந்திர ஆதித்தனார் சாலை" என தமிழிலும் " B. Ramachandra Adithanar Road" என ஆங்கிலத்திலும் பெயர் மாற்றம் செய்ய அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 20.08.2015 அன்று நடந்த விழாவில் "பா. இராமச்சந்திர ஆதித்தனார் சாலை" பெயர் பலகையினை திறந்து வைத்துள்ளார்கள்.

எனவே, அரசாணை (நிலை) எண்.124, நாள். 12.8.2015 ஆம் நாளிட்ட அரசாணைப்படி காந்தி நகர் 4–வது பிரதான சாலையினை "பா.இராமச்சந்திர ஆதித்தனார் சாலை" என தமிழிலும் " B. Ramachandra Adithanar Road" என ஆங்கிலத்திலும் பெயர் மாற்றம் செய்யப்பட்ட விவரம் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்திற்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 21.08.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 31.08.2015 அன்று தீர்மான எண்.280/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**தி.க.மே.பொ.ப.சா.ந.க.எண்.அ3/ 03 / 2015**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 31.08.2015 நாளிட்ட குறிப்பு**

**தீர்மான எண்.510/2015** **பொருள் எண்.61**

**திடக்கழிவு மேலாண்மை துறை – வடக்கு வட்டார அலுவலகத்தின் கீழ் உள்ள மண்டலங்களின் திடக்கழிவு மேலாண்மைத்துறை பயன்பாட்டிற்காக 1100 லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டிகள் 300 எண்ணிக்கையிலும் மற்றும் 660 லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டிகள் 3000 எண்ணிக்கையிலும் – கொள்முதல் செய்ய கோரப்பட்ட ஒப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்கள். ஏஸ்டெக் மிஷினெரி காம்பொனன்ட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தாரிடமிருந்து கொள்முதல் செய்ய அனுமதி**

சென்னை மாநகராட்சியின் எல்லைகள் 174 சதுர கிலோ மீட்டரிலிருந்து 426 சதுர கிலோ மீட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டது. விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாநகராட்சியின் வட்டார அலுவலகங்கள் செயல்பட ஏதுவாக ஜனவரி–2014ல் பெருமளவில் நிர்வாக மாற்றங்கள் செய்யப்பட்டது. முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் ஒப்புதல்படி குப்பை தொட்டிகளின் கொள்முதல் வட்டார அளவில் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

சென்னை மாநகர பகுதியில் உருவாகும் ஏராளமான குப்பைகளால் சுகாதாரக் கேடு ஏற்படா வண்ணம் உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டியது அவசியம் ஆகும். இதற்காக குப்பை தொட்டிகள் வட்டார அளவில் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் 11.06.2014 அன்று துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் தலைமையில் நடைபெற்ற சீராய்வு கூட்டத்தில் இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டிகள் தற்பொழுது சரியான முறையில் கையாளப்படுவதில்லை என்ற காரணத்தினால் அடிக்கடி சேதமடைவதாகவும், பணிகளின் போது வடிவமைப்பால் சிரமம் ஏற்படுவதாகவும், பழுதுபார்க்கும் பணிகளுக்கு தேவையற்ற செலவீனம் ஏற்படுவதாகவும், சிரமத்தை தவிர்க்கும் பொருட்டு இனி வரும் காலங்களில் இரும்பு உலோக குப்பை தொட்டிகளுக்கு பதிலாக அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் உலக தரத்தில் தரக்குறியீட்டுக்குட்பட்டு கொள்முதல் செய்து பயன்படுத்துமாறு அறிவுறுத்தினார். அதன் அடிப்படையில் மூன்று வட்டார அலுவலகங்களுக்கு 2500 எண்ணிக்கையிலான அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் உலகதரத்தில் தரக்குறியீட்டுக்குட்பட்ட ஒரு குப்பைத் தொட்டியின் விலை ரூ. 17,000/– வீதம் 2500 தொட்டிகள் ரூ. 4,25,00,000/– தோராய மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய மன்றத் தீர்மான எண். 354/2014, நாள் 26.6.2014–ளின்படி தீர்மானம் பெறப்பட்டு, வட்டார அலுவலகங்கள் மூலம் கொள்முதலை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. விரைந்து கொள்முதல் செய்வது குறித்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 11.09.2014, 05.11.2014 மற்றும் 24.2.2015 நாளிட்ட நினைவூட்டு குறிப்புகள் அனுப்பபட்டடது.

வடக்கு வட்டார அலுவலகத்தில் அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகளை கொள்முதல் செய்ய 24.10.2014 மற்றும் 14.11.2014 அன்றும் இரு முறை ஒப்பங்கள் கோரப்பட்டும் ஒப்பந்ததாரர்கள் யாரும் பங்கேற்காததால் ஒப்பங்கள் ரத்து செய்யப்பட்டது. தெற்கு மற்றும் மத்திய வட்டார அலுவலகங்களில் பிளாஸ்டிக் குப்பை தொட்டிகளை கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. வட்டார அலுவலகங்கள் மூலம் குப்பைத் தொட்டிகள் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படாத நிலையில், சில மண்டலங்களில் மட்டும் இரும்பிலான குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

வாகனங்களை பணிக்கு அனுப்புவதற்கு ( Marchout ) தடையாக உள்ள காரணங்கள் குறித்து துணை ஆணையர் (பணிகள்) மற்றும் துணை ஆணையர் (சுகாதாரம் ) ஆகியோர் முன்னிலையில் 19.02.2015 அன்று நடைப்பெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் மூன்று வட்டாரங்களை சேர்ந்த மேற்பார்வை பொறியாளர் மற்றும் செயற் பொறியாளர்கள் மற்றும் உதவி செயற் பொறியாளர்கள் வாகனங்களில் குப்பை தொட்டிகளால் அடிக்கடி ஏற்படும் பழுதின் காரணமாக இலகுரக காம்பெக்டர் வாகனங்கள் தேவையான எண்ணிக்கை மற்றும் குறித்த நேரத்திலும் March-Out செய்ய இயலவில்லை என தெரிவித்தனர்.

தெருக்களில் பல இடங்களில் குப்பை தொட்டிகள் நிரம்பி வழிவதாகவும் இதனால் சுகாதார கேடு விளைவதாகவும் ஊடகங்கள் மற்றும் செய்தி தாள்களில் சென்னை மாநகராட்சி குப்பை தொட்டிகள் குறித்து எதிர்மறை விமர்சனங்கள் வந்த வண்ணம் உள்ளது என்பதால் முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 12.03.2015 அன்று துணை ஆணையர் (பணிகள்) அவர்கள் முன்னிலையில் நடைப்பெற்ற சீராய்வுக் கூட்டத்தில் அவசர அவசியத்தை முன்னிட்டு இக்கொள்முதல் பணியினை இயந்திரப் பொறியியல் துறை மூலம் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

இயந்திரப் பொறியியல் துறையால் ஒரு வாகனத்திற்கு தோராயமாக 36 குப்பைத் தொட்டிகள் வீதம் 123 இலகுரக காம்பாக்டர் வானங்களுக்கு 4428 எண்ணிக்கையிலான காம்பாக்டர் குப்பைத் தொட்டிகள் தேவைப்படுகின்றது என்றும், ஏற்கனவே மன்றத் தீர்மான எண். 354/2014, நாள்.26.6.2014ன்படி, 2500

எண்ணிக்கையிலான அடர்த்திமிகு பிளாஸ்டிக் காம்பாக்டர் குப்பைத் தொட்டிகள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில் மொத்த தேவையான 4428ல் முதற்கட்டமாக 2500 எண்ணிக்கையிலான அடர்த்திமிகு பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகள் கொள்முதல் செய்யலாம் என இயந்திர பொறியியல் துறையால் முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 18.3.2015 நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

சென்னையில் பல பகுதிகளில் தொழிற்பட்டறைகள், மார்க்கெட் பகுதிகள் மற்றும் மக்கள் தொகை ஆகியவை அதிக அளவில் உள்ளன என்றும் இங்கு அதிக அளவில் தொழிற்சாலை கழிவுகள், மார்க்கெட் கழிவுகள் மற்றும் குப்பைகள் ஆகியவைகளை அகற்ற வேண்டிய நிலை உள்ளது என்றும் மேலும் குறுகலான தெருக்கள் அதிகம் உள்ளதால் கனரக காம்பெக்டர்களை பயன்படுத்த இயலாத நிலை உள்ளதால் இலகுரக காம்பெக்டர் வாகனங்களில் இரும்பு உலோகத்தினலான காம்பெக்டர் குப்பை தொட்டிகளை பயன்படுத்துவதால் காம்பெக்டர் வாகனங்களின் டெயில் கேட் பகுதியில் உள்ள குப்பை தொட்டிகளை தூக்கும்பகுதி (Bin Lifter Area ) உடையும் நிலை ஏற்பட்டு வாகனங்கள் அடிக்கடி பழுதாகும் நிலை ஏற்படுவதாக இயந்திர பொறியியல் துறையால் தெரிவிக்கப்பட்டது. இதனால் குப்பைகள் அகற்றும் பணி மிகவும் பாதிப்பு அடைகிறது என்றும் மேலும் கனரக காம்பெக்டர் வாகனங்கள் ( 14 CUM) –க்கு இரும்பு உலோக குப்பை தொட்டிகள் பயன்படுத்துவதால் எந்தவித பாதிப்பும் இல்லை என்று இயந்திர பொறியியல் துறையால் அக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயந்திர பொறியியல் துறை மூலம் 2500 குப்பை தொட்டிகள் மன்றத்தின் பின்னேற்ப்பை எதிர்நோக்கி கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், குப்பை தொட்டிகள் பெற காலதாமதம் ஏற்படும் என்பதால் இக்கொள்முதல் கைவிடப்பட்டது.

இந்நிலையில் மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையில் 9.5.2015 அன்று துப்புரவு பணிகள் குறித்த சீராய்வு கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் முதன்மை செயலர் / ஆணையர், துணை ஆணையர் (சுகாதாரம்), துணை ஆணையர் (பணிகள்) ,தலைமை பொறியாளர்கள், அனைத்து கண்காணிப்பு பொறியாளர்கள், அனைத்து மண்டல அலுவலர்கள், அனைத்து செயற்பொறியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் மாண்புமிகு மேயர் அவர்கள் மண்டலங்களில் போதிய அளவு குப்பை தொட்டிகள் இல்லாததால் குப்பைகள் அள்ளுவதில் தொய்வு ஏற்படுகிறது என்றும் இதனால் பொது மக்களிடமிருந்து புகார்கள் எழுகிறது என்றும் தேவையான அளவு குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யப்பட வேண்டும். அதாவது மொத்தம் உள்ள குப்பை தொட்டிகள் அனைத்தையும் மாற்றி வைக்க தேவையான அளவு கொள்முதல் செய்ய கொள்முதல் ஆணை வழங்கப்பட வேண்டும்.

ராம்கி நிறுவனத்தினரால் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்படும் மண்டலங்களில் தேவையான அளவு குப்பை தொடிகள் வைக்கப்பட வேண்டும். பழுதடைந்த குப்பை தொட்டிகள் உடனுக்குடன் அகற்றப்பட்டு புதிய குப்பை தொட்டிகள் வைக்கப்பட வேண்டும். அதிகளவில் குப்பை சேரும் இடங்களில் கூடுதல் எண்ணிக்கையான குப்பை தொட்டிகள் வைக்கப்பட வேண்டும். தேவையான அளவில் குப்பை தொட்டிகளை வைக்கப்படவில்லை என்றாலோ, பழுதடைந்த குப்பை தொட்டிகள் மாற்றியமைப்படவில்லை என்றாலோ சென்னை மாநகராட்சியால் குப்பை தொட்டிகள் வைக்கப்பட்டு அதற்குரிய தொகை ராம்கி நிறுவனத்திடருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள். துப்புரவு பணிகளை துரிதப் படுத்த காம்பாக்டர் குப்பை தொட்டிகளை உடனடியாக கொள்முதல் செய்யுமாறு அறிவுறுத்தினார்கள். இதற்கு பதில் அளித்த துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்கள் சுமார் 15,000 எண்ணிக்கையில் இரும்பு குப்பை தொட்டிகள் இரு வேறு அளவுகளில் கொள்முதல் செய்ய நடவடிக்க எடுக்க உள்ளதாக தெரிவித்தார்.

எனவே துப்புரவு பணிகள் குந்தகம் இன்றி நடைபெற, பிளாஸ்டிக் குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்வதில் மேலே தெரிவிக்கப்பட்ட இடர்பாடுகளினால் அதனை தவிர்த்து அதற்கு பதிலாக இரும்பு உலோகத்திலான குப்பை தொட்டிகள் செய்யலாம் என இக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

இயந்திர பொறியியல் துறையின் 5.6.2015 நாளிட்ட குறிப்பில், இலகுரக காம்பாக்டர் வாகனங்களில் அடிக்கடி ஏற்படும் பழுதினை தவிர்க்கும் பொருட்டு குறைந்த எடை உடைய இரும்பு குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யலாம் என இயந்திர பொறியியல் துறையால் முடிவெடுக்கப்படடதின் அடிப்படையில் இலகுரக வாகனங்கள் செல்லும் அனைத்து வழித்தடங்களிலும் 660 லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான குப்பை தொட்டிகள் கொள்முதல் செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டு, இதன் எடை சுமார் 90 கிலோ ஆகும் என்றும் இதன் மூலம் இலகுரக காம்பாக்டர் வாகனங்களின் தூக்கும்பகுதி (Bin Lifter Area ) அடிக்கடி உடைவது தவிர்க்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

